# பிறமொழிகளில் தமிழ்ச்சொல் ஆட்சி



பேராசிரியர் கோ. இராமச்சந்திரன், எம்.ஏ.,

# பிற மொழிகளில்
# தமிழ்ச்சொல் ஆட்சி

★

பேராசிரியர் கோ. இராமச்சந்திரன், எம்.ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி, காஞ்சீபுரம்.

★

வளவன் வெளியீடு,
21, கந்தப்பிள்ளை தெரு,
சேத்துப்பட்டு, சென்னை-30.

விலை ரூ. ~~2-25~~
Rs. 2.00

*முதற் பதிப்பு: ஆகஸ்டு, 1966.*
உரிமை ஆசிரியர்க்கு.

*நூல் கிடைக்குமிடம் :*

சாந்தி நூலகம்,
2/122, பிராட்வே, சென்னை-1.

கூட்டுறவு அச்சகம், காஞ்சிபுரம்.

# அணிந்துரை

தமிழ் மொழியின் தொன்மையும் வளமும் உலக அறிஞர்கள் பலரும் போற்றும் பான்மையின. அரசாட்சியிலும் வாணிகத்திலும் தமிழர்கள் பல நூற்றாண்டுகள் தலைசிறந்திருந்தமையால், தமிழ்ச்சொற்கள் பிறமொழிகளில் இடம் பெறலாயின. வடமொழியிலும் தமிழ்ச்சொற்கள் உள்ளன. இப்ரு கிரேக்கம் முதலிய தொன்மையான மொழிகளில் தமிழ்ச்சொற்கள் இருத்தல் போலவே, இன்றைய ஆங்கிலம் இந்தி முதலிய பல மொழிகளிலும் உள்ளன. அவற்றையெல்லாம் நடுநிலையினின்று ஆய்ந்து தொகுத்துத் தந்து, தக்க அறிஞர்களின் நூல்களிலிருந்து சான்றுகளும் காட்டி இந்நூலைத் திறம்பெற இயற்றியுள்ளார், காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் — துணை முதல்வர் — திரு. இராமச்சந்திரன் அவர்கள்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திராவிட இன மொழிகளில் ஒப்புமையான சொற்கள் பல உள்ளன. ஒரு மொழியிலிருந்து—தமிழிலிருந்து—மற்ற மொழிகள் கடன் வாங்கியவை அவை என்று கொள்வோர் உண்டு; மொழியியலார் வேறுபடக் கருதுகின்றனர். மூலத் தமிழ் அல்லது பழந் திராவிட மொழியிலிருந்து, இந்த இன மொழிகள் தனித்தனியே வளர்ச்சியுற்ற நிலையில் அவற்றால் பெறப்பட்ட சொற்கள் இவை என்று அவர்கள் கருதுகின்றனர். அத்தகைய சொற்களையும் இந்நூலாசிரியர் தொகுத்து இங்குத் தந்துள்ளார். கருத்து வேறுபாடு இருப்பினும், அவை ஆராய்ச்சியாளர்க்கு மிகப் பயன்படுவன ஆகும்.

பலவகைக் கருத்துக்களையும் சொற்களையும் ஆங்காங்கே நன்கு வகுத்துப் பாகுபாடு செய்துள்ளமையால், இந்நூல் கற்பார்க்குச் சுவைபட அமைந்துள்ளது. நூலாசிரியரின் நடை தெளிவும் எளிமையும் பெற்று விளங்குதல் பாராட்டத்தக்கது. இந் நன் முயற்சியைத் தமிழகம் வரவேற்பதாக.

சென்னை-30,
21—8—66.

**மு. வரதராசன்.**

# அணிந்துரை

'பிற மொழிகளில் தமிழ்ச்சொல் ஆட்சி' என்னும் பெயர் புனைந்த இந்நூல் விழுமிய தேனடை போல விளங்கு கிறது. மலர்தொறுஞ்சென்று மதுவினைக் கொணர்ந்து தனிப் பெரு முயற்சியாற்றண்டேனுக்கிப் பிறர் நுகர்ந்தின்புறப் பெட் புடன் ஈயும் தேனீமான பற்பல நூல்களைப் படித்துத் திரட்டிய தீந்தமிழ்ச் சொல்லாட்சிகளைச் சிறக்கத் தொகுத்தளித்துள்ளார் இந்நூலாசிரியர். இம்முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியது.

இந்நூலின் உரைநடை ஆற்றொழுக்காய் அமைந்து, கற்பார்க்குக் கழியுவகை விளைப்பதாய் உள்ளது. இதனைக் கற்பார், தமிழ்மொழியின் தொன்மையையும், அது கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு உள்ளிட்ட பன்மொழிக்கு அன்னையாய்த் திகழும் பான்மையையும், பண்டைத் தமிழரின் பரந்த வாணிகத்தையும், திரைகடலோடிப் புறநாடுகளுடன் தொடர்பு கொண்டு வாழ்ந்த தமிழரின் தீரத்தையும் வீரத்தை யும் இனிதுணர்ந்து இன்புறுவாரென்பது திண்ணம்.

நூல் பல பயின்ற நுண்மாண் நுழைபுலமுடையாராகிய இந்நூலாசிரியர் இத்தகைய சீரிய ஆய்வுநூல் பல்வற்றை ஆக்கியளித்துத் தமிழரை ஊக்கத் திருவருள் துணை நிற்பதாக வென வேண்டி, இக்கன்னி முயற்சியைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

சென்னை-7,
30—8—'66.

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை.

# முன்னுரை

"தெலுங்கெனில் வேறு மொழிஎன்று செப்புவர்
மலையாள மொழிஎன்று மற்றொன்று கூறுவர்
கன்னட மொழிஎன்(று) ஒன்று கழறுவர்
துளுவென ஒன்று சொல்லி யிருந்தனர்
இவையெலாம் தமிழே என்ற உண்மையை
அடிக்கடி நொடிக்குநொடி அந்தமிழ்க் கவிஞர்
எங்கணும் முழக்க மிடுதல் வேண்டும்,"

என்று பாடிச் சென்றார் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். ஆம். முழக்கமிடுவதே நல்லது.

தமிழ்மொழியின் பழமை பாரோர் போற்றும் அளவிற்குப் பொருத்தமுடையதாக அமையவில்லை; தமிழ்மொழியின் ஆற்றல் பாராட்டத்தக்க வகையில் அமையவில்லை என்றெல்லாம் எழுதியும் பேசியும் வருகின்ற அன்பர்களுக்கு வாழ இடமளித்துள்ளது தமிழ்நாடு இந்த உண்மையை ஒருவரும் மறுக்கவோ அன்றி மறைக்கவோ இயலாது.

தமிழ்மொழி ஆற்றலுடைய மொழியாக அன்று திகழ்ந்தது; இன்று திகழ்கின்றது; எதிர்காலத்திலும் திகழும். திரைகடல் ஓடித் திரவியம் தேடிய பெருமைக்கு உரியவர்களாய் வாழ்ந்தவர்கள் தமிழர்களேயாவர் அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் தமிழ்மொழிச் சொற்களைப் பிறமொழியாளர்கள் ஏற்கும் வண்ணம் மற்றவர்களோடு பழகியும் வாணிபத்தொடர்பை ஏற்படுத்திக் கொண்டும் வாழ்ந்தனர். பிறமொழிகளில் தமிழ்ச்சொற்கள் காணப்படுகின்றன என்பதே, தமிழர்கள் வேற்று நாட்டவர்களுடன் வாணிபத்தொடர்பு கொண்டு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நாகரிகமுடன் வாழ்ந்தனர் என்னும் வரலாற்று உண்மையை வலியுறுத்தப் போதிய சான்றாகும். அத்தகைய சொற்களையெல்லாம் திரட்டி நூல் வடிவிலே வெளிப்படுத்தினால் மாணவர்கள் பயனடைவர்—தமிழ்மொழி சிறக்க அவர்கள் பாடுபட முடியும்—என அன்பர்கள் சிலர் தெரிவித்தனர். அவர்கள் அளித்த ஊக்கமே

இந்தநூல் தோன்றுவதற்குத் துணையாக நின்றது. தமிழகம் இந்த நூலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுமாயின் நூல்கள் பல மேலுந்தோன்ற வழிகோலிவிடும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கட்டுரைகளையெல்லாம் தம்முடைய இதழ் "குத்தூசி" வாயிலாகப் பகுத்தறிவுவாதியாய் விளங்கிய சா. குருசாமி அவர்கள் வெளியிட்டு வந்தார். நூல் வடிவில் அவற்றைத் தொகுத்து வெளியிட ஒப்புதலைத்தந்து மறைந்துவிட்ட அப்பெரியாரின் குடும்பத்தினருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன்.

சென்னைப் பல்கலைக் கழகக் தமிழ்த்துறைப் பேராசிரியரும் மதிப்பிற்குரிய என்னுடைய ஆசிரியருமாய் விளங்கும் டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் அரிய முறையில் அணிந்துரையை வழங்கி வாழ்த்தியுள்ளார். அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சிந்தாமணிச் செல்வர் மே வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் அணிந்துரையை வழங்கியதோடு குறைகளைக் களைந்தும் ஒப்புநோக்கியும் நூல் வெளிவர உதவி செய்தார். அவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கல்லூரி இதழில் வெளியான "தமிழ்" என்னும் கட்டுரையை நூலில் சேர்த்துக்கொள்ள அனுமதியளித்த கல்லூரி முதல்வர் பேராசிரியர் சி. சிவசுப்பிரமணியன் அவர்களுக்கும், நூலை அச்சிட்டுக்கொடுத்த காஞ்சீபுரம் கூட்டுறவு அச்சகத்தினருக்கும் நன்றியை அறிவித்துக் கொள்ளுகிறேன்.

காஞ்சீபுரம்,
31—8—'66.

கோ. இராமச்சந்திரன்

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ் | .... | 9 |
| 2. | ஆங்கில மொழியில் தமிழ்ச்சொற்கள் | .... | 22 |
| 3. | வடமொழியில் தமிழ்ச்சொற்கள் | .... | 27 |
| 4. | தெலுங்கு மொழியில் தமிழ்ச்சொற்கள் | .... | 40 |
| 5. | கன்னட மொழியில் தமிழ்ச்சொற்கள் | .... | 51 |
| 6. | மலையாள மொழியில் தமிழ்ச்சொற்கள் | .... | 65 |
| 7. | பல மொழிகளில் தமிழ்ச்சொற்கள் பகுதி–I | .... | 83 |
| 8. | பல மொழிகளில் தமிழ்ச்சொற்கள் பகுதி–II | .... | 96 |
| 9. | கருத்துரைகள் | .... | 107 |


★

# 1. தமிழ்

தோற்றம் :

'தமிழ்' என்னும் சொல் எவ்வாறு தோற்றுவிக்கப் பட்டது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? எவ்வளவு காலத்திற்கு முன்பு தோற்றுவிக்கப்பட்டது? என்னும் கேள்விகளுக்கு இன்று வரையிலும் தக்க விளக்கத்தினை ஒருவராலும் காண இயலவில்லை. இதுவரை வெளியிடப்பட்டுள்ள கருத்துகள அவரவர் தம் கருத்தளவில் சிறப்புடையனவாகக் கொள்ளப்பட்டுக் கட்டுரைகள் வாயிலாகத் தெரிவிக்கப் பட்டுள்ளன. 'தமிழ்' என்னும் சொல் தமிழ் மொழியைக் குறிக்கும் எனப் பலரும், தமிழகத்தைக் குறிக்கும் எனச் சான்றோர்களும், தமிழரைக் குறிக்கும் (தமிழர் இனம்) எனச் சிலரும் தெரிவித்துள்ளனர். மூன்றெழுத்துச் சொல்லைத் தாம் விரும்பியவாறெல்லாம் சிலர் சிதைத்தும் பிரித்தும் பொருள் கூறியுள்ளனர். "'திரா (வி)டம்' என்னும் வழக்கே காலப் போக்கில் தமிழ் என மாற்றி வழங்கப்பட்டதாகும்," எனக் கேட்போர் வியக்கும் வண்ணம் சிலரும்; சூரியன் எவ்வாறு உயிர்களுக்கு இன்றியமையாத கோளமாய் அமைந்துள்ளதோ, அவ்வாறே மக்களுக்கு (தமிழருக்கு) இன்றியமையாத மொழியாய் விளங்குவதே 'தமிழ்' ஆகும்," எனச் சிலரும் கூறியுள்ளனர் புலவர் பெருமக்களைப் பலகாலும் எண்ணிப் பார்க்குமாறு ஊக்குவித்த பெருமைக் குரிய இந்தச் சொல்லைப் பற்றிக் கூறப்பட்டுள்ள விளக்கங் கள், மேன்மேலும் தமிழரை ஆராய்ச்சியில் நாட்டங்கொள் ளச் செய்யும் வகையில் தூண்டுகோல்களாய் அமைந்து பயனளித்து வருகின்றன. இந்தச் சொல்லைப்பற்றிய அத்தகைய விளக்கங்களே கட்டுரையில் இடம்பெறுகின்றன.

அவை தமிழ் மொழியின் பழமையையும் ஆற்றலேயும் தனித் தியங்கும் தகுதியையும் உணர்த்த வல்லவைகளாம்.

சொல்லும் பொருளும் (வியப்பிற்குரிய விளக்கங்கள்):

1. நமது பாராட்டிற்குரியவரும் தமிழ்த் தொண்டரு மாக விளங்கிய காலஞ்சென்ற பெரியார் திருமணம் செல்வக் கேசவராய முதலியார் அவர்கள், 'தமிழ்' என்னும் தமது நூலில், "தமிழ் என்கிற வார்த்தையின் உற்பத்தி" (தோற் றம்) பற்றிய விளக்கங்கள் சிலவற்றைக் குறித்துச் சென்ற னர். அவை பின்வருவன:

(1) "ஓதற்கண் செவிக்கின்பம் மனக்கின்பம் பயக் கின்ற இந்தப் பாஷைக்கு, 'இனிமை' எனப்பொருள் படும் தமிழ் எனும் தமிழ் மொழியே காரண இடுகுறியாக வழங்க லாயிற்றென்பர் சிலர்.

(2) 'தென்' என்பது அழகு என்னும் பொருளில் வழங்குவதைக் கொண்டு, தென்மொழி என்பது 'தெம் மொழி-தெமொழி-தமிழ்' என மருவி வழங்குவதாயிற்று, என்பர் சிலர்.

(3) சென்னைத் துரைத்தனக் கலாசாலேயில் வட மொழிப் புலமை நடாத்திய ஆப்பர்ட்டு (Gustav opert) என்பவர், "இந்திய நாட்டில் முற்காலத்து மள்ளர் எனப் படுவார் ஒரு கூட்டத்தினர்; அவர்கள் பாஷை மள்ளம் என்பது; அது திரு என்னும் அடை கொண்டு திருமள்ளம் என்பதாக, அதனடியில் 'திரமிளம்-தமிழ்-திரவிடம்' என் பன பிறந்தன என்பர்"-(பக்கங்கள் 9—10).

2. தமிழ் இலக்கியங்களில் காணப்படும் 'தமிழ்' என் னும் சொல் 'இனிமை' என்னும் பண்பை உணர்த்தும் வண்ணம் சில இடங்களில் அமைத்துக் காட்டப்பட்டுள்ளது. 'தேனுறை தமிழ்' எனவும்; 'தமிழ் தழீஇயசாயல்' எனவும்; 'தமிழெனும் இனிய தீஞ்சொல் தையல்' எனவும்; 'இனிமை யும் நீர்மையும் தமிழெனலாகும்' எனவும்; 'ஊறுமின்றமிழ்' எனவும் குறிக்கப்பட்டுள்ள தொடர்கள் எல்லாம் இனிமை என்னும் பண்பையே 'தமிழ்' என்னும் சொல் குறிக்கும் வண்ணம் வழங்கப்பட்டுள்ளன.

ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதிய மேலைநாட்டு அறிஞர் கால்டுவெல் என்பவர் தமிழ் என்னும் சொல் 'இனிமை' என்னும் பண்பை உணர்த்துவதற்காகவே தோற்றுவிக்கப்பட்டது ஆகும் என்ற கருத்தை மறுத்துரைக்கின்றார். மேலும், சொல்லின் தோற்றத்தைப் பற்றிய முடிவைத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் சேரர், சோழர், பாண்டியர் என்னும் பெயர்களின்–பிரிவுகளின்–பொருளை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்* எனக் குறிப்பிடுகின்றார்.

3. காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் K. N. சிவராசப் பிள்ளை என்பவர், "'தமிழ்' என்னும் சொல்லிற்கு அழகு (அழகுடையது), இணையற்றது, தனிமை (தனிமையானது) என்ற பொருள்களைப் பல ஆசிரியர்கள் குறித்துள்ளனர் என்றாலும் அவற்றை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை," எனத்தாம் எழுதிய கட்டுரையில் ('The Derivation of the word Tamil') குறித்துச் சென்றார். அவர்தம் கருத்துகள் வருமாறு:—

"The other three theories coming under the Semantic class are all more or less allied to the one noted above. Pupala Pillai, the author of *Tamil Varalaru* (தமிழ் வரலாறு) takes Tamil to mean beauty (அழகு) i. e., a language which has all the elements of natural beauty in it, what ever that may mean. The Commentator of *Virasoliam* (வீரசோழியம்) and the late Damodaram Pillai interpreted Tamil as derived from the root தமி meaning incomparable, the unique, and carrying with it the meaningless suffix ழ் as in such words as இமிழ், உமிழ், குமிழ் etc. A slightly varied version of this is that of a modern school which interprets தமி the root of தமிழ், as "solitary" (தனிமை) i.e.- unconnected with any other family of languages in the world. All these derivations are surely highly flattering; but one and all of them suffer from the defect

* 'Comparative Grammar of Dravidian Languages,' page 11.

which characterises the sweetness theory, and are, on that account, absolutely valueless from the stand point of sober philology "

4. சமயப் பற்றுக் கொண்ட அன்பர் சிலர் மொழி ஆராய்ச்சி பற்றிய எண்ணம் சிறிதுமற்றவராய்த் தாம் விரும்பியவாறெல்லாம் 'தமிழ்' என்னும் சொல்லைச் சிதைத்துப் பொருள் கூறியுள்ளனர். அத்தகையோர் சொல்லைச் சிதைத்துப் பொருள் கொள்ளும் முறையும், சொல்லின் தோற்றத்தை ஆராயும் முறையும், வேறு பலர் இந்தச் சொல் பற்றிக்கூறும் விளக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன:

(1) 'தமிழ்' என்னும் சொல் த் + அ + ம் + இ + ழ் என்னும் ஐந்து ஒலிகளால் ஆக்கப்பட்டது. ஐந்து ஒலிகளும் பஞ்சாட்சரத்தின்—ஐந்தெழுத்துக்களுக்குரிய—கடமைகளை ஆற்றும் (பொருளைத்தரும்) இயல்புடையன. எனவே 'தமிழ்' என்னும் சொல் பஞ்சாட்சரத்தின் சிறப்பை உணர்த்தத் தோன்றியதே ஆகும் என ஒரு பிரிவினரும்,—

(2) ஆடவர் பெண்டிரைக் கொண்டதே மக்கட் சமுதாயம். அது போலவே 'தமிழ்' என்னும் சொல் ஆண் எழுத்துப் பெண் எழுத்துக்களைக் கொண்டு விளங்குவது ஆகும் எனச்சிலரும்,—

(3) 'தமிழ்' என்னும் சொல் இதனுடைய தெய்வத் தன்மை பொருந்திய தோற்றத்தைக் குறிப்பிடுவது ஆகும் என ஒரு சாராரும் —

(4) மூன்று வகையான ஒலிகளைக் குறிக்கும் சொல்லே—அதாவது வல்லோசை, மெல்லோசை, இடைப்பட்டுள்ள ஓசைகளைக் குறிப்பதற்கென அமைக்கப்பட்ட சொல்லே—பெயரே—தமிழ் என்பதாகும் எனப்பிறரும்,—

(5) 'தாமம்' என்னும் சொல் ஞாயிற்றைக் குறிக்கும். ஞாயிறு உலக உயிர்கள் வாழ எவ்வாறு துணை செய்கின்றதோ, அவ்வாறே மக்கள் கருத்துகளைத் தெரிவித்துக் கொள்ளத் துணை செய்ய வல்லது (இன்றியமையாதது) 'தமிழ்' என்னும் சொல்லே ஆகும் என மொழி நூல் ஆசிரியர் கார்த்திகேய முதலியார் அவர்களும்,—தம்முடைய விளக்கங்களைத் (கருத்துகளை) தெரிவித்துள்ளனர்.

விளக்கங்களுக்குரிய காரணங்கள் :

மேற் கூறியவாறெல்லாம் மனம் போன போக்கில் 'தமிழ்' என்னும் சொல் பற்றிப் பிறர் கூறுவதற்குரிய விளக்கங்களை — காரணங்களைப் — பேராசிரியர் சிவராசப் பிள்ளை அவர்கள் நான்கு வகைகளாகப் பிரித்தமைத்துக் காட்டினர். அவை,

(i) Derivations due to the consideration of the Phonetic decay of the word 'Tamil'.

(ii) Derivations due to the application of semantics to the word 'Tamil'.

(iii) Derivations due to religious motives.

(iv) Derivations due to mystical and symbolic motives, என்பன ஆகும்.

Hewitt என்பார் 'வட இந்தியாவின் முந்திய வரலாற்றுக் குறிப்புகள் என்னும் தம்முடைய நூலில், "ஆரியர் திராவிடக் குழுவினரைக் குறிப்பிட்ட பொழுது அக்குழுவினர்தம் மூலப்பெயர்களை* ஆரியப் பொருள் வழக்கு அமையும்படி வேண்டுமென்றே சிதைத்து — மாற்றி — வழங்கி விட்டனர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்," எனத் தெளிவுபடக் குறித்துள்ளார். மேலே கூறப்பட்ட காரணங்களேயன்றி இந்தக்காரணமும் ஓர் அளவு ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது.

மொழியின் தொன்மை பற்றிய விளக்கங்கள் :

" 'தமிழ்' என்னும் சொல் மொழியை எவ்வாறு குறிக்கும்? இதனுடைய ஆற்றல் எத்தகையது?" என்பவை பற்றிய கருத்துகளையும், இதன் தொன்மை, சிறப்பு, வளர்ச்சி முதலியவை பற்றிய கருத்துகளையும் பலர் பல காலங்களில் தெரிவித்து வந்தனர். ஆராய்ச்சி அறிவு (மொழிபற்றியது) தமிழகத்தில் படிப்படியாக வளர்ச்சியுற்ற முறையை அவர்தம் கருத்துகள்—விளக்கங்கள்—தெளிவாகக் காட்டுகின்றன. விளக்கங்கள் வருமாறு :

* "Notes on the Early History of Northern India," page 216 by Hewitt (from 'Tamil culture,' page 51; vol VII No. 1; Jan, 1958).

(1) "திராவிட மொழிகளில் பழமையுடையதும் வளமுடையதும் திட்டமாக (நுட்பமுடன்) அமைக்கப்பட்டதும் ஆகிய மொழி தமிழே ஆகும். அது நிறைந்த அளவு சொல் தொகுதியைப் பெற்று விளங்குவது; நெடுங்காலத்திற்கு முன்னரே பண்படுத்தப்பட்டது. 'கொடுந்தமிழ்' (கொச்சைத் தன்மை வாய்ந்த) என்னும் பேச்சு–வழக்கு–மொழியினின்றும் வேருக வழங்கப்படும் 'செந்தமிழ்' (நிறைவுடையது) என்னும் ஏதோ ஒரு வகையான செயற்கை (செய்யுள் வழக்கு) மொழியில் காணப்படும் இலக்கிய நூல்களை ஏராளமான அளவில் அது பெற்றுத் திகழ்கிறது. அன்றியும் குறிக்கப்பட வேண்டாதனவாய சில பேச்சு வழக்கு மொழிகள் மாத்திரம் எழுத்து மூலமாய்ப் பதிந்து (அமைத்து) கொள்ளப்பட்டன. 'தமிழ்' என்னும் பெயரும் 'திராவிடம்' என்னும் சொல்லும் 'திரமிடம்' என்னும் மூல வழக்கின் சிதைவுகளேயாம் தமிழ் மொழி தனக்கென நெடுங்கணக்கைப் பெற்று விளங்குவதாகும்.* "

2. தமிழ் மொழித்தோற்றம் பற்றிய விளக்கம்:-




* 'The Ethnology, Language, Literature and Religions of India' Reprinted from the third edition of the Imperial Gazetteer of India, page 380 (1912).

° "Studies in Proto-Indo-Mediterranean culture," page 158, Vol I, 1953-By Rev. Heras., S. J.

3. "திராவிடம் என்பது தமிழுக்குப் பிறிதொரு பெயராக வழங்குகின்றது. தமிழ் ழகரத்தை உச்சரிக்க வறியாத ஆரியர் தமிழ் என்னுஞ் சொல்லைத் திராவிடம் என வழங்கினர். 'நகைச்சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறுந் தமிழும் குருடரும் முடவரும் செல்லுஞ் செலவும்...... போல்வன,' என்னும் பேராசிரியர் உரை, ஆரியர் திருத்தமுறத் தமிழ் பேச அறியார் எனப் புலப்படுத்துகின்றது †."

மொழி நூல் வல்லுநராய் விளங்கும் பெரியார் திரு. சுனித் குமார் சட்டர்ஜி அவர்கள் தமிழரின் தொன்மையைப்பற்றிய கருத்துகளைத் தாம் வரையறை செய்து கொண்ட முறைப்படியே விளக்கமாகத் தெரிவித்துள்ளார்.

4. "தமிழ் மொழியின் வளர்ச்சி பின்வரும் கால் வழியே* (முறைப்படியே) நெடுகிலும் இருந்து வந்துள்ளது என எண்ணிப் பார்ப்பதே முற்றிலும் பொருத்தமானதாக அமைகிறது: நாகரிக முதற்படியிலுள்ள திராவிடம், ஏறக்குறைய 1500 கி மு > தென் திராவிடம், ஏறக்குறைய 600 கி. மு. > பண்டைத் தமிழ், ஏறக்குறைய 300 கி. மு.—400 கி. பி > நிலைமை மாற்ற காலம், 400 — 600 கி. பி. > பழைய தமிழ் அல்லது செந்தமிழ், ஏறக்குறைய 600 கி பி—1350 கி. பி (தொன்மையான சங்க இலக்கிய மூல நூல்கள் இன்று நாம் பெற்றுள்ள செந்தமிழ் நூல்களின் நிலைக்கு படிப்படியாக மாற்றப்பட்டன) > இடைக்காலத் தமிழ், ஏறக்குறைய 1350 — 1800 கி. பி. > புதிய அல்லது தற்காலத் தமிழ், 1800-க்குப் பின்னர்."

5. "The base of Tamil, the most highly cultivated as regards its original structure of all the Dravidian languages, has an independent origin. In its more primitive words, such as the names of natural objects, the verbs expressive of physical action or passion, and the numerals, it is unconnected with Sanskrit.‡"

† "தமிழகம்," பக்கம் 56; ந. சி. கந்தையா பிள்ளை (1955).
* "Tamil culture," page 73; Vol V, No. 2; April 1956.
‡ "The Ancient Dravidians," pp 38-39; By T. R. Sesha Iyengar

6 "தமிழ் நாடு வரலாற்றுக்கு முற்பட்ட மிகப் பழங்காலம் முதல் கிளைவ் கோட்டை பிடித்த காலம் வரை தமிழ் மொழியே ஆட்சி மொழியாகக் கொண்டு விளங்கிய நாடாகும். இவ்வளவு நீண்ட காலம் — மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட நெடுங்காலம்-தொடர்ந்து ஒரே மொழி ஆட்சி மொழியாக இருந்து வந்ததை உலக வரலாற்றில் வேறு எங்கும் காண்பதற்கு இல்லை. இந்த நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ் மொழி பண்பட்ட பழம்பெருந்தாய்; இந்த நாட்டின் அமைதிக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் கலை மேம்பாட்டிற்கும் காரணமாக இருந்து இதை வளர்த்துப் போற்றிய நல்ல தாய்.§"

7. "இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என நமது தாய்ப் பாஷையாகிய தமிழானது மூவகையால் நமது முன்னோரால் பிரிக்கப்பட்டது யாவரும் அறிந்த விஷயமே.†"

சொல்லும் பொருளும்:

8. "தமிழ்: இனிமை, Sweetness, pleasantness, melodiousness.
ஓர் பாஷை, the Tamil Language.
நீர்மை, nature, state, quality, property."
(தமிழ்–ஆங்கில அகராதி–N. விசுவநாதப்பிள்ளை)

9. "The great antiquity of Tamil, which is the one worthy rival of Sanskrit, is abundantly plain.

The ancient grammatical works existing in Tamil, and its wonderful metrical system, prove its assiduous cultivation for long ages. An elaborate scientific series of metres, such as Tamil glories in, adapted to every style and theme of composition, is the greatest of centuries.°"

§ "மொழிப்பற்று," பக்கம் 64; டாக்டர் மு. வரதராசனார்.
† நாடக ஆசிரியர்—பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் கருத்து.
° "Naladiyar," Introduction, page XVI; By G. U. Pope (1958).

10. "யவனர்க்கும் தமிழ் மன்னர்க்கும் இருந்த உறவும், அங்கும் இங்கும் ஒற்றர்களும் மெய்க்காப்பாளர்களும் தங்கியிருந்ததும் தமிழ் நூல்களில் வெள்ளிடை மலை போல அறியக்கிடக்கின்றன. யவனர் முதலிய தமிழ்ச் சொற்கள் தமிழ் நூல்களில் நுழைந்ததும், தோகை முதலிய தமிழ்ச்சொற்கள் துகி முதலிய சொற்களாக மருவி ஹீப்ரு முதலிய மொழிகளில் நுழைந்ததும் ஆராயத் தக்கன.*"

இலக்கிய வழக்குகளின் துணைகொண்டு
தமிழ் என்னும் சொல்லின் பொருளைக் காணுதல்:

1. சங்க இலக்கியங்களில் காணப்படும் 'தமிழ்' என்னும் (சொல்) வழக்கு, தமிழரையும் (வீரரையும்), தமிழகத்தையும், தமிழ் மொழியையும் குறிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்தச் சொல் மூன்று பொருள்களையும் குறிக்கும் வண்ணம் செய்யுள் வழக்கில் இடம் பெற்று விட்டிருக்கிறது. கீழ்க்காணும் சான்றுகள் இந்தக் கருத்தை வலியுறுத்துவனவாம்.

" தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை," (சிறுபாண் அடி 66-67)
[தமிழ் = தமிழ் மொழி]

என நல்லூர் நத்தத்தனாரும்,

" அதூஉஞ் சாலுநல் தமிழ்முழு தறிதல்
அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே," (புறம் 50) [தமிழ் = தமிழ் மொழி]

எனப் புலவர் மோசிகீரனாரும்,

" தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானம்," (புறம் 19)
[தமிழ் = வீரர், தமிழர்]

எனக் குடபுலவியனாரும்,

" தமிழ் கெழு மூவர் காக்கும்
மொழி பெயர் தேஎத்த பன்மலை," (அகம் 31)
[தமிழ் = தமிழ் நாடு]

என மாமூலனாரும்,

* 'கட்டுரை', "தமிழ் நாடு," திரு. வி. க.

"தமிழகப் படுத்த இமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநா ளிருக்கை," (அகம் 227)
[தமிழ் = தமிழ் நாடு]

என நக்கீரரும்,

"சிறுயிலை யுழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்துக்
குன்றுநிலை தளர்க்கும் உருமிற் சீறு," (பதிற்று 63)
[தமிழ் = தமிழ்ப்படை, வீரர்]

எனக் கபிலரும் குறித்துச் சென்றனர்.

2 தமிழ்க் காப்பியங்களை இயற்றிய இளங்கோவடிகளும் சாத்தனாரும் 'தமிழ்' என்னும் சொல்லைப் பயன்படுத்தித் தெரிவித்துள்ள பொருள்களைக் கீழ்காணும் அடிகள் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம்:

இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில்,

"பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்
கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது, (காட்சிக்காதை)
[தமிழ் = தமிழ் வீரர்]

எனவும்,

சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலையில்,

"மாவண் தமிழ்த்திறம் மணிமே கலைதுறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்." (பதிகம்)
[தமிழ் = தமிழ் மொழி, தமிழ் இலக்கணம்]

எனவும் குறித்தனர்.

3. பல்லவ மன்னவர்கள் காலத்தில் வாழ்ந்து ஈசனின் இயல்பையும் சைவ நெறியின் சிறப்பையும், செந்தமிழ்ப் பாடல்கள் வாயிலாகத் தமிழருக்குத் தெரிவித்த சமயகுரவர் நால்வரும்; திருமாலின் சிறப்பைப் பாடியதோடு வைணவத்தின் பெருமையைத் தெரிவித்த ஆழ்வாராதியரும், 'தமிழ்' என்னும் சொல்லைப் பயன்படுத்திப் பின்வருமாறு தமது கருத்துகளைத் தெரிவித்துச் சென்றனர். மாணிக்கவாசகர்,

"உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண்
தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ," (திருக்கோவையார்)

எனவும்;

திருநாவுக்கரசர்,

"பன்னியசெந் தமிழறியேன் கவியென் மாட்டேன்
எண்ணொடு பண்ணிறைந்த கலைகளாய,"
"தமிழோ டிசை பாடல் மறந்தறியேன்," (தேவாரம்)

எனவும்;

திருமங்கை ஆழ்வார்,

"அருள்கொண் டாயிர மின்தமிழ் பாடினன்
அருள்கண் டீரிவ் வுலகினில் மிக்கதே,"
(கண்ணிநுண் சிறுத்தாம்பு)

எனவும். 'தமிழ்' என்னும் பெயர் — சொல் — வாயிலாக உணர்த்திச் சென்ற கருத்துகளைத் தெரிந்துகொள்ள இயலுகின்றது.

4. இனிய தமிழ்ப் பாடல்களை இயற்றி அடியார்தம் சிறப்பியல்புகளைப் பல காலும் தமிழர்கள் எண்ணும் வண்ணம் செய்த சேக்கிழார், தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் பல இடங்களிலும் 'தமிழ்' என்னும் சொல் கொண்டு தமிழ் மொழியையும், அதன் சிறப்பியல்பையும் தவறாமல் உணர்த்திச் சென்றுள்ளார்.

"தென் றமிழ்ப் பயனா யுள்ள திருத்தொண்டத் தொகை
முன்பாட,"
"நச்சி யின்றமிழ்ப் பாடிய ஞானசம் பந்தர்,"
"திருப்பதிகச் செந் தமிழின் திறம்போற்றி மகிழ் வுற்று,"
"செந்தமிழ் ஞானசம் பந்தர் திறங்கேட்டு,"
"மெய்ப்பு றத்தி லுறுப்ப ழிந்தபின் மெல்ல வுந்து முயற்சியுந்
தப்பு றச்செய லின்றி யந்நெறி தங்கி னார்தமி ழாளியார்,"

எனச் சேக்கிழாரால் பாடப்பட்டுள்ள தொடர்கள் தமிழ் மொழியின் நீர்மையை உணர்த்த வல்லனவாம்.

5. தமிழ் மொழியின் மீது தணியாத பற்றுக்கொண்டு வாழ்ந்த பேராசிரியர் P. சுந்தரம் பிள்ளையவர்கள், 'மனோன் மணீயம்' என்னும் நாடக நூலில்,

"எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே,"
"தண் டமிழ் மொழியால் மறித்திக் காலம்
ஆற்றில ..................... துணிபவர் யாவர்?"

எனத் 'தமிழ்' என்னும் சொல்கொண்டு தமிழ் மொழியின் சிறப்பியல்பைக் குறிப்பிட்டார்.

6. "தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்," எனப் பாரதியாரும் கூறிச்சென்றார்,

பொருட்பொருத்தம்:

உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இடம் பெற்றுள்ள 'தமிழ்' என்னும் சொல், தமிழரையும் (தமிழ் வீரரையும்), தமிழ் மொழியையும், தமிழ் நாட்டையும் குறிக்குமாறே பல இடங்களில் வழங்கப் பட்டிருக்கின்றது. சமயச் சார்பாகத் 'தமிழ்' என்னும் சொல்லின் பொருளையும் தோற்றத்தையும் ஆராய்வதாகக் கூறுவதும்; 'தமி' என்னும் சொல்லே காலப்போக்கில் 'தமிழ்' என மாற்றி வழங்கப்பட்டது எனக்கூறுவதும் பொருந்தா முடிபுகளாகவே காணப்படுகின்றன. மக்களுக்கு அல்லது ஓர் இனத்திற்கென ஒரு பெயர் இல்லாமலிருந்தது என்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள இயலாதோ, அவ்வாறே அவர்கள் பேசிய மொழிக்கு (ஒரு) பெயரே அன்று குறிக்கப்படவில்லை என்ற கருத்தையும் ஏற்றுக்கொள்ள இயலாது. எனவே, ஒரு பெயர் — ஒரு வழக்கு — முதலில் மக்களைக் குறிக்கப் பயன் படுத்தப் பட்டிருக்க வேண்டும். அடுத்த நிலையில் அவர்கள் பேசிய மொழியைக் குறிக்க அந்தச் சொல் பயன் படுத்தப்பட்டிருக்க வேண்டும். 'தமிழ்' என்னும் சொல்லுக்கும் மேற்காட்டியவாறு பொருள் கொள்ளுவதே பொருந்தும். மொழி நூல் வல்லார் கூறும் நியதிப்படி ஒரு பெயர் அல்லது சொல் மிகப்பழைய காலத்தில் ஓரினத்தவரையே குறிக்க முதன் முதலில் பயன்

படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்னும் உண்மை, இன்றைய ஆராய்ச்சிக் கண் கொண்டு பார்த்தாலும் பொருந்துவதாகவே அமைந்துள்ளது.

முடிபு:

நெடுங்காலத்திற்கு முன்பே தென்னிந்தியாவுடன் வாணிபத் தொடர்பு கொண்ட மக்களும், இலக்கண, சரித்திர சம்பந்தமான நூல்களைச் செய்த சான்றோர்களும் குறிக்கும் (காட்டும்), 'Damilo—Damida—Damirike—Damulica — Tamulica — Tamoule — Tamulicam — Damila—Davila--Dramida--Dramidaka--Dramilas—Damilas--Tchi-mola or Tchi-mo-lo—Lingua Damulia' ஆகிய சொற்களும் வழக்குகளும் தவறுடையனவா? இவை தமிழரையும் தமிழையும் தமிழகத்தையும் குறிப்பிடமாட்டாவா? இவை பற்றிச் சான்றோர் (மொழிப்பற்றுக் கொண்ட தமிழர்) மேலும் ஆராய்ந்து விளக்கங்களைத் தரக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

"இனித் 'திராவிடம் என்னும் ஆரிய மொழியே தமிழ் என மரீஇயது.' என்பார் கூற்றும் பலர்க்கும் உடன்பாடாவதில்லை. 'த்ராவிடம்-த்ரவிடம்-த்ரமிடம்-த்ரமிளம்-தமிளம்-தமிழ்' என மரூஉவின் முறை காட்டி மயக்கஞ் செய்கின்றவர்களை நோக்கி, 'அற்றன்று; தமிழ் என்பதை உச்சரிக்க இயலாத ஆரியர்கள், 'தமிள்-தமிளம்-த்ரமிளம்-த்ரமிடம்-த்ரவிடம்-த்ராவிடம்' எனத் தம்மில் மரூஉ வகை செய்வாரயினர்' என வாதுக்கழைப்பார்,"—என்று தமிழர்களின் சார்பில் தமது முடிபை—கருத்தை—மிக நாகரிகமான முறையில் தமிழ்ப் பெரியார் திருமணம் செல்வக் கேசவராய முதலியார் முன்பே குறித்துச் சென்றார். இன்றுள்ள நிலையில் இந்த விளக்கம் பெரிதும் பொருந்துவதாய் அமைந்துள்ளது. இந்த முடிவை ஏற்றுக்கொள்ளத் தமிழ்ச் சான்றோர்கள் தயங்கமாட்டார்கள் என்றே கொள்ளுதல் வேண்டும்.

# 2. ஆங்கில மொழியில் தமிழ்ச்சொற்கள்.

தமிழ் மொழியின் பழமையையும் தமிழரின் நாகரிகச் சிறப்பினையும் அறிந்துகொள்ளப் பெரிதும் துணை செய்வது பண்டைத் தமிழர் வாணிபமேயாகும் என்பது மிகை யாகாது. ஆங்கிலேயர் வாணிகத்தின் மூலம் பொருளைத் திரட்டவே தமிழ் நாட்டிற்கு வந்தனர். முன்பு அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல் முறைகள், வளர்ச்சி ஆகிய யாவும் மேற்கூறிய உண் மையை உறுதிப்படுத்துகின்றன. இன்றைக்கும் E. C. M. என்னும் சந்தையின் (ஐரோப்பியப் பொது வாணிகக்களம்) மூலம் பொருள் வளத்தைப் பெருக்க ஆங்கில அரசு பிற நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதை நாம் காண்கிறோம். அறிவியல் (Science) வளத்தாலும், வாணிக வளத்தாலும், தொழில் துறை வளத்தாலும் விரைவாக வளர்ச்சியுறும்—முன்னேற்றமடையும்—நாடுகளே இன்று உலக அரங்கில் சிறப்புடைய நாடுகளெனப் பாராட்டப் படுகின்றன.

தமிழ் நாட்டோடு வாணிகத் தொடர்பு கொண்ட மேலை நாட்டு வணிகர்கள், தங்கள் மொழிகளில் தமிழ் நாட்டுப் பொருள்களைக் குறிப்பதற்குரிய பெயர்கள் இல் லாத காரணத்தால், தமிழ்ச் சொற்களையே ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களானார்கள். பல சொற்கள் தமிழ் மொழி யினின்று நேராகவும், சில சொற்கள் மலையாளம், தெலுங்கு, ஈபுரு மொழிகள் மூலமாகவும் இரவல் சொற்களாக ஆங் கிலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதனால், ஆங்கிலம் வளமுடைய-செழிப்பிற்குரிய-மொழியாக மாறிவிட்டது.*

* "In the matter of enriching the English language, trade has played a more important part than conquest or colonisation. The merchant adventurer holds an important place in the history of the English language. Usually new words first come into the spoken language and then they percolate into the written language also."

"Some Dravidian loan-words in English"—C. R. Myleru 'Tamil Culture', Vol-1. No. 2, page 143.

இந்த உண்மையை விளக்குவதற்கெனவே தமிழ் மொழியினின்று ஆங்கிலத்தால் பெறப்பட்ட சொற்களின் பட்டியலும் பிற விளக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன :

| தமிழ்ச்சொல் | ஆங்கிலச்சொல் | பொருள் விளக்கம் | மேற்கோள் * |
|---|---|---|---|
| 1. அடைக்காய் (பாக்கு) | Areca | Genus of Palms. | from Tamil adaikay, adai = close clustering, kay = nut (page, 56) |
| 2. வண்டி | Bandy | Indian cart or buggy. | from Telugu bandi (p-84) |
| 3. வெற்றிலை (மெல்லிலை) | Betel | Leaf of piper betel. | from Malayalam vettila (p-105) |
| 4. காசு | Cash | A small coin. | Ultimately from Tamil Kasu (p-171) |
| 5. கட்டுமரம் | Catamaran | Raft or float of logs tied side by side | from Tamil Katta-maram (p-174) |
| 6. சுருட்டு | Cheroot | Cigar with both ends open | from Tamil shuruttu = roll (p-190) |
| 7. கயிறு | Coir | Co-co-nut fibre, used for ropes, matting | from Malayalam Kayar (p-217) |
| 8. கொப்பரை | Copra | Dried Kernels of Co-co-nut | probably-from Malayalam, Koppara (p-251) |
| 9. குருந்தம் | Corundum | Crystallized mineral of same species as sapphire & ruby | from Tamil Kurundam (p-257) |

| | | | |
|---|---|---|---|
| 10. கறி | Curry | Dish of meat & curry cooked with bruice spices & turmeric. | from Tamil Kari Sauce (p-279) |
| 11. தோப்பு | Tope | Mango or other grove. | from Tamil toppu (p-1294) |
| 12. இஞ்சி | Ginger | Hot spicy root used in cooking & Medicine & preserved in syrup or candy as sweat-meat | from Latin Zingiber from Greek Ziggiberies (p-484) |
| 13. மாங்காய் | Mango | Indian tree bearing fleshy fruit Yellowish-red in colour. | from Tamil Mankay (p-696). |
| 14. மிளகுத்தண்ணீர் (இரசம்) | Mulligatawny | Pepper Water. | from Tamil Milagutannir (p-745) |
| 15. அரிசி | Rice | Pearl-white seeds, used as staple food in many Eastern Countries. | from old French ris from Italian riso from Greek oruza probably from oriental source (p-1011) |
| 16. சந்தனம் | Sandal | Kinds of scented wood, Sandal tree. | from Latin Sandalum (p-1051) |
| 17. தேக்கு | Teak | (Indian tree with) heavy durable timber that does not warp or shrink | from Malayalam Tekka (p-1257) |

குறிப்பு: *மேற்கோள்பகுதி "THE CONCISE OXFORD DICTIONARY" அகராதியினின்றும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அகராதியில் சிலசொற்கள் மலையாளத்தினின்றும், இலத்தீன் மொழியினின்றும், தெலுங்கினின்றும் கொள்ளப்பட்டவை எனப்பிழைபடக் காட்டப் பட்டுள்ளன. ஆனால் அவை தமிழினின்றும் கொள்ளப்பட்டவை என்பதே உண்மை. அவ்வம்மொழிகளில் காணப்படும் தமிழ்ச் சொற்களையெல்லாம் தொகுத்துக் காணும்பொழுது இந்த உண்மை புலனாகும்.)

கிறித்து சகாப்தத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரும், ஆரியர் வருகைக்கு முன்னரும், தமிழர்கள் நாகரிகத்திற் சிறந்தவராய் விளங்கினர்; சிறந்த ஆட்சி முறையைக் கண்டனர்; இந்திய நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டனர் என்ற உண்மைகளை யெல்லாம் வரலாற்றைத் தெளிவாக அறிந்து கொண்டுள்ள சான்றோர்கள் இன்று தயங்காமல் ஒப்புக்கொள்கின்றனர். இந்திய வரலாறு ஒழுங்காக எழுதப்படுமானால், இத்தகைய உண்மைகள் பல வெளிப்படுவதற்கு வாய்ப்பு உண்டு. பண்டைத் தமிழர்களுடைய வாணிகச் சிறப்பைக் கீழ்க்காணும் மேற்கோள்கள் உணர்த்த வல்லனவாய் அமைகின்றன:

(1) "பிளினி, டாலமியின் நூல்கள், பெரிபிளஸ் ஆகிய ஆதாரங்களிலிருந்து தென்னிந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கு மிடையே நிலவிய வாணிகத்தொடர்பு தெற்றெனக் காணக்கிடக்கின்றது. இவர்கள் காலத்திலேயே பெருமளவில் வாணிகம் நடந்திருந்ததென்றால், கி. மு. 6 அல்லது 7 நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே இது ஆரம்பித்திருக்க வேண்டுமென்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. மேலும் இவ்வாதாரங்கள் அக்காலத்தில் தென்னிந்திய வரலாறு, ஆட்சி நிலைமை முதலியவைகளை யெல்லாம் எடுத்துக் காட்டவும் உதவுகின்றன." †

(2) "கடல் வாணிகர்கள், பருவக்காற்றுகளைப் பயன்படுத்திக்கொண்டு கி. மு. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் எட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும், இந்தியாவின் தென்மேற்குக்கரைத் துறைமுகங்களிலிருந்து புறப்பட்டு, முன்பு பெரிய வாணிகக்களமாய் விளங்கிய பாபிலோனுக்குத்திரும்பும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். வாணிகர்களில் பெரும் பாலோர் திராவிடர்களே (தமிழர்களே); ஆரியர்கள் அல்லர். ............................" *

† "நாமிருக்கும் நாடு அல்லது தென்னிந்திய வரலாறு," (ப—28); டாக்டர் மு. ஆரோக்கியசாமி, எம்.ஏ., பி.எச் டி.

* "Sea-going merchants, availing themselves of the monsoons, were in the habit, at the beginning of the seventh (and perhaps at the end of the eighth) century B. C., of trading from ports on the South-West coast of India (Sovira at first, affer wards Supparaka and Bharukaccha) to Babylon, then a great mercantile emporium.

These merchants were mostly Dravidians, not Aryans, such Indian names of the goods imported as were adopted in the west (Solomon's ivory, apes, and peacocks. for instance, and the word "rice") were adaptations, not of Sanskrit or Pali, but of Tamil words."

"Buddhist India," (p-50); T. W. Rhys Davids.

(3) "இடையறாத முத்து வாணிகம், தென்னிந்தியாவிற்கும் உரோம் நகருக்குமிடையே நடைபெற்று வந்தது. காயஸ் கிளாடியஸ் என்னும் பேரரசனுடைய மனைவி இலோலா என்பவள் 300,000 பவுண்டுகள் பெறுமானமுள்ள பொற்காசுகளுக்கான முத்துக்களால் வெளிப்படையாகத் தன்னை அழகுபடுத்திக்கொண்டு பன்முறை காட்சியளித்தாள்."°

° "There was brisk trade between South India and Rome in pearls............ Lolla, wife of the emperor Caius Claudius, appeared often publicly covered with pearls worth £ 3,00,000 sterling."

"The Ancient Dravidians," p-82; —T. R. Sesha Iyengar, M.A.,

# 3. வடமொழியில் தமிழ்ச்சொற்கள்.

(வடமொழிக் காவியங்களில் 'த்ராவிடம்' என்பது தமிழ் மொழியை மட்டுமே குறிப்பதாய் உளது.)

கற்றோர்தம் ஆராய்ச்சி அறிவு பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்துவரும் இன்றைய நிலையிலும் இந்திய தேசத்தின் நாகரிக மேம்பாடு, வரலாறு, பண்பாடு முதலியவைகளை அறிய மொழிகள் பெரிதும் துணை புரிகின்றன. அவற்றுள் பழமையுடையவை என ஆராய்ச்சி முடிவுகளின் படி ஒப்புக்கொள்ளப்படும் பெருமைக்குரியவை இரண்டு மொழிகள். அவை தமிழும், சமஸ்கிருதமும் (வடமொழியும்) ஆகும். அந்த இரண்டு மொழிகளிலும் இலக்கணவரம்பு, பழைமை, வளம் என்னும் பல சிறப்பியல்புகளைக் கொண்டதும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தனித்தியங்கியதும் ஆகிய மொழி தமிழேயாம் என்பதை மொழிநூல் வல்லார் அனைவரும் தெரிவித்துள்ளனர். கண்மூடித்தனம், வெறி, அழுக்காறு, சுயநலம், பிரித்தாளும் சூழ்ச்சி முதலியவை காரணமாக, 'சமஸ்கிருதமே இந்திய மொழிகளின் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்தது; சமஸ்கிருதம் இன்றித் தமிழ் (மொழி) இல்லை; இந்திய நாகரிகம் இல்லை; வரலாறு இல்லை,' என்றெல்லாம் பண்டிதர்கள் பேசியும் எழுதியும் வந்தார்கள். அந்தக் காலம் மலையேறிப் போய் விட்டது. சாதிச் செருக்குக் காரணமாக, 'தேவபாஷை,' 'கிருதம்' (தெளிவு, பிழிவு, சாரம் என்னும் பொருளது; அதாவது இங்கு தமிழுடன் தொடர்பு கொண்ட பொழுது

தான் தெளிவாக்கப்பட்டது என்பது முடிந்த முடிபு) என்றெல்லாம் சொல்லிச் சமஸ்கிருதத்தைப் பாராட்டும் வழக்கமும் மறைந்துகொண்டு வருகிறது. எவ்வளவு காலந்தான் பொய் புனைசுருட்டுகளை (புனைந்துரைகளை) வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றி வாழ இயலும்! சமஸ்கிருதத்தைப் பற்றி ஆரியர் சொன்ன பொய்கள், இன்று அவர்களையே (அவர்களால் சொல்லப்பட்ட பொய்கள் மொழியை முன்பே அழித்துவிட்டன) அழிக்க ஆரம்பித்துள்ளன. இந்திய வரலாற்றையும் மொழிகளையும் பற்றிய நூல்களை எழுதிய மேலை நாட்டு ஆசிரியர்களும் தமிழ் நாகரிகம், மொழி பற்றிய செய்திகளை வெளியிடாமல் மறைத்ததன் மூலம் பெருந்தவற்றைச் செய்துவிட்டனர்.* இன்னும் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்குள் தமிழர்கள் இந்திய நாகரிக வளர்ச்சிக்கும் பிறமொழிகள் வளர்ச்சிக்கும் காரணமாய் அமைந்தவர்கள் என்னும் உண்மை தெளிவாக நிறுவப்பட்டுவிடும்.

வேத மொழியாய் விளங்கிய காலத்தில் ஒரு சிலராலே பாடல்கள் மூலம் இறவாமல் காக்கப்பட்ட (மற்றவர்கள் கற்காதவாறு தடுக்கப்பட்ட) சமஸ்கிருதம்—இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் பிரிவைச் சேர்ந்ததாகக் கொள்ளப்படும் சமஸ்கிருதம்—காலப்போக்கில் வழக்கொழிந்து போயிற்று. இன்று சிலரே பேசும் மொழியாக அது குறுகிக் காட்சியளிக்கிறது. அன்று மூடிவைத்து மொழி வளர்ச்சியைத் தடுத்தவர்களின் வழித்தோன்றல்களெனத் தங்களைப் பற்றிக் கருதிக்கொள்ளும் சிலர் இன்று, 'இந்திய மொழிகளில் சமஸ்கிருதமும் சிறப்புடையதாகையால் அதனையே தேசத்தின் பொதுமொழியாக அரசியலார் ஏற்கவேண்டும்

* "The Dravidians are usually brushed aside with little or no reference. In the cambridge history of Ancient India, there is not even one per-cent reference, so late as 1922. It was not for want of material; it was want of European scholarship and enthusiasm which favoured Aryanism at the expense of the Dravidian.

But events turned out so suddenly and so startingly that it well illustrates the Italian proverb which says 'He who goes quietly goes safely and goes far'." 'Dravidian & Aryan,'

page, 19; P. Chidambaram Pillai.

என ஓலமிடுகின்றனர்—இயலாத செயலைப் பற்றிக் கனவுகள் காண்கின்றனர்—கோட்டைகளைக் கட்ட முயல்கின்றனர். நாளிதழ் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள செய்தியைக் காண்பாராயின், சமஸ்கிருதத்தின் இன்றைய நிலையை எவரும் எளிதில் தெரிந்துகொள்ள இயலும். அச்செய்தி,

"500 பேர் மட்டுமே பேசும் சமஸ்கிருதம் 14 ஆட்சி-மொழிகளுள் ஒன்றாக முடியாது."*

"இந்தியாவின் 14 ஆட்சி மொழிகளின் பட்டியலில் சமஸ்கிருத மொழிக்கு இடமளிக்க நியாயம் இல்லை என்று உள்துறை இலாக்காத் துணை மந்திரி திரு. ஹஜார்-நாவிஸ் நேற்று லோக்சபையில் அறிவித்தார்," என்பதாகும்.

அன்று குறுகிய மனப்பான்மை காரணமாகச் சிலரால் வழங்கப்படும் மொழியாகச் சமஸ்கிருதத்தைக் கட்டுப்படுத்திவிட்டு, இன்று அதையே தலையாய ஒரு மொழியாக்கிவிடத் துடிக்கின்றனர். அன்று எவ்வாறு ஒரு சிலரால் பேசப்பட்டு வந்ததோ (சிறுபான்மையினர் மொழியாய் விளங்கியதோ) அதேபோன்று இன்றும் ஒரு சிலரால் மாத்திரம் பேசப்படும் (1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி, 2544 பேர் சமஸ்கிருதத்தைப் பேசுகிறார்களாம்! சமஸ்கிருதத்தை, பேசப்படும் ஒரு மொழி எனக் கூறுவதைக் காட்டிலும் எழுதப்படும் மொழி எனக் கூறுவது பொருந்தும்)–பாராட்டப்படும்–மொழியாக அது உள்ளது. அன்று 25 பேர் சமஸ்கிருதம் பேசினர் என்று கொண்டால், இன்று ஏறக்குறைய 2500 பேர் பேசுவதாக (அதாவது எழுதுவதாக)க் கொள்ளலாம். அவ்வளவே வேறுபாடு. காலப் போக்கில் தமிழொடு தொடர்பு கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டவுடன் மந்திரங்கள் கூறுவதற்கான சொற்கள் நீங்கலாக, (பல பொருள்களை, பெயர்களை, செயல்களை உணர்த்துவதற்குரிய சொற்களை அன்றும் அறியாத அவர்கள்) சமஸ்கிருதத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்ட மற்றச் சொற்களையெல்லாம் சாட்டர்ஜி என்பவர்,

* "நவசக்தி," 22—12—62.

"இருக்கு வேதத்திற் காணப்படும் அணு, அரணி, கபி, கருமாரா, காலம், கானம், நாநா (பல , நீலம், புட்பம், பல (பழம்), பீசம், மயூரம், இராத்திரி, உருவம்," முதலிய பல சொற்களைத் தமிழ்ச் சொற்கள் என எடுத்துக் காட்டியுள்ளார். தமிழிலிருந்து இரவலாகக் கொண்ட சொற்களைப் பயன்படுத்த முனைந்ததுடன் அமைதி கொள்ளாமல், அத்தகைய சொற்களின் உச்சரிப்பு முறைகளையும் வழக்குகளையும் சிதைத்து, மாற்று உருவிலே அமைத்துக்கொண்டு அவை சமஸ்கிருதத்திற்கே உரியவை எனக் கூறியும், தமிழர் சமஸ்கிருதச் சொற்களை யெல்லாம் மாற்றித் தங்கள் மொழியில் ஏற்றுக்கொண்டனர் என உண்மைக்கு மாருகக் கதைகளைக் கட்டியும் (பொருளைத் திருடியவன் தன்னைக் காத்துக்கொள்ள, "அதோ ஒடுகிருன் திருடன்" என்று கூறி, மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டு தானும் ஒடுவதுபோல) பொய்களைப் பேசியும், எழுதிய கருத்துகளையே மீண்டும் மீண்டும் தொடர்ந்து எழுதியும், மக்களை ஏமாற்றி விட்டனர். இதுவே நூற்றுக்கு நூறு விழுக்காடு உண்மை ஆகும்.

## தமிழும் வடமொழியும் :

தெளிவிற்காகத் திராவிடர், திராவிடம் (மொழி) என வழங்கப்படும் வழக்குகள் தமிழரையும் தமிழையும் அன்றி வேறு எவரையும், எந்த மொழியையும் குறிப்பிடுவன அல்ல என்பதை முதலில் நாம் மனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

"'திராவிடமென்பது தமிழ் என்பதின் திரிபு, அல்லது சமக்கிருத வடிவமாக்கப்பட்ட சொல்,' எனவே சமக்கிருத பண்டிதர் கருதுகின்றனர் என்று 'தமிழ் ஆராய்ச்சி' என்னும் நூலார் கூறுவர்; 'திசைச்சொல் பன்ஞரென்பது வேறு மொழியில் ழகரம்' இன்மையின் தமிழ் என்னும் பெயரைச் சொல்ல இயலாமை பற்றித் திராவிடம் முதலிய பெயர்களால் தமிழைக் குறிப்பது இதுபற்றிப் போலும்,"—என டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் கூறிய கருத்து இந்த உண்மையை வலியுறுத்தப் போதிய சான்ருகும். தமிழ் மொழி இன்றிச் சமஸ்கிருதம் இல்லை என்னும்

உண்மையையும், வேத காலத்தில் சில சொற்களைத் தமிழினின்றும் பெற்றுக்கொண்ட சமஸ்கிருதம் காலப் போக்கில் பல சொற்களை இரவலாக ஏற்றுக்கொண்டு வளர்ச்சியடைந்தது என்னும் உண்மையையும், மொழி நூல் வல்லுநர்களும் மறுக்கவியலாத ஆராய்ச்சி முடிவுகளைக் கண்ட சான்றோர்களும் மிகத் தெளிவாக எழுதிச் சென்றுள்ளார்கள். இந்த உண்மையைக் கூறுமற் கூறும் டாக்டர். P. S சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களுடைய கருத்து* நமக்கு மேற்கூறிய உண்மையைத் தெளிவுபடுத்துகின்றது. சான்றோர்களுடைய விளக்கங்கள்—கருத்துகள்; இருமொழிகளின் தன்மை, தொடர்பு, ஆற்றல் முதலியவை பற்றிய உண்மைகளை அறியப் பெரிதும் துணைசெய்ய வல்லனவாம். அவை வருமாறு :

"தமிழர்களுடைய பழமையை நோக்குங்கால் ஆரியருடைய பழமையானது கணப் பொழுதிற்கு முன் பெற்ற இராய்ட்டர் (Reuter) தந்திச் செய்தியை ஒக்கும்."[1]

"சமஸ்கிருதம்" என்ற சொல்லிற்கு 'நன்றாய்ச் செய்யப்பட்டது' என்று பொருள். அதாவது ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வந்த பிற்பாடு தமிழர்களைப் பார்த்துத் தங்களுடைய பாஷையைச் சீர்திருத்தம் செய்துகொண்டார்கள் என்றும், எழுத்து முதலியவற்றைக் கற்பித்துக்கொண்டார்கள் என்றும் ஏற்படுகிறது. இன்ன காலத்தில்தான் ஏற்பட்டது என்று எடுத்துக் கூற இயலாத மொழிக்கு, நேற்று ஏற்பட்ட சமஸ்கிருத பாஷையின் சொல்லால் பெயருண்டாயிற்று என்பது எவ்வளவு அழகு! எவ்வளவு பொருத்தம்!! என்பதை நோக்குங்கள். ஆரியர் வருவதற்கு முன் இந்நாட்டு மக்கள் பேசின பாஷைக்குப் பெயரே கிடையாதா ? பேரில்லாப் பாஷையாகவா இருந்தது ? பிரயோக

---

* "இந்தியாவின் வடக்குப் பாகத்தில் வழங்கிய மொழிக்குத் தமிழ் இலக்கணக்காரர் வடமொழி எனப் பெயரிட்டனர். அதனைத்தற்போது சம்ஸ்கிருதம் என்பர். அம்மொழியைப் பேசுவோர் ஒரு நாட்டில் நிலைத்திராமையால் நாட்டைக்கொண்டு அதற்குப் பெயர் வரவில்லை. தற்போது உள்ள நூல்களிலிருந்து அது வளர்ச்சியுற்ற நிலை நான்கு என்னலாம்."

'வட மொழி வரலாறு' பக்கம்–26.

1. சென்னைக் கவர்னர் கிராண்டப் அவர்களின் பட்டமளிப்பு விழாப்பேச்சு.

விவேகத்தைப் பின்பற்றிக்கூறும் புலவர்களே விடை பகர்வார்களாக."[2]

"திராவிட நாகரிகத்தை நாம் ஒருபோதும் குறைவாகக்கருதுதல் கூடாது. திராவிட நாகரிகத்தின் அடிப்படையினுல் ஆரிய நாகரிகம் செழிப்பும் ஆழமும் எய்திற்று. திராவிடர் பல கலைகளில் திறமை அடைந்திருந்தனர். அவர்கள் பாடவும் கட்டடங்கள் அமைக்கவும் வல்லவராயிருந்தனர்."[3].

"ஆரிய மொழிக்குரிய நெடுங்கணக்கு தமிழர் முறையைப் பார்த்துச் செய்யப்பட்டது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. தாங்கள் செல்லுமிடங்கட்குத் தக்கபடி புதிய லிபிகள் ஏற்படுக்திக்கொள்ளும் இயல்புடைய ஆரியர் தமிழ் லிபியை ஒட்டிக் 'கிரந்தம்' என்னும் பெயரிற் புதியதோர் லிபி வகுத்தனர்."[4]

"ஆரியர் வரும்போது வடக்கே தமிழ் வழங்கிற்று. பின்பு இரு மக்களும் அளவளாவிக் கலந்தார்கள். அப்பொழுது தமிழொடு, பல இருமொழிச் சிதைவுகளும் கலந்து புதுமொழிகள் எழுந்தன. வடநாட்டு மொழிகள், சொற்போக்கில் ஆரியம் போல் தோன்றினுலும், இலக்கண அமைப்பில் திராவிடமாயுள்ளன என ஆராய்ச்சி வல்ல பி. தி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் 'தற்கால இந்தியா' என்னும் தமது நூலிற் காட்டியுள்ளார்."[5].

"It (Tamil) stands alone without any predecessor. In origin it must be long anterior to the Sanskrit......... Human remains and traces have been found on the East coast of an age which is indeterminate but quite beyond the ordinary calculations of history."[6]

2. 'தமிழ்' "செந்தமிழ்ச் செல்வி;" சிலம்பு—1, பரல்—3. து. அ. சிதம்பரனுர்.
3. —கவி. இரவீந்திரநாத தாகூர்.
4. "தமிழ் மொழி வரலாறு,"—வி. கோ. சூ.
5. 'தமிழ் விளக்கம்', பக்கம்—14; ந. சி. கந்தையா பிள்ளை.
6. 'Manual of Standing Information' for Madras Presidency, Page-50.

"இனி ஆரியர் இந்தியாவிற் புகுந்தபின் தமிழருடைய நாகரிக முதிர்ச்சியினையும், அவர் தாங்கருதிய பொருளை எழுத்திலிட்டுப் பொறித்தலுங் கண்டு தாமும் தம்முடைய பாட்டுகளைப் பண் அடைவுபட வகுத்த ஞான்று எழுதுமுறை கண்டறிந்தார். இது கோல்ட் ஸ்டக்கர் என்னும் பண்டிதர் விளக்குமாற்றானும் நன்கு அறியப்படும். இரைஸ் டேவிட்ஸ் பண்டிதரும் 'இந்தியாவிலுள்ள எழுத்துகள் ஆரியர்க்குரியவல்ல' என்றும், 'அவை திராவிட வியாபாரிகளாற் கொண்டுவந்து தரப்பட்டன', என்றும் கூறுமாற்றானும் அவை தமிழர்க்கே உரிய வென்பது இனிது பெறப்படும்." [7]

'The three classic languages of the world, viz. Sanskrit. Hebrew and Greek, contain Tamil words in the vocabulary " [8]

" சமற்கிருதத்தில் $\frac{1}{5}$ பங்கு தமிழ்ச்சொற்களும் தமிழ் வேர்ச்சொற்களினின்று திரிந்த சொற்களுமாயிருக்கின்றன. வேதத்திலேயே, அகவு, தா, சாயம் (சாயுங்காலம்), முத்தம் முதலிய நூற்றுக்கணக்கான தமிழ்ச்சொற்கள் உள்ளன. சமற்கிருதம் தேவ மொழியென்னும் தவறான கருத்து பண்டைத் தமிழர் உள்ளத்திற் பதிந்து விட்டதனால், ஆங்கிலேய ஆட்சி வாயிலாய் ஆங்கிலக் கல்வி ஏற்படும் வரை, பல தென்சொற்களையும் வடசொற்களென்று தமிழர் மயங்கியிருந்தனர். இன்று அம்மயக்கந் தெளிந்து வருகின்றது. ஆயினும், நீண்ட காலமாக அடிமைத் தனத்திற் கிடந்து ஊறிப் போனதினால், இன்றும் சில தமிழரும் தமிழ்ப் பேராசிரியரும் தன்னலங்கருதித் தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையிடுகின்றனர். எனினும் உண்மை அண்மையில் வெளியாகும்." [9]

" Tamil is also the oldest Dravidian language known in Europe. The name 'Tamilian' or 'Tamulian' was at first given to the entire family; 'Dravidian'

7. 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்', பக்கம்–30;—மறைமலை அடிகள்.
8. Rhys Davids.
9. "சென்னைப்பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு," பக்–25;—ஞா. தேவநேயன்.

chosen by CALDWELL as being more general, is nothing but an ancient form of the same name, known to Sanskrit (Dramida, Dravida)."[10]

"Tamil, the language of Tamilaham, is one of the earliest (if not the earliest) languages of the world. It took its origin in the country itself. It became the language of the Indian Peninsula and was spoken in different parts of the world."[11]

"Sanskrit scholars suffer from a form of superiority complex and believe that Sanskrit, the language of the gods, being a perfect language, could not stoop so low as to borrow words from the languages of men. Hence they are fond of inventing derivadions, ingenious and plausible but absurd from a historical point of view."[12]

இந்தோ — ஐரோப்பிய மொழிகளில் காணப்படாத பல சொற்கள் சமஸ்கிருதத்தில் மாத்திரம் காணப்படுகின்றன. எனவே, அவை பழம்பெருமையுடைய மொழியாகிய தமிழினின்றும் கொள்ளப்பட்டவை என்னும் உண்மையை மறுத்தற்கில்லை. இருக்கு வேதத்தில் காணப்படும் (சமஸ்கிருதச் சொற்களாக மாற்றிவிடப்பட்ட) தமிழ்ச் சொற்களின் பட்டியலையும், ஆங்கிலத்தில் அவற்றிற்குரிய பொருள்களையும் கீழ்க்காணும் அட்டவணை வாயிலாக அறிந்து கொள்ளலாம். 'The influence of Dravidian on Sanskrit may be illustrated by a list of the most important and certain of the Dravidian loans', எனக் கூறி நூற்றுக்கணக்கான சொற்களை டி. பரோ என்பவர் தொகுத்துக் காட்டியுள்ளார்.

10. Introduction, "The Grammatical structure of Dravidian Languages," page XXVI; By Jules Bloch.

11. "Tamil India", page-35; By M. S. Purnalingam Pillai

12. "Pre-Aryan Tamil Culture", By P. T. S. Iyengar,

'Rig Veda' என்னும் நூலில் காணப்படும் சொற்கள். †

| தமிழ் | சமஸ்கிருதம் | ஆங்கிலத்தில் பொருள் |
|---|---|---|
| 1. உலக்கை | Ulukhala (உலூகலா) | Mortar |
| 2. கடு (மை) (Kadu) | Katuka (கடு) | Pungent, sharp |
| 3 குடம் | Kuta (குட) | Pot |
| 4. கள்வன் | Khala (கால) | Rogue |
| 5. தண்டம் | Danda (தண்ட) | Stick, Cudgel, Stem, Handle |
| 6. பள்ளி | Palli (பள்ளீ) | Small Village (hamlet) |
| 7. வலம் (வலிமை) | Bala (பல) | Strength |
| 8. பிளவு (பிலம்) | Bila (பில) | Hole, Cave |
| 9. மயில் | Mayura (மயூரா) | Peacock |
| 10 மாலை | Mala (மாலா) | Garland |
| 11 முரசு | Muraja (முரஜ) | Drum |
| 12. வளை | Valaya (வலய) | Bracelet |
| 13 வள்ளி | Valli (வல்லி) | Creeper |
| 14. எருமை | Heramba (ஹேரம்பா) | Buffalo |
| 15 உடுக்கை | Hudukka (ஹுடுக்கா) | Small drum |
| 16. பிண்டம் | Pinda (பிண்ட) | Lump, Clod |

இங்குக் காட்டப்பபட்டுள்ள சொற்கள் மொழி நூல் வல்லாராகிய T. Burrow என்பவரால் எழுதப்பட்ட 'சமஸ்கிருத மொழி' என்னும் நூலிலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்டவையாம்.

பிற ஆதாரங்கள் :

சமஸ்கிருதம் எவ்வாறு தமிழுக்குக் கடன் பட்ட மொழியாக ஆராய்ச்சி முடிபுகளின்படி கொள்ளப்படுகின்றது என்பதை அறிஞர் பெருமக்களுடைய (Jules Bloch,

† "On the other hand it is important to note that there is a small nucleus already found in the Rigveda Such are. Ulukhala .......... It is clear that as far as Sanskrit is concerned the active period of borrowing from Dravidian was well over before the christian era." 'The Sanskrit Language.' page–386; T. BURROW.

Caldwell, Burrow, Colins, Rhys Davids, Sesha Iyengar, குண்டர்ட், குமரிலபட்டர், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மறைமலை அடிகள், கந்தையா பிள்ளை போன்றோர் தம்) விளக்கங்கள் நமக்குத் தெளிவாய்க் காட்டுகின்றன.

தமிழர் நாகரிகமும், தமிழ் மொழியும் இந்திய நாகரிகத்தின் பெருமையை உலகுள்ளளவும் பறை சாற்றிக் கொண்டிருக்கும் என்பதை இனிப் பிறர் மறுக்கவோ அன்றி மறைக்கவோ இயலாது. காலம் அதன் கடைமையைச் செய்து முடித்துவிட்டது. உலகம் விழித்துக்கொண்டது. பொய், நீர்க்குமிழி போலத் தோன்றி மறைந்துவிட்டது. குறுகிய மனம் தக்க தண்டனையைப் பெற்றுவிட்டது. உண்மை வென்றுவிட்டது.

சிந்தனை ஊற்றைச் சுரப்பிக்க வல்ல அறிஞர் பெருமக்களுடைய விளக்கங்கள் தமிழருடைய கண்களைத் திறக்க ஆரம்பித்துவிட்டன. தமிழர் தங்களுடைய வரலாற்றையும் (அதனுடன் பின்னிப் பிணைந்துள்ள இலக்கிய வரலாற்றையும்), தமிழ் மொழியின் சிறப்பினையும் தொகுத்துக் கூறும் நாள் நெடுந்தொலைவில் இல்லை என்பதையும், கீழே குறிக்கப்பட்டுள்ள உண்மைகள் கலங்கரை விளக்கங்களாய் அமைந்து பயன்தரவல்லவை என்பதையும், மனத்திற்கொண்டு (உண்மையான மொழிப்பற்றுடன்) நேர்மையுடன், தமிழர் செயற்படவேண்டும். விளக்கங்களாவன:

I 'மீன், நீர் என்ற தமிழ்ச் சொற்கள் வடமொழியில் 'மீன' 'நீர' என வழங்குகின்றன. குமரிலபட்டர் தாம் இயற்றிய சுலோக வார்த்திகத்தில் சோறு, அதர் முதலிய திராவிடச் சொற்கள் வடமொழியில் கலந்துள்ளன என்பர்'.

II "As before, the Dravidan words are to be regarded as Tamil, except it is stated that they are taken from some other dialect."

I ந. சி. கந்தையா பிள்ளை (அவர்களின் கூற்று)

II Comp, arative Grammar of Dravidian Language,' p–588—Dr. Caldwell.

III 'ஆரிய மொழிகளில் திராவிட மொழி இயல்புகள்'.

"சமஸ்கிருதம் திராவிடத்திற்குப் பல்லாற்றானும் கடன்பட்டது. அது வேத இலக்கியத்திலேயே காணப் படுகின்றது என்ற முடிவுக்கு அவர்கள் (இன்றைய மொழி இயல் ஆய்வாளர்கள்) வந்தார்கள். டாக்டர் கிரையர்சன் கூறுகிறார்: 'There are a number of verbal roots and words in Sanskrit which do not appear to occur in other Indo-European languages. It is probable that at least a considerable portion of such words and bases has been borrowed from the Dravidian'. ஆரிய மொழிகளையும் நாகரிகத்தையும் பேரளவிற்குத் திராவிடர் உருவாக்கியிருக்கின்றனர் என்பதை டாக்டர் சுநீதி குமார் சாட்டர்ஜி என்னும் வங்காளப் பன்மொழிப் புலவர் (இவர் 'நன்னெறி முருகன்' என்று தம் பெயரைத் தமிழில் கூறிக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்) சுட்டுகிறார்."

'ஆரிய மொழிகளில் திராவிடமொழி இயல்புகள்,' (கட்டுரை) பெ. திருஞான சம்பந்தன், எம்.ஏ., எல்.டி., (Professor of Sanskrit & Comparative Philology, Presidency College, Madras)

IV "That there was in India at the time of the Aryan invasion a Dravidian Civilization of a more elaborate and developed character than the civilization, if civilization it can be called, of the Aryans."

V "கிறித்துப் பிறப்பதற்கு முன்னும் ஆரியர் வருகைக்கு முன்னும் திராவிட நாகரிகம்' பொருளாதார, இலக்கிய, திருமண முறைகளில் நன்கு வளர்ச்சியுற்றிருந்தது எனக் கொள்வதில் யாதும் மயக்கமில்லை."

VI "இந்திய நாகரிகத்தில் ஆரியரல்லாத மக்களுடைய நாகரிகத்தின் அடிப்படை பெரிதும் உள்ளதென்பதைச் சில்வன் லெவி, பிறிஸ்லுஸ்கி (Sylvan Levi and

III 'தமிழ்ப் பொழில்,' பக்கம்–27; துணர்–38; மலர் 1–2–(1962).
IV 'The Dravidian Element in Indian Culture;' Dr. Gilbert Slater.
V டாக்டர் ஏ. கே. ஆனந்த குமாரசாமி.

Jean Pryzluski) என்போர் தெள்ளிதில் விளக்கி எழுதியுள்ளனர். அவர்கள் எழுதியுள்ளதன் ஆங்கில மொழி பெயர்ப்பைக் காக்சி (Cagchi) என்பவர் தாமெழுதிய, 'ஆரியருக்கு முற்பட்ட மக்கள்' என்னும் நூலில் வெளியிட்டுள்ளார். இந்திய வரலாற்றில், ஆரியரல்லாத மக்களின் நாகரிக அடிப்படை உள்ளதென்பதை ஆசிரியர் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்."

VII "Ela is also found written in Sanskrit Eda. It is well known the Tamil peculiar sound "ழ" changes into 'l' or 'd' or 'r' in Aryan tongues. c. f 'பழம்' fruit, palam (Sans); 'பீழை' misery' pida (Sans); 'இழு' 'draw' eru-o (Lat) etc.,"

VIII "According to a theory which is very widely accepted, the Dravidian languages exerted a different influence on the Aryan languages when the Aryans first set foot on Indian soil, in making them adopt 'Cacuminal' (or inverted) sounds ḍ, ṭ, ṇ with ḍh and ṭh which were not found in primitive Aryan".

IX "கிரேத்தா (crete) என்பது கிரீஸ் நாட்டுக்குத் தெற்கேயுள்ள தீவு. இங்கு வாழ்ந்த மக்கள் தமிலி என அழைக்கப்பட்டார்கள் என ஏரடோடஸ் (Heradotus கி. மு 480) என்னும் ஆசிரியர் கூறியுள்ளார். அவர்களின் பழைய நாகரிகம் அரப்பா மொகஞ்சதரோ நாகரிகத்தை ஒத்தது."

X "In grammatical structure, in conception of ideas, in refinement of expressiveness, in its polish of prosody and grandeur of literature, and in the development of the language, Tamil is surpassed by

VI Dr. Suniti Kumar Chatterji in the Ramamurthi Pantulu garu memoria volume, page-72.

VII D Savariroyan, in 'Tamilian Antiquary', (Second Edition, 1913)

VIII 'The Language', page-196; Otto Jesperson.

IX 'தமிழ் விளக்கம்', பக்கம்–5; ந. சி. கந்தையா பிள்ளை.

few, and has secured for itself a very and high envious status among the languages of the world."

XI "சமஸ்கிருதம் இக் காலத்திற்கு ஒவ்வாது"—நேருஜி. 'சமஸ்கிருதத்திடம் எனக்கு மதிப்பு இருந்தாலும், அதற்காக எல்லோரும் சமஸ்கிருதம் கற்றுகவேண்டும் என்று என்னுல் சொல்ல முடியாது. நவீன காலத்திற்கு அம்மொழி பொருந்தாது. இலக்கியங்கள் அனைத்துக்கும் மதிப்புத் தர வேண்டுவதுதான். ஆனுல் இதிகாசங்களைக் கொண்டே எல்லாக் காலமும் வாழமுடியாது. நவீன உலகில் நாம் வாழ்ந்தாக வேண்டும்."

XII பெயரில்லாத தம் மொழிக்குப் பெயர் வைத்தனர்." 'ஐரோப்பாவிலுள்ள ஆரிய மொழியினங்களுக்குக் கிரேக்கு இலத்தீன் எனப் பெயர்களிருப்பதைப் போல, இந்தியாவிற்கு வந்த ஆரிய மொழிக்கு ஏதேனும் பெயர் உண்டா? இல்லையே. சமஸ்கிருதம் எனும் பெயர் உண்டென்பரேல் அது சரி, ஒத்துக்கொள்வோம். சமஸ்கிருதம் என்னும் பெயர் எப்பொழுது வந்தது? ஆரியர் இந்தியாவிற்கு வந்து தமிழிலுள்ள உயிரையும் மெய்யையும் தம் மொழியில் வைத்துக்கொண்டு அவ்வெழுத்துக்களுக்கேற்ற உயிர் மெய்யெழுத்தையும் அமைத்துக்கொண்டு அவ்வெழுத்துக்களுக்கேற்ற மொழிகளையும் ஆராய்ச்சியால் செம்மை செய்து அமைத்துக்கொண்ட தமது மொழிக்குச் 'சமஸ்கிருதம்' எனப் பெயர் வைத்தனர். சமஸ்கிருதம் செம்மை செய்யப்பெற்ற மொழி. இச்சமஸ்கிருத மொழிகளால், இயற்றப்பெற்ற கலைகள் எழுதின ஏடுகளை ஒரு கட்டாகக் கட்டி வைத்தனர். அவ்வேடுகளை கிரந்தம் என்றனர். கிரந்தம் = கட்டப்படுவது.'

X 'The Bharata Land or Dravidian India', page-15;
—D. Savariroyan in 'Tamilian Antiquary', No. 1.

XI 'நேருஜி'—ஹைதராபாது பேச்சு; "நவசக்தி", 24—7—63.

XII 'தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்' பக்கம்–431; பண்டிதர். அ. கி. நாயுடு.

# 4. தெலுங்கு மொழியில் தமிழ்ச் சொற்கள்.

இந்திய மொழிகளிலே பழமை மிக்கதும் பிற மொழிகளின் வளர்ச்சிக்குக் காரணமாயிருப்பதும் ஆகிய தமிழ் மொழி தென்னிந்திய மொழிகளின் தோற்றத்திற்குரிய நிலைக்களமாய் அமைந்தது என்பதை மொழிநூல் வல்லார் ஒப்புக் கொள்கின்றனர். மேலை நாட்டுச் சான்ரோருட் சிலர் —சிறப்பாகக் கால்டுவெல் போன்றவர் — இந்த உண்மையைத் தெளிவுபடச் சென்ற நூற்ருண்டிலேயே தெரிவித்துவிட்டுச் சென்றனர். தெலுங்கு மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட சான்ரோர்களுள் சிலரும் (குறிப்பாக ஆசிரியர்கள்) இந்த முடிவையே தயங்காமல் தெரிவிக்கின்றனர். காலஞ்சென்ற தமிழ்ப் பெரியார் சுந்தரம் பிள்ளை அவர்கள், பிற தென்னிந்திய மொழிகளுக் கெல்லாம் தாயாய் விளங்கும் சிறப்பினைப் பெற்ற மொழியாகத் திகழ்வது தமிழே ஆகும் என்பதை — ஒப்பற்ற உண்மையை — மனோன்மணீயம் என்னும் நூல் வாயிலாக அழகு படத் தெரிவித்துள்ளார். ஆசிரியர் தமிழ்த்தெய்வ வணக்கத்தைக் கூறுகையில்,

"பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி யிருப்பது போல்
கன்னடமும் களி தெலுங்கும்
கவின் மலையாளமும் துளுவும்

உன் உதரத் துதித்து எழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலக வழக்கு
அழிந் தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே,''

என உண்மையை வலியுறுத்துகின்ருர்.

தமிழ் மொழியினின்றும் காலப் போக்கில் பிரிந்து சென்ற ஒரு மொழியே தெலுங்கு மொழி ஆகும் என்னும் உண்மையை நேராகவோ, அன்றிக் குறிப்பாகவோ, வலியுறுத்துவதற்காகவே சான்ருேர் பலர் தக்க காரணங்களுடனும் சான்றுகளுடனும் நூல்கள் வாயிலாகப் பல விளக்கங்களைத் தெரிவித்துள்ளார்கள்.

அவை வருமாறு:

(1) "தமிழ் மொழியில் சொற்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அறிய விரும்புபவர்க்கு அதனோடு தொடர்பு மிக்க மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு முதலிய மொழிகளை வேண்டுமளவு நோக்குதல் இன்றியமையாததாகும்." *

(2) ' இவ்வாறு தமிழ்ப் பாஷையின் வழிமொழிகளாகித் தனித்தனி இயங்கப் புகுந்தனவற்றுள் தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் ஆகிய நான்கும் தலைநின்றனவாம்.'' †

(3) "மொழி நூற் புலமையும் வடநூற் புலமையும் ஒருங்கே நடாத்திக் காலஞ்சென்ற சேஷகிரி சாஸ்திரியார் அவர்களும் தாமெழுதிய 'ஆந்திர சப்த தத்துவம்' என்ற நூலின் கண்ணே தெலுங்கிற்குத் தாய் தமிழென்றே கூறி அமைக்குமாற்றையுங் காண்க." °

* "தமிழ்ச் சொல்லமைபு,"—பக்கம்–6; வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.
† " " —பக்கம்–25; " "
° 'தமிழ்மொழியின் வரலாறு,' பக்கம் 26; வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

(4) "கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் முதலிய மொழிகள் தமிழினின்று பிறந்தவை என்பது ஆராய்ச்சியாளரால் முடிவுகட்டப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு மலையாளம் முதலிய மொழிகள் சகோதர மொழிகளென்றும், தெலுங்கு முதலிய மொழிகளுக்குத் தாய், தமிழ் அன்று என்றும் இப்பொழுது தெலுங்கு மக்களுட்சிலர் கூறுகின்றனர். இக்கருத்துத் தவறுடைய தென்பதை மொழி ஆராய்ச்சி வல்ல அறிஞர் பல ஆண்டுகளுக்கு முன்னரே கண்டித்துள்ளார்கள். வெவ்வேறு மக்கள் கலப்பதால் புதிய சாதியினர் தோன்றுவதுபோல, மொழிகள் கலப்பதாலும் புதிய மொழிகள் தோன்றுகின்றன."+

(5) "ஆந்திரர் நெடுங்காலமாய் ஒரு தனி மன்பதையராக இருந்து வந்திருக்கின்றனர். எனினும் அவரது மொழி கடைக்கழகக் காலம் வரையில் கொடுந்தமிழாயும், கிளைமொழியாயுமிருந்து அதன் பின்னரே வடமொழிக் கலப்பால் இனமொழியாய்ப் பிரிந்துவிட்டது. கடைக் கழகக் காலத்தில் வேங்கட வெல்லையில் தெலுங்கு இருந்ததில்லை. அன்று வேங்கடமலை புல்லி என்னும் தமிழ் வள்ளலுக்குரியதாய் இருந்தது." §

'புல்லிய — வேங்கட விறல்
வரைப்பட்ட' (புறநானூறு, -385).

தமிழ்மொழிச் சொற்களில் பல இன்றும் தெலுங்கு மொழியில் சிதைவு பெருமலும், சில சிதைவுற்றும், வேறு சில முழுமையாக மாற்றுருவம் பெற்றும் காணப்படுகின்றன. இரு மொழிகளிலுமுள்ள ஒப்புமையுடைய சொற்கள் பலவும் மேற்கூறிய உண்மையையே—முடிவையே—தெளிவாக வலியுறுத்துகின்றன. தெலுங்கு மொழியில் காணப்படும் (இடம் பெற்றுள்ள-கலந்துள்ள) தமிழ்ச் சொற்களுட் சில இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

+ "திராவிட மொழிகளும் இந்தியும்," பக்கம் 3, முன்னுரை; ந.சி. கந்தையா பிள்ளை.
§ "திராவிடத்தாய்," பக்கம் 83; ஞா. தேவநேயன்.

அவையாவன :

| தமிழ் | தெலுங்கு | தமிழ் | தெலுங்கு |
|---|---|---|---|
| மரம் | மானு | செவிடு | செவுடு |
| பெரு, பெரிய | பெத்த | கால்வாய் | கால்வ |
| செய் | செய்யு | கொஞ்சம் | கொஞ்சமு |
| கழுதை | காடிதெ | பந்தல் | பந்தலி |
| யான் | நேனு | மருந்து | மந்து |
| உலக்கை | (உ)ரோகலி | திருத்து | தித்து (Dh) |
| கஞ்சி | கஞ்ஜி, கெஞ்ஜி | வழக்கம் | வாடுக |
| | | வேடிக்கை | வேடுக |
| பள்ளி, சிற்றூர் | பள்ளியா, பல்லி | ஏற்றுமதி | எகுமதி |
| | | தேக்குமரம் | தேக்கு மானு |
| முரசு | மொரயு | மிரியல் (மிளகு) | மிரியாலு |
| புட்டில் | புடி (புட்டி) | செப்பு (தல்) | செப்பு |
| உடுக்கை | உடுக | பாடத்தைச் சொல்லு | பாடமு செப்பு |
| மதில் | மதுரு | | |
| கூழ் (கூழு) | கூடு | உறி | உட்டி |
| கோழி | கோடி | குன்று | கொண்ட |
| நீழல் | நீட | தலை | தல |
| ஊழியம் | ஊடிகமு | மலை | மல |
| கழை | கட | பகை | பக |
| கீழ் | கிந்த (கிர்ந்த) | நீ, நின், நுன், ஐ, இ, ஆய், ஓய், நான், யான், ஏன், என் | நீவு, ஈவு, நீ, நின், வு, வி, நேனு, நே, ஏனு, ஏ, நா, நு, நி |
| முழுகு | முனுகு | | |
| நாணம் | நான(ம்) | | |
| கண் | கன்னு | | |
| மண் | மன்னு (மட்டி) | | |
| வெண்ணெய் | வென்னெ | நெல்லூர் (நெல் + ஊர்) | நெல்லூரு |
| குளன் | கொலன் | | |
| தேள் | தேலு | சிற்றூர் | சித்தூர் (ரு) |
| முள்(ளு) | முல்(லு) | ஒன்று (ஒரு) | ஒகடி, ஒண்டு |
| பற்று | பட்டு | இரண்டு (ஈர்) | ரெண்டு (இத்தரு) |
| சுற்றம் | சுட்டமு | | |
| புற்று | புட்ட | மூன்று (மூ) | மூடு (முக்குரு) |
| குக்கல் (நாய்) | குக்க | நான்கு (நாலு, நால்) | நாலுகு |
| நாய் | நாயி (பழைய தெலுங்கு) | ஐந்து (அஞ்சு, ஐ) | ஐது (ஏனு) |
| அவை | அவி | | |
| ஊர் | ஊரு | ஆறு | ஆரு |
| நெய் | நெய்யி | ஏழு (எழு) | ஏடு (ஏள்) |
| புகை | பொக (G) | எட்டு (எண்) | எனிமிதி (என்மிதி) |
| பூ | பூ(வ்)வு | | |
| விலை | வெல | ஒன்பது, ஒன்பான், ஒன்பத்து, தொண்டு | தொம்மிதி, (தொம்மண்டு) |
| அம்மை | அம்மவாரு | | |
| அம்பு | அம்மு | | |
| இல்லை | லேது | | |
| கெட்ட | செட்ட (D) | பத்து (பதின்) | பதி (பத) |
| | | நூறு | நூரு |

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள ஏலூரு, கண்டுகூர், கம்பம், கிட்டலூர், குண்டூர், குத்தி, குப்பம், கூடூர், கோடூர், நகரி, புங்கனூர், புத்தூர், போலூர் முதலிய ஊர்ப் பெயர்களெல்லாம் தமிழ்ப் பெயர்களாகவே விளங்கிவருவதை இன்றுங் காணலாம்.

திருப்பதி என்னும் ஊர் இன்று ஆந்திரர்களுக்குச் சொந்தமாயுள்ளது. முன்பு அது தமிழர்களுக்குச் சொந்தமாயிருந்தது. தமிழ்நாட்டைச் சேர்ந்ததாய் விளங்கியது. திரு = அழகிய அல்லது விரும்பத்தகும் தன்மையுடைய அல்லது சிறப்புடைய அல்லது செல்வம் பொருந்திய, பதி = ஊர், எனத் தமிழர்களால் வழங்கப்பட்டது. நெடுங்காலமாகத் தமிழ் வழக்கில் அமைந்துவிட்ட பெயரைத் தெலுங்கில் மாற்றிக்கொள்ள அவர்களால் இயலவில்லை. எனவே அப்பெயர் அப்படியே தெலுங்கரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தமிழ் நாட்டில் காணப்படும் அழியாப் பதி (இராமநாதபுரம் மாவட்டம்), மாஞம்பதி (செங்கற்பட்டு மாவட்டம்), வெள்ளியம்பதி (கோவை மாவட்டம்), பள்ளம் பதி (சேலம் மாவட்டம்) முதலிய ஊர்களைப் போலவே திருப்பதி தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய் விளங்கியது. சில ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பதி என்னும் பெயரையே—ஊர்ப் பெயரையே-தெலுங்கர் மாற்றிஞலும் நாம் வியப்படைவதற்கில்லை. திருப்பதி என்னும் ஊரைத் தம்முடையது என இன்று எவ்வாறு ஆந்திரர்கள் கொண்டாடுகிருர்களோ அப்படியே தமிழ் மொழியை—தமிழ் மொழியின் ஒரு பகுதியை (பிரிவினை)—தம்முடைய மொழி என அன்று கொண்டாடிக் காலப்போக்கில் தெலுங்கு எனப் பெயரையே மாற்றி அமைத்துவிட்டார்கள். தெலுங்கர் 'மதராஸ் மனதே' என்று கூடச் சொல்லி உரிமை கொண்டாடப் பார்த்தார்கள். இயலவில்லை. பின்னர் திருப்பதியோடு திருப்தி அடைந்து விட்டார்கள். தமிழ் நாட்டிலிருந்த ஊர் (திருப்பதி) எவ்வாறு தெலுங்கருக்குச் சொந்தமாயிற்ரே அவ்வாறே தமிழ்மொழி (மொழியின் ஒரு பிரிவு) தெலுங்கருக்குச் சொந்தமாயிற்று என்பது தெளிவாகிறது.

தெரிந்துகொள்ள முடிகின்றது. சான்றுகளாகக் காட்டப் படும் கதைப்பகுதிகள் தெளிவுற அமையவேண்டும் என்ற காரணத்தை முன்னிட்டுத் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் தரப்படுகின்றன. தமிழினின்றும் பிரிந்து சென்ற தெலுங்கு, வடமொழிக் கலப்பால் இன்று பெரிதளவு மாறுபட்டிருந்தாலுங் கூட முழுவதும் மாறுபட்டு விடவில்லை என்பதையே தெளிவாகக் கதைப்பகுதிகள் மூலம் காட்டுகின்றன.

அவை வருமாறு:

தமிழில்—ஒரு கதை (பார்ப்பனியும் கீரிப்பிள்ளையும்)

"ஓர் ஊரிலே ஒரு பார்ப்பனன் இருந்தான். அவனிடம் ஒரு மூங்கா (கீரி) இருந்தது. அவன் அதை மிக விருப்பாய் வளர்த்திருந்தான். ஒரு நாள் அவனுக்கு ஓர் ஊருக்குப் போகவேண்டிய பணி (வேலை) வந்தது. ஆகையால் அம் மூங்காவைத் தன் மனைவியிடம் ஒப்புவித்துப் போயினன். மாறுநாள் அவள் தன் பிள்ளையைத் தொட்டிலிலே தூங்கவைத்து, அம் மூங்காவைத் தொட்டிற் பக்கம் காவல் வைத்து நீர் (தண்ணீர்) இறைத்துக் கொண்டு வருவதற்குப் போனள். அதற்குள், பிள்ளை தூங்கிக்கொண்டிருந்தபோது தொட்டிற் பக்கம் ஒரு பாம்பு வந்தது. அம் மூங்கா அப் பாம்பைப் பற்றி (பிடித்து)த் துண்டஞ்செய்து போட்டுவிட்டு, நடந்த செய்தியைத் தாய்க்குத் தெரியப்படுத்துவதற்கு அவளிடம் போனது. அப்போது அவள் மூங்காவின் மூஞ்சியில் ஒட்டிக்கொண்டிருந்த நெய்த்தோரை (அரத்தத்தை)ப் பார்த்து, அது தன் பிள்ளையைக் கடித்துக் கொன்றுவிட்டது என்று நினைத்துக்கொண்டு, அம் மூங்காவை அடித்துக் கொன்று விட்டாள். பிறகு இல்லத்திற்குள் போய்த் தொட்டிலிலே நலமாய்த் தூங்கிக்கொண்டிருந்த பிள்ளையையும், தொட்டிற் பக்கம் மூங்கா பற்றிக்கொன்ற பாம்பையும் பார்த்துச் சாலவும் வருந்தினள்."*

* "திராவிடத்தாய்," பக்கம் 97; ஞா. தேவநேயன், எம். ஏ.,

தெலுங்கில்—இக்கதைப் பகுதி :

(தமிழில் முன்னர்க் கூறியதே)

"ஒக்க ஊரிலோ ஒக்க ப்ராஹ்மணுடு கலடு. அதனி வத்த ஒக்க முங்கி உண்டெனு. அதடு தான்னி பஹூ ஜாக்ரதகா பெஞ்ச்சுதூ உண்டெனு. ஒக்கநாடு அதனிகி ஒக்க ஊரிகி போவலசின பனி வச்சினதி. கனுக, ஆ முங்கினி தன பார்யக்கு ஒப்பகிஞ்சி போயெனு. மரு நாடு ஆமெ தன பிட்டனு தொட்டலலோ நித்ரபுச்சி, ஆ முங்கினி தொட்ல தக்கிர காவலி உஞ்ச்சி, நீள்லு தோடுகெனி ராவடானக்கு வெள்ளினதி. அந்தலோ, பிட்ட நித்ரிஸ்தூ உண்டே தொட்லவத்திக்கி ஒக்க பாமு வச்செனு. ஆ முங்கி ஆ பாமுனு பட்டி துண்டெமுலு சேசி பாரவேசி, ஜரிகின சங்கதி தல்லிக்கி தெலியச்சேயடானக்கு ஆமெவத்திக்கி வெள்ளினதி. அப்புடு, ஆமெ முங்கி மூத்திக்கி அண்டுக் கொனி, உன்ன நெத்துரு சூச்சி, அதி தன பிட்டனு கரிச்சி சம்பினதி அனி தலஞ்ச்சுக்கொனி, ஆ முங்கினி கொட்டி சம்பெனு. தருவாத்த இண்டிக்கி போயி, தொட்லலோ சுகமுகா நித்ரபோத்தூ உன்ன பிட்டனுன்னு சூச்சி, சாலா துக்கபடெனு."○

(உஞ்சு—உண்டு என்பதன் பிறவினை. உன்ன = உள்ள).

பிற ஆதாரங்கள் :

கதைப் பகுதிகள் மாத்திரமன்றி ஆந்திர நாட்டில் வழங்கப்படும் ஊர்ப்பெயர்களும் இடப் பெயர்களுங்கூடத் தமிழ்ப் பெயர்களாகவே இருக்கின்றன. இன்றுள்ள ஆந்திர நாடு ஒரு காலத்திலே—முற்காலத்திலே—தமிழ் நாடாய் விளங்கியது என்பதையே பெயர்கள் வலியுறுத்து கின்றன. தமிழ் மொழியின் ஆற்றலை ஆந்திரர்களால் முழுவதும் அழிக்க முடியவில்லை என்பதையும், தெலுங்கு

○ "திராவிடத்தாய்," பக்கம் 96; ஞா. தேவநேயன், எம்.ஏ., (சிலப்பதிகார அடைக் கலக் காதையில் காணப்படும் "பிள்ளை நகுலம் பெரும்பிறிதாக, எள்ளிய மனையோள் இனைந்துபின் செல்ல," என்னும் கதைக் குறிப்பே தெலுங்கு நாட்டவரால் பிற் காலத்திலே தங்கள் மொழியில் மேற்கூறியவாறு பயன்படுத்தப்பட்டது எனத் தெளிவாகிறது.)

தமிழினின்றும் பிரிந்து சென்றதே ஆகும் என்பதையும் அவை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆந்திரமாநிலத்து ஊர்ப்பெயர்கள் பலவும் தமிழ்ப் பெயர்களாய்த் திகழ்வதை அழகுபடத் தொகுத்துக் காட்டியுள்ளார் திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள். விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள நிலப்பரப்பு முழுவதும் ஒரு காலத்தில் தமிழ்மொழி வழங்கப் பட்ட (வழக்கிற்குட்பட்ட) நாடாக விளங்கியதாதல் வேண்டும் என்பதையே ஊர்ப்பெயர்கள் இன்றும் வலி யுறுத்திக் காட்டுகின்றன. ஊர்ப்பெயர்கள் பற்றிய விளக்கம் :

"தெலுங்கர் தமிழ்நாட்டிற் குடியேறவே, தனித் தமிழ் நிலையங்களாயிருந்த திருவேங்கடம், திருக்காளத்தி, திருத்தணிகை முதலிய வடபால் சிவநகரங்கள் இருமொழி நிலையங்களாய் மாறிவிட்டன. இன்று தெலுங்கு நாட் டிற்கு அருகிலுள்ள தமிழரும், தெலுங்கையும் கற்றுத் தெலுங்கராய் மாறி வருகின்றனர்.

தெலுங்கு இப்போது மிகுந்த வடமொழிக் கலப் புள்ளதாயிருந்தாலும், ஒரு காலத்தில் வடமொழி மணமே இல்லாத கொடுந்தமிழ் வகையாயிருந்ததே. இன்றும் தெலுங்கு நாட்டூர்ப் பெயர்கள் பல ; ஊர் (பாலூரு), புரம் (அனந்தபுரம்), மலை (அனிமல), குடி (தேவகுடி), கோடு (முனுகோடு), கோட்டை (கண்டிகோட்ட), பேட்டை (நேக்குணம்பேட்ட), பள்ளி (கொத்தபல்லி), குன்றம் (பெல்லம் கொண்ட), கல் (மின்னக்கல்லு), பாலம் (நாயனிப் பாலம்), கூடம் (நடிகூடெம்), குளம் (ஸ்ரீகாகுளம்), வீடு (பட்லவீடு), மந்தை (எல்லமந்த), புரி (நெமலி புரி), சாலை (கண்ட்டசால), பட்டினம் (விசாகப் பட்ணம்), பாடு (தாவிப் பாடு), தலை (குர்னூதல) எனத் தனித் தமிழ் ஈற்றனவாயே யுள்ளன."+

தெலுங்கு மொழிப் பற்றும் பிறமொழி வெறுப்பும் உடையோருள் சிலர், தெலுங்கு தமிழுக்குக் கடன்பட்ட மொழி என்னும் உண்மையைக் கூறிவிட்டால் தெலுங்கு

+ "திராவிடத்தாய்," பக்கம் 87; ஞா. தேவநேயன், எம்.ஏ.,

மொழியின் சிறப்பே மறைந்து போய்விடுகின்றது எனக் கருதிப் பொருந்தாத விளக்கங்களையும் கருத்துகளையும் தெரிவித்து வருகின்றனர். வடமொழியாளர்களைப் பார்த்துத் தெலுங்கர்களுட் சிலர் இப்பொழுது புரட்டுச் செய்ய—சூடு போட்டுக்கொள்ள—ஆரம்பித்திருக்கின்றனர் எனச் சொல்வதைத் தவிர அத்தகையோரைப் பற்றி வேறொன்றும் நாம் கூறுவதற்கில்லை. அவ்வாறு பேசுவோரைப் பார்த்து எள்ளி நகைக்கும் முறையில்தான், தமிழ்மொழிப் பற்றுக் கொண்டவராய் அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு மறைந்த பெரியார் J. லாசரஸ் (J. Lazarus) அவர்கள் அரிய ஒரு விளக்கத்தை—உலக வழக்கொடுபட்ட உண்மையை—தெரிவித்துள்ளார். காலஞ்சென்ற வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் அவர்களும் பிறரும், சிலர் கூறும் தவருன வாதங்களுக்கு விடையளிப்பார் போன்றே பல அரிய விளக்கங்களைத் தந்துள்ளனர். விளக்கங்களாவன:

(a) "கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகள் தமிழினின்றும் பிறந்தவை என்பது ஆராய்ச்சியாளரால் முடிவு கட்டப்பட்டுள்ளது. தெலுங்கு மக்களுட் சிலர், தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலிய மொழிகள் சகோதர மொழிகளென்றும், தெலுங்கு முதலிய மொழிகளுக்குத் தாய் தமிழ் அன்று என்றும் இப்பொழுது கூறுகின்றனர். இவ்வாறு கூறுவது, வளர்ந்த பிள்ளைகளில் சிலர் தங்களுக்கும் பெற்றோருக்கும் (அதாவது மரபிற்கும்) எத்தகைய உறவும் இல்லை (தொடர்பில்லை) என மறுத்துக்கூறும் பழம் பல்லவியைப் போன்றதேயாகும்."§

(b) "வடமொழி தமிழொடு மருவுமுன்னே, அம்மொழியினின்றும் பாகத பாஷைகள் பல கிளைத்துத் தனித்தனி பிரிந்தன. இதற்கிடையிலேதான் தமிழ் மொழியினின்று தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவமென்னும் வழி மொழிகள் கிளைத்தன.

§ "South Indian Research"—VOL I, Rev. J. Lazarus, B.A., D.D., (This is the old song of grown up children turning proud and disowning all relationship to their ancestry).

"இவ் வழி மொழிகளிலே தெலுங்குதான் வடமொழியொடு மிகவுங் கலந்து விசேடமான திருத்தப்பாடடைந்தது; தனது நெடுங்கணக்கையே திருத்தி விரித்துக் கொண்டது; பல்லாயிரஞ் சொற்களையும் மேற்கொண்டது; வடசொல் இலக்கணத்தையும் மிகத் தழுவிக்கொண்டது. தெலுங்கு இலக்கணமெல்லாம் தமிழ்ப்போக்கில் இயங்க வேண்டியிருக்க, அதை விடுத்து வடமொழிப் போக்கை அனுசரிக்கப் புகுந்தன. புகுதலும் வடமொழியிலே தெலுங் இலக்கணம் அமைவதாயிற்று. இஃது இடைக்காலத்தி லிருந்த நன்னயபட்டர் ஆதிய பிராமண வையாகரணர்கள் செய்த தவறு. இத்தவறு காரணமாகத் தெலுங்கு, தமிழின் வழிமொழி அன்றென்பது அசங்கதமாம்." +

தெலுங்கு தமிழினின்று பிரிந்து வளர்ச்சியடைந்தது என்பதை அறிந்திருந்தும், தமிழையும் பிற மொழிகளையும் சிறப்புடைய மொழிகளெனத் தெலுங்கர் சொல்லத் தயங்குகின்றனர்.

"இனி, தெலுங்கர் தமது மொழியைக் குறித்து, 'உச்சாரணம் சரியில்லாமல், அர்த்தம் தெளிவாயில்லாமல், தெரிந்தும் தெரியாமல் செவிக்குத் துன்புறுத்துகின்ற பாஷைகள் மனோஹரமான சொற்களால் முத்தம் ஒழுகுகின்ற தெலுங்குக்குச் சரியாகுமா?' என்று உரைத்திருக்கின்றனர்." ○

காலப்போக்கில் சமஸ்கிருதத்தின்பால் (வடமொழி) கொண்ட காதல் காரணமாகப் பிற மொழிகளைப்பற்றித் தெலுங்கர் குறைபடக் கூறினார்கள் என்பதை வலியுறுத்துவதற்கான சான்றுகள் நிரம்ப உண்டு. தெலுங்கு மொழியில் தமிழிலுள்ளவாறே'ழ'கரம் ஒரு காலத்தில் வழக்கிலிருந்தது என்பதைக் கல்வெட்டுச் செய்தி ஒன்றின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. தெலுங்கு, தமிழினின்று பிரிந்து சென்று, அதனையே முதன்மையாகக்கொண்டு (எழுத்துகளையும் சொற்களையும் இரவலாகப் பெற்று) வளர்ச்சி அடைந்தது என்பதற்கு இதனைக்காட்டிலும்

+ "தமிழ் மொழியின் வரலாறு," பக்கம் 30-31; வி. கோ. சூ.

○ "தென்மொழிகள்," பக்கம் 55; வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

சான்று வேறு காட்டத் தேவையில்லை. காலப்போக்கில் 'ழ'கரம் எவ்வாறு திரிந்து பின்னர் மறைந்தது என்பதனையும் கல்வெட்டுச் செய்தி தெளிவாகவே தெரிவிக்கின்றது. செய்தி வருமாறு :

"தெலுங்கில் பண்டு 'ழ'கரம் வழங்கி வந்துள்ளது, யுத்தமல்லனுடைய (898) பெஜவாடா சாசனத்தில் 'அழிபுட,' 'ழஸ்ஸி' என்னும் சொற்கள் 'ழகார' லிபியில் எழுதப்பட்டுள. இரண்டாங் குலோத்துங்க சோழனுடைய பொந்துவக்ராமத்துச் சாசனத்திலும் (1134) 'கழ்க', 'நழுமு' 'ஆட்ட மொழிநிகுண்ட்ட' முதலிய சொற்களில் 'ழ'காரம் எழுதப்பட்டுள்ளது. இதனால் சாசனத்தில், கி. பி. 12-ஆம் நூற்றாண்டிலும் தொல்வழக்கின்படி 'ழ'காரம் எழுதப்பட்டுள்ளது என்று அறியலாகும். ஆயினும், 11-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே 'ழ'கரம் வழக்கில் 'ட'கரமாயும், 'ர'கரம் 'ன'கரம் முதலியனவாயும் திரிந்துவிட்டதாகலின், இலக்கியங்களில் 'ழ'கரம் காணப்படவில்லை. அதனால், இலக்கணவாசிரியர் கூறிற்றிலர்."[○]

"தென்மொழிகள்," பக்கம் 61; வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

# 5. கன்னட மொழியில் தமிழ்ச் சொற்கள்.

இந்திய மொழிகள் பலவற்றிற்கும் தென்னிந்திய மொழிகள் அனைத்திற்கும் தாய் மொழியாய் விளங்கும் பெருமை தமிழ் மொழிக்கே உண்டு என்பதை மொழிநூல் வல்லுநர்கள்— ஆராய்ச்சி அறிவு மிகுந்து வரும் இந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்களாய் விளங்கும் சான்றோர்கள்—தெரிவித்து வருகின்றார்கள். தமிழ் தாய்மொழி என்பதும், பிற தென்னிந்திய மொழிகள் சேய்மொழிகளேயாம் என்பதும் தெளிவாக்கப்பட்டுவிட்ட விளக்கங்கள் என்றே (உறுதியாக்கப்பட்டுவிட்ட உண்மை முடிபுகள் என்றே) கொள்ளப்படுதல் வேண்டும். மொழிப்பற்று மிகுந்து வரும் நிலையில் இந்திய தேசத்திலுள்ள ஒவ்வோர் இனத்தவரும் தமது மொழியே பழமை மிக்கது எனக் கூறுவதும், தமிழுக்கோ அன்றிப் பிற மொழிக்கோ அந்த மொழி (தங்களுடைய மொழி) கடன்பட்டது அன்று எனக் கூறுவதும் இந்த நூற்றாண்டிற்கு உரிய நாகரிகப் பேச்சு என்றே கருதுகின்றனர். இத்தகையோர் உண்மையை என்றேனும் வெளிப்படுத்தவேண்டிய நிலைமைக்கு உள்ளாக்கப்படுவர் என்பது உறுதி.

மொழிகளின் வரலாற்றைப்பற்றி ஆராய்ந்து விளக்கங்களைக் கூறியுள்ள ஜெஸ்பர்சன் (Otto Jespersen) அவர்கள், 'ஒரு மொழியே காலப்போக்கில் சிதைந்து பல மொழிகளாகப் பிரிந்து வளர்ச்சியுறும் என்பது மறுக்க இயலாத உண்மையாகும்,' எனப் பிற மொழிநூல் வல்லுநர்கள் தெரிவித்துள்ள முடிவையும் ஆதாரமாகக் கொண்டு

தம்முடைய கருத்தைத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், தமிழ் மொழி ஒன்றினின்றே பல தென்னிந்திய மொழிகள் (தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு.....போன்றவை) பிரிந்து சென்று வளர்ச்சி பெற்று இன்றுள்ள நிலையில் சமஸ்கிருதக் கலப்பு மிகுதியுடன் காட்சியளிக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம். ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களே வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டும், வேறுபாட்டை விரும்பியும் பிரிந்து சென்று விட்டார்கள்; காலப்போக்கில் வெவ்வேறு இன மக்களெனத் தங்களைப்பற்றி உலகோர் எண்ணுமளவிற்குத் தாங்களும் மாறிவிட்டதோடன்றித் தங்கள் மொழிகளையும் மாற்றிவிட்டார்கள். இது மறுக்கவியலாத உண்மையாகும் இந்த நிலையிலேதான், தாங்கள் தங்கியிருக்கும் இடங்களின் தட்ப வெப்ப நிலைகள், சுற்றுச்சார்புகள் (சூழல்கள்), பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு தனித்தனி நாகரிகம் பெற்றவர்களாய்-நாகரிகத்தில் வேறுபட்டவர்களாய்—அவர்கள் (பல இன மக்களும்) வாழ்ந்து வருவதை, இன்று நாம் கண்கூடாகக் காணுகின்றோம். மேற்கூறிய விளக்கமே மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சி அறிவு வளர்ச்சிக்கும் துணை செய்யவல்லதாகும். தமிழ் மொழியிலிருந்தே பிறமொழி எழுத்துகளும், இலக்கிய விளக்கங்களும், கதைகளும் தோன்றி வளர்ச்சியுற்றன என்னும் உண்மையை அழகுபடப் புலவர் வீரபாகுப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :

"தமிழ் மொழியிலிருந்தே பலவகை மொழிகளும் எழுத்துகளுந் தோன்றின என்று கூறுங்கூற்றுப் பாஷாபிமானங்கொண்டு எழுந்ததன்று நன்கு ஆராய்ச்சி செய்யுமிடத்துக் காணப்படும் உண்மை இதுதான். மேனாட்டு ஆராய்ச்சியாளர் பலருடைய அபிப்பிராயமும் இதுதான். ஆனால், அவர்கள் எக்காரணம் பற்றியோ, தங்களது ஆராய்சசியை மழுப்பலாக்கிவிட்டனர்."*

* "தமிழும் தமிழரும்,"பக்கம் 51; புலவர் வீரபாகுப் பிள்ளை.

பழங்கன்னடம், புதுக்கன்னடம் என்னும் பிரிவுகள் ஏற்படுவதற்கு முன்னர்த் தமிழ் மொழி ஒன்றே தென்னாடு முழுவதும் வழக்கிலிருந்தது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மொழியிலுள்ளவாறே பிற தென்னிந்திய மொழிகளிலும் பழைமையான இலக்கிய இலக்கண நூல்கள் காணப்பட வில்லை என்பதும், பிறமொழிச் சொற்களுள் பெரும்பாலன தமிழ்ச் சொற்களாகவோ, அன்றிச் சிதைத்து உருமாற்றி வழங்கப்படும் சொற்களாகவோ உள்ளன என்பதும், மேற் கூறிய உண்மையை வலியுறுத்தப் போதிய காரணங்களாக அமைகின்றன. ஒன்றே இனமாயினும், மொழியாயினும் — பலவாகப் பிரிவது இயற்கையின் நியதி (உயிரினங்களுக்கும், மொழியினங்களுக்கும் இது பொருந்தும்), என்னும் அரிய உண்மையை இனியும் மறுக்கவியலாது இந்த நியதியின் அடிப்படையிலேதான் தமிழினின்றும் பல மொழிகள் * பிரிந்துசென்று வளர்ச்சி அடைந்துள்ளன. இந்த நூற்றாண்டில் தெனிந்திய மொழிகளிலே காணப்படும் சொற்களின் ஒற்றுமை, இலக்கண அமைப்பு, மொழிகள் வழங்கப்படும் (பேச்சு வழக்கு — அதாவது உலக வழக்கு) முறைகள் முதலியவற்றைக் கொண்டு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் இன்றுள்ளவாறே தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகள் தனித்தே (பிரிந்தே) இருந்தன — இலக்கியவளம் பெற்றுச் சிறந்திருந்தன — எனக்கூற இயலவில்லை. பண்டு மொழிப்புலமை பெற்றுச் சிறப்புற வாழ்ந்த அறிஞர்களுள் சிலரும், இன்று வாழ்கின்ற சான்றோர்களுள் பலரும், தாம் கண்ட முடிவுகளை அழகுறத் தெரிவித்துள்ளனர். கன்னடம் தமிழ் மொழியினின்றே பிரிந்து சென்று தெலுங்கைப் போலவே வளர்ச்சி

* "The Tamils who inhabited the western coast and the table-land of Mysore, which were separated from the rest of the country by high mountains, differed in their speech from the main body of the Tamils, so much in course of time, that their languages became distinct dialects of Tamil, and in this manner the modern Malayalam and Canarese languages have been formed. Consequenthy the limits of Tamilakam have become much narrower than they were formerly".
"The Tamils Eighteen Hundred years Ago", Page 238;
—V. Kanakasabhai Pillai.

யடைந்த ஒரு மொழியாகும் என்பதை, அவர்களுடைய முடிவுகள் தெள்ளத் தெளியத் தெரிவிக்கின்றன. அவை வருமாறு:

(1) "நன்னயசேனர் என்னும் கன்னடச் சைனர் (கி. பி. 1112) 'தர்மார்த்தா' என்னும் நூல் செய்துள்ளார். இவர், 'கன்னடத்தோடு சமஸ்கிருதத்தைக் கலந்து வழங்குவது, நெய்யோடு எண்ணெயைக் கலப்பது போலும்' என்று குறிப்பிட்டுள்ளார். சமக்கிருதம் நுழைவதை எதிர்த்து நிற்க, அதனால் (கன்னடத்தால்) இயலவில்லை. கன்னட மொழியின் இலக்கியங்களைப் பின் நோக்கிப் பார்த்துக் கொண்டு செல்வோமாயின், கன்னட மொழியின் இலக்கணம் தமிழொடு மிக நெருங்கிய உறவுடையதாயிருத்தலைக் காணலாம் "×

(2) "கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டுத் தெலுங்கு, துளு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளும் ஒரே எழுத்துமுறை உடைய ஒரு மொழியாய் இருந்தன. அதே சமயம் தெற்கே தமிழும் மலையாளமும் ஒரே எழுத்துடைய ஒரே மொழியாய் இருந்தன. இதனால், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஐந்து திராவிட மொழிகளும் இரண்டு மொழிகளாகவே இருந்தன என்பதை அறிகிறோம். இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டுத் தென்திராவிடம் அதாவது தமிழ்-மலையாளத்துக்கும், வடதிராவிடம் அதாவது தெலுங்கு–துளு-கன்னடத்துக்கும் மிகுதி வேற்றுமை இல்லாதிருந்தது."*

சயங்கொண்டார் 'கலிங்கத்துப்பரணி' என்னும் நூலைக் கி. பி. 12 ம் நூற்றாண்டில் இயற்றினர். இதில் கருநடரைப் பற்றிக் (கன்னடியர்) குறிக்குமிடத்துக் கன்னட மொழியில் தமிழ்ச் சொற்கள் கன்னடியரால் கலந்து வழங்கப்பட்டன என்னும் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை தமிழ்வேறு

× "திராவிட மொழிகளும் இந்தியும்," பக்கம் 13; ந. சி. கந்தையா பிள்ளை.

* "தென்னாடு," பக்கம் 42; கா. அப்பாதுரை.

கன்னடம் வேறு எனப் பிரித்தறியும் நிலை இல்லை என்பது பெறப்படுகின்றது. பாடற்பகுதி வருமாறு:

"மழலைக்குறு மொழியிற்சில
வடுகும்பல தமிழும்
குழறித்தரு கருநாடியர்
குறுகிக்கடை திறமின்."

முற்காலத்தில் தெலுங்கும் கன்னடமும், வடுகு என்னும் ஒரே பெயரால் அறியப்பட்டன என்பதும் தெளிவாகின்றது.

(3) "இவ்வாறே கன்னடமுந் தெலுங்கையொட்டிப் பெரிதும் இயங்கினமையான், அது போலவே பல்லாற்று லுந் தன்னைச் சீர்ப்படுத்திக்கொண்டது. இதனாலன்றோ 'பழங் கன்னடம்' என்றும் 'புதுக் கன்னடம்' என்றும் அஃது இருவேறு பிரிவினதாகி இயங்குகின்றது? பழங் கன்னடத்தைத் தமிழினின்றும் பிறந்ததெனக் கூறும் கன்னடப் புலவர் பலர் இன்றுமுளர்.○

(4) "வடநாட்டு மொழிகளில் காணப்படும் மத்திய கால இந்து ஆரியச் சொற்களுள் 25 சதவீதமே பழைய இந்து ஆரியத்தினின்றும் வந்தவை என டாக்டர் காத்திரி (Dr. Katre) என்பார் கூறுகின்றார். மீதிச் சொற்கள் உள் நாட்டுச் சொற்களேயாதல் வேண்டும். வடநாட்டு மொழி களில் மாத்திரமன்றி சமஸ்கிருத மொழியிலும் பற்பல தமிழ்ச் சொற்கள் உரு மாற்றத்துடன் காணப்படுகின்றன. ஆரியத்துக்குப் பல சொற்களை உதவி அதனைச் சீர்திருத்திச் சமஸ்கிருதமாக்கியது தமிழே."+

**சில சொற்கள்:**

தமிழ் மொழிச் சொற்களுட் பெரும்பாலன இன்றும் கன்னட மொழியில் சிதைக்கப்படாமலும், சில சிதைக்கப் பட்டும், வேறு பல உரு மாற்றப்பட்டும் காட்சியளிக்கின்றன. இரு மொழிகளிலுமுள்ள ஒப்புமையுடைய சொற்கள், தொடர்கள் ஆகிய யாவும் மேற்கூறிய உண்மையையே

○ "தமிழ் மொழியின் வரலாறு," பக்கம் 31; வி. கோ. சூ.
+ "பழைய இந்தியாவில் மக்கள் வாழ்க்கை," (ஆங்கில நூல்) P.T. சீனிவாச ஐயங்கார்.

(முடிவையே) வலியுறுத்துகின்றன. கன்னட மொழியில் காணப்படும் தமிழ்ச் சொற்களுட் பலவும், கதைப் பகுதி ஒன்றும் தொகுத்துக் கீழே காட்டப்பட்டுள்ளன. கதைப் பகுதி, தெளிவுற அமையவேண்டும் என்னும் காரணத்தை முன்னிட்டு, தமிழ்-கன்னடம் ஆகிய இரு மொழிகளிலும் தரப்பட்டுள்ளது. தமிழினின்றும் பிரிந்து சென்ற கன்னடம் சமஸ்கிருதக் கலப்பால் குறிப்பிடத் தக்க அளவிற்கு மாறுபட்டு விட்டிருந்தாலுங்கூட, அது முழுவதும் மாறுபட்டு (மாற்றப்பட்டு) விடவில்லை என்பதைக் கதைப் பகுதியே தெளிவாகக் காட்டுகிறது. விளக்கங்கள் பின் வருவனவாம்:

| தமிழ் | கன்னடம் | தமிழ் | கன்னடம் |
|---|---|---|---|
| அனல் | அனலு | பற்று | பத்து |
| எருக்கு | எர்கெ | மற்று | மத்து |
| உரிஞ்சு | உஜ்ஜு | தலை | தலெ |
| யாடு, ஆடு | ஆடு | மனை | மனெ |
| காக்கை | காகெ | புகை | ஹொகெ, புகை |
| கா (கானம்), கான் | கா | எறி (தல்) | இறி |
| | | எலி | இலி |
| கல் | கல்லு | தெளி | திளி |
| கொடு (வளைவு) | குடு | செவி | கிவி |
| கள்வன் (கள்ளன்) | கள்ள | உடல் | ஒடல் |
| | | உடைமை | ஒடெமெ |
| களம் | கள, கண | சொறி | சுறி |
| சிக்குதல் (சிக்கெனப் பற்றி) | சிக்கு | கொறி (செம்மறியாடு) | குறி |
| | | எண்கள்:* | |
| மக்கு (முட்டாள்) | மங்கு | ஒன்று, ஒரு, ஓர் | ஒண்டு, ஓர் |
| பெயர் | பெஸர், ஹெஸரு | இரண்டு, இரு, ஈர் | எரடு, ஈர் |
| நாயிறு(ஞாயிறு) | நேஸர் | மூன்று, மூ | மூரு |
| பல் | ஹல், ஹல்லு | நான்கு, நாலு, நால் | நாலு, நால்கு, நால் |
| பால் | ஹாலு | | |

* "A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages," page 368; —By Rev. Robert Caldwell.

| | | | |
|---|---|---|---|
| புலி | ஹுலி | ஐந்து, அஞ்சு, ஐ | ஐது, ஐ |
| போகு (தல்) | ஹோகு | ஆறு, அறு | ஆரு, அர |
| அவன் வந்தான் | அவனு பந்தனு | ஏழு, எழு | ஏளு, எ |
| அவன் வந்தானா? | அவனு பந்தனே? | எட்டு, எண் | எண்டு, எண் |
| வேம்பு | பேவு | ஒன்பது, ஒன்பான், தொள் | ஒம்பத்து, ஒம்பயி, தொம் |
| வா | பா | | |
| ஒன்று | ஒந்து | பத்து, பான், பதின் | பத்து, ஹத்து, பட்டு, வட்டு, பதின், பதி |
| பன்றி | பந்தி, ஹந்தி | | |
| பொன்று (தல்) | பொந்து, ஹொந்து | நூறு | நூரு |
| புற்று | புத்து | | |

[எண்கள் பகுதி தமிழாக்கப்பட்டிள்ள பகுதி—உரோமன் லிபியிலுள்ள உச்சரிப்புப்படியே எழுதப்பட்டதாகும்.]

மைசூர் இராஜ்ஜியத்திலுள்ள அரிசிக்கரை, காடூர், குனிகல், சித்தாபூர், சென்னப்பட்டணா, தொட்ட பல்லபூர், நஞ்சங்கூடு, புத்தூர், மட்டூர் முதலிய ஊர்ப்பெயர்களெல்லாம் தமிழ்ப்பெயர்களாகவே விளங்கி வருவதை இன்றுங் காணலாம்.

## கதைப் பகுதி

**விதைக்கிறவன் உவமை: (கன்னடம்)**

"இகோ, பித்துவவனு பித்த ஹொரட்டனு. அவனு பித்துவாக செலவு மார்கத ஹத்தர பித்து. பக்ஷிகளு பந்து அதன்னு திந்து பிட்டவு. பேரே கெலவு பஹள மண்ணு இல்லத பண்டெஸ்தள களல்லி பித்து; அதக்கெ ஆளவாத மண்ணு இல்லத காரண, சங்கடலெ மொளியித்து; ஆதரெ சூர்யனு மூடிதாக அது பெந்து, அதக்க பேரு இல்லாததரிந்த ஒணகி ஹோயித்து. பேரே கெலவு முள்ளுகளு மேலெ பித்து; முள்ளுகளு பெளெது, அணிகி சிதவு. பேரே கெலவு ஒள்ளே பூமிய மேலெ பித்து, ஒந்து நூரஷ்டு, ஒந்து அரவத்தஷ்டு, ஒந்து மூவத்தஷ்டு பலவகாட்டத்து. கேளுவதக்கெ கிளவிகளுள்ளவனு கேளலி."*

* 'மத்தேயு', பக்கம் 79, 80; 13: 3—9. (விவிலிய நூல்)

இதன் மொழி பெயர்ப்பு (தமிழ்):

"இதோ, வித்துகிறவன் வித்தப் புறப்பட்டான். அவன் வித்துகையில் சில வழியருகே விழுந்து, பறவைகள் வந்து அதைத் தின்றுவிட்டன. வேறே சில, மிகுந்த மண் இல்லாத பாறையிடங்களில் விழுந்தது. அதற்கு ஆழமான மண் இல்லாத காரணமாய் விரைந்து முளைத்தது. ஆனால், வெயில் ஏறின போது அது வெந்து, அதற்கு வேரில்லாததால் உணங்கிப் போயிற்று. வேறே சில, முட்கள் மேலே விழுந்தது. முட்கள் வளர்ந்து அதை நெருக்கிவிட்டன. வேறே சில, நல்ல நிலத்தில் விழுந்து ஒன்று நூறாகவும் ஒன்று அறுபதாகவும் ஒன்று முப்பதாகவும் பலன் கொடுத்தது கேட்கிறதற்குச் செவிகளுள்ளவன் கேட்கக் கடவன்."†

(குறிப்பு:— மெய்ம்மறை—சத்தியவேதம்—என்னும் கிறித்தவ மறையின் மொழி நடை விடைத்தொண்டராதலால், மேற்கூறிய உவமையில் அஃறிணைப் பன்மை எழுவாய்கள் ஒருமை வினையொடு முடிந்தன; பன்மைச் சொற்கு ஒருமைச் சொல் வந்தது).

கன்னட மொழி இலக்கணம் இன்று சமஸ்கிருத மொழி இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சியடைந்து வருகிறது. கன்னடப் புலவர்களுள் சிலர், 'தேவ பாஷை' யிடம் கொண்ட பற்றுக்காரணமாகப் பல சமஸ்கிருதச் சொற்களை ஏற்றுக்கொண்டு, கன்னட மொழியை வளர்க்கத் தலைப்பட்டனர். இவ்வாறு காலப் போக்கில் சமஸ்கிருதச் சொற்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் கன்னட மொழியுடன் கலந்து காணப்பட்ட தமிழ்ச் சொற்கள் பலவும் பயனற்றவை எனக் கருதித் தள்ளப்பட்டு விட்டன. தமிழினின்றும் பிரிந்து சென்ற கன்னடம், 'ழ' கரத்திற்குப் பதிலாக 'த' 'ர' 'ற' ஆகிய சமஸ்கிருத எழுத்துகளை ஏற்றுக்கொண்டது. அளவு கடந்த நிலையில் சமஸ்கிருதச் சொற்களையும், இலக்கிய

† "திராவிடத்தாய்," பக்கம் 80; திரு. ஞா. தேவநேயன்.

இலக்கண விளக்கங்களையும் பிற்காலத்தே தோன்றிய புலவர்களும் ஆசிரியர்களும் கன்னட மொழியிலே சேர்த்து வழங்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்த அவல நிலையைக் கண்ணுற்ற புலவர் அண்டய்யன் என்பார், சமஸ்கிருதச் சொற்களைக் கலவாமலே காவியங்களைக் கன்னட மொழியில் செய்யவேண்டும் எனத் தெரிவித்துச் சென்றார். எனவே, சமஸ்கிருதச் சொற்கள் கன்னடத்தில் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு முன்பு கன்னட மொழி — பழங் கன்னடம் — தமிழ் மொழியினின்றும் வேருய்ப் பிரிந்து நின்று இயங் காத அளவிற்கு ஒரு மொழியாகவே — தமிழாகவே — விளங்கியது என்பது தெளிவாகின்றது நயசேனன் என்னும் புலவர், சமஸ்கிருதச் சொற்களைக் கன்னடத் தோடு கலப்பது எண்ணெயை நெய்யுடன் கலப்பது போன்றதேயாம் எனத் தெரிவித்துச் சென்றார் (இது முன்னரே காட்டப்பட்டது). அவர்கள் கூறிச்சென்ற கருத்துகளை வே. வேங்கடராஜுலு ரெட்டியார் 'அச்ச கன்னடக் காவியம்' என்னும் தலைப்பில் கீழ்க்காணுமாறு தொகுத்துக் காட்டியுள்ளார்:

"வடமொழிச் சொற்களைக் கன்னடச் சொற்களோடு ஒருங்கு சேர்த்து வழங்குதல் தகுவதன்று; அது எண்ணெ யும் நெய்யும் கலந்தது போல் இருக்கும் * என்று நயசேனன் என்பவர் கூறியிருக்கின்றார்; நாகவர்மரும் இவ்வாறே பழித்துக் கூறியுள்ளார். 'வடசொற்களைச் சேர்க்காமலே காவியஞ் செய்தல் வேண்டும்,' என்று புலவர்கள் வேண்ட, அவர் கருத்தின்படி அண்டய்யன் என்பவர் அச்சகன்னடத்தில் 'கப்பிகரகாவம்' என்னுங் காவியம் ஒன்றைக் கி. பி. 1235–இல் இயற்றியிருக் கின்றார்."°

---

* நயசேனன் கன்னடத்தில் கூறியுள்ள பாடல்:—

"ஸக்கதமம் பேழ்தொட நெறெ
ஸக்கதமம் பேழ்கெ சுத்த கன்னடதொள்தந்
திக்குவுதெ ஸக்கதங்கள
தக்குதெ பெரஸல்கெ க்ருதமுமம் தைலமுமம்."

° "தென் மொழிகள்" பக்கம் 29; வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

கன்னட நாட்டில் இன்றளவும் சிறிது மாற்றத்துடன் வழங்கப்பட்டு வரும் கோவலன் — கண்ணகி வரலாறே, கன்னட நாடு அன்றைய தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய் விளங்கியது என்பதையும் கன்னட மொழி தமிழ் மொழியின் ஒரு பிரிவே ஆகும் என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்க வல்லதாம். இன்று அங்கே கதையாய் வழங்கப்படும் வரலாற்றுப் பகுதி வருமாறு:

"கன்னட நாட்டில், கோவலனைக் கொய்லா (Coila) என்றும், கண்ணகியைச் சந்திரா என்றும் (Chandra), மாதவியை மௌலீ (Moulee) என்றும் வழங்கினர். கொய்லா தன் மனைவியைத் துறந்து மௌலீ என்ற கணிகையின் வசமாய் அவளது பொன் மாலை பெற்று அவளுக்குக் கணவனானான். சிலவாண்டு கழித்து அக்கணிகையைத் துறந்து, மனைவி சந்திராவுடன் மதுரை மாநகர் வந்து, அங்கே இடைச்சி யொருத்தியால் பெரிதும் உபசரிக்கப் பெற்றனன். அரசன் தேவியின் வளையைக் கவர்ந்தவன்......................................................................................................கணவனைத் தருமாறு சிவபிரானைப் பிரார்த்தித்தனள் சந்திரா. அதற்கு இரங்கிய சிவபிரானது அருளால் அவ்வுடலங்கள் ஒன்றுகூடி அக் கொய்லனை உயிர்ப்பிக்கச் செய்தன. உடனே சந்திராவும் கணவனும் தம் நகரம் வந்து சேர்ந்து வாழ்ந்தனர் — என்பது வரலாறு "×

கன்னட மொழிப்பற்றும் தமிழ் மொழியைக் குறைபட மதிப்பிடும் உள்ளமும் கொண்ட புலவர்களுள் சிலர், கன்னடம் தமிழினின்று பிரிந்து சென்று வளர்ச்சியடைந்தது என்றோ, அன்றிப் பிறமொழிச் சார்பினால்-தமிழ் மொழியால்–வளர்ச்சியுற்றது என்றோ கூறி விடுவதனால் கன்னட மொழிக்கே இழுக்கைத் தேடித் தந்துவிடுவதாகக் கருதித்தவறுபடப் பலவாறு பேசியும் எழுதியும் வருகின்றனர்; பொருந்தாத விளக்கங்களைத் தொகுத்து

× "கட்டுரை நவமணிகள்" பக்கங்கள் 54, 55; மு. இராகவையங்கார். (இது பற்றிய குறிப்பு Freres என்னும் ஐரோப்பியரால் எழுதப்பட்ட "Old Deccan Days" என்ற நூலில் காணப்படுகிறது.)

நூல்கள் வாயிலாக வெளியிடுகின்றனர். மறைந்தொழிந்தது (இறந்துபட்டது) சமஸ்கிருத மொழி. எனினும், அம்மொழி வெறி கொண்டவர்களாய் வாழும் புலவர் சிலரைப் பார்த்து அவரைப் போன்றே மொழி சம்பந்தமான பொருந்தாக் கதைகளைக் கட்டிவிடும் அளவிற்குக் கன்னடியர் பலர் துணிவு கொண்டு விட்டனர். இது காலத்தின் கோலமே அன்றி வேறன்று. சென்னைப் பல்கலைக் கழகத்திலே கன்னட மொழித்துறைப் பேராசிரியராய்ப் பணிபுரியும் சான்றோர் எம். எம். பட்டு அவர்களும், உழைப்பால் உயர்ந்த உத்தமர் டாக்டர் மு. வரதராசனர் அவர்களும், இலக்கணக் கடலை நிலைகண்டுணர்ந்தவராய் விளங்கும் பேராசிரியர் மொ. அ. துரை அரங்கசாமி அவர்களும், மொழி வல்லுநர்களாய் விளங்கும் புலவர்கள் ஞா. தேவநேயன், சி. இலக்குவனர் போன்றவர்களும், மற்றவர்களும், தமிழ்-கன்னடம் ஆகிய இரு மொழிகளைப் பற்றியும் கூறியுள்ள விளக்கங்கள் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றை மனத்திற் பதியவைத்து, பின்னர் தமிழினின்றே கன்னடம் பிரிந்து சென்றது என்னும் முடிவைத் தயங்காது, தெளிவுடன் கூறப் பலரும் முன்வருவர். மேலே குறிப்பிடப்பட்ட புலவர்களால் தரப்பட்டுள்ள முடிவுகளும் பிற விளக்கங்களும் வருமாறு:

(a) "எட்டு: எண்

கன்னடம் — எண்டு (entu)

தெலுங்கு — எனிமிதி, எம்மிதி (பெயரடை: என)

தமிழ், மலையாளம் — எட்டு

கன்னடத்தில் உள்ள வடிவம் ஆராய்ச்சிக்குப் பெருந்துணை செய்வதாகும். எண் என்பதனோடு 'டு' விகுதி சேர்ந்தே எண்டு என்றும், எட்டு என்றும் பெயர்கள் அமைந்தன. அந்த 'எண்' என்பதே பெயரடையாக எல்லா மொழிகளிலும் வழங்குகின்றது. கன்னடத்தில் எண்வரு என்னும் சொல் எண்மர் என்னும் தமிழ்ச் சொல்லுக்கு நேரானது. அதில் 'எண்' என்னும் அடிச்சொல்

காணப்படுகின்றது. எனினும், எம்பத்து (எண்பது) என்பதில் ணகரமெய் இல்லை. இங்கு ணகரமெய் மகரமாகத் திரிந்ததெனக் கொள்ளல்வேண்டும்.

எண்ணூறு என்பது தமிழில் உள்ள தொகைச் சொல். கன்னடத்தில் அதற்கு நேரானது எண்டு நூறு என்பது. அதில் பெயரடையின்றிப் பெயரே அடையாக அமைந்துள்ளது."*

(b) "திராவிட மொழிகளுக்குள் குறிப்பிடத்தக்க அளவிற்கு, அல்லது முக்கியமான அளவிற்கு மிக நெருங்கிய ஒற்றுமை உண்டு என்பது தெளிவு. குறிப்பிடத்தக்க ஒற்றுமை கன்னடம், தமிழ், மலையாளம் முதலிய மொழிகளுக்கிடையிலே உண்டு என ஒரு வகையிலும் அவ்வாறே வழக்கிலுள்ள சில அடிப்படைச் சொற்களின் துணை கொண்டும் ஒலிப்பு முறையின் துணை கொண்டும், தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகளுக்கிடையிலே ஒற்றுமை உண்டு என மற்றொரு வகையிலும் கூறலாம்."°

(இது ஆங்கிலப் பகுதியின் தமிழாக்கம்)

(c) "வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் எள்ளளவும் தொடர்பில்லை என்று மொழிநூல் உணர்வு வாயிலாக நாம் இன்று தலை நிமிர்ந்து கூறும் ஆற்றல் பெற்றுவிட்டோம். ஆனால், நம் தமிழின் வயிற்றில் பிறந்த தெலுங்கும் மலையாளமும் கன்னடமும் வடமொழியிலிருந்து அவ்வாறு உய்தி பெறமாட்டாது அதிலேயே அழுந்தி விட்டதைக் குறித்து நாம் இரக்கம் காட்டுவதொழிந்து வேறு யாதும் செய்ய வல்லேம் அல்லோம்."§

(d) "திராவிட நெடுங்கணக்கில் சமஸ்கிருத நெடுங்கணக்கிலில்லாத எ, ஒ, ன, ற, ழ என்னும் இந்த ஐந்து சிறப்பெழுத்துக்கள் உண்டு. இவையெல்லாம் பழங்

* "மொழி நூல்" பக்கம் 198; டாக்டர் மு. வரதராசன், M. A , M.O L., Ph. D.
° "The Languages of India—A Kaleidoscopic Survey", page 42.
§ "வடமொழியும் தமிழும்", (கட்டுரை) டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி;
தெ. பொ. மீ. மணிவிழா மலர்', பக்கம் 335.

கன்னடத்தில் இருந்தன. புதுக் கன்னடத்தில் ற, ழ எழுத்துக்கள் வழக்கொழிந்து, அவற்றின் செயலை ர, ள எழுத்துக்களே செய்கின்றன. கன்னட வர்க்க எழுத்துக்களில் வல்லோசையினவும் (பருஷ), மெல்லோசையினவும்(மிருது) முற்காலத்திலிருந்து இயற்கையாக வழங்கிவருகின்றன."+

(கன்னட மொழி பற்றி எம். எம். பட்டு என்பார் தந்துள்ள விளக்கத்தின் ஒரு பகுதி)

(e) "During the Middle Tamil Period, Canarese, Tulu, Kudagu, Malayalam and Tuda and Kota sprang from the Tamil, as seperate languages..................Now the language spoken in the plateau of Mysore, Southern Mahratta country and in some parts of Andhra Pradesh as far as Bedar is Canarese. During the 6th Century A. D. as far as the place where the Bombay Presidency, Madras Presidency and Hyderaqad State meet, the Tamil dialect became a new language, as North Canarese. In modern Mysore and Coorg till 12th Century, vulgar Tamil was spoken. (Vide Nannool-Payiram). Then owing to the changes mentioned above, as far as the Nilgiri hills on the south, vulgar Tamil became South Canarese."×

இலக்கண வரம்பினை நெடுங்காலத்திற்கு முன்பே பெற்றுச் சமஸ்கிருத மொழியால் அழிக்கப்படவோ, அன்றி மாற்றப்படவோ இயலாத அளவிற்கு வளம் பெற்றுத் திகழ்ந்த (இன்றும் திகழுகின்ற) தமிழ் மொழி போலல்லாது, கன்னடமொழி சமஸ்கிருதச் சூருவளியில் சிக்குண்டு பிற தென்னிந்திய மொழிகளைப் போன்றே நிலை (உரு) குலைந்து போயிற்று என்பது அழிக்கப்பட இயலாத உண்மையாகிவிட்டது. பண்டைத் தமிழின் ஒரு பகுதியே கன்னடமாய்ப் பிரிந்து இயங்கிய நிலை மாறி, காலப் போக்கிலே வளமற்றதாகத் திகழ்ந்த கன்னடம் தனித்து நிற்கும்

+ "கலைக் களஞ்சியம்," பக்கம் 390; (தொகுதி மூன்று.)
× "Tamil Language," pp 25 & 26; Prof. S. Ilakkuvanar, M.A., M.O.L.,

ஆற்றலையும் இழந்து சமஸ்கிருத மொழிச் சொற்களையே (நூற்றுக்கு 40 அல்லது 50 விழுக்காடு) மூலங்களாகப் பெற்றுக்கொண்டு வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இத்த கைய மாறுபாட்டிற்கு (வளர்ச்சிக்கு?) சமஸ்கிருதத்திலுள்ள சமய நூல்களும், நீதி நூல்களும் வழி கோல ஆரம்பித்து விட்டன. வேற்று மொழியின் வேகத்தை–ஆதிக்கத்தை–கன்னட மொழிப் புலவர்களாலோ, அன்றி அரசர்களாலோ தடுக்க இயலவில்லை. இயலும் என்ற நிலையிலும் சமய வாதிகள் இதனைத்தடுக்க விரும்பவில்லை. இந்த உண் மையை வலியுறுத்துவதற்கான சான்றுகள் நிரம்ப உண்டு. கன்னட மொழி தமிழினின்றும் பிரிந்து சென்ற ஒரு மொழியேயாகும் என்னும் உண்மையை வலியுறுத்த மிகச் சிறந்த சான்று — விளக்கம் — ஒன்றே போதும் எனக் கொண்டு, கல்வெட்டுச் செய்தியை ஆதாரமாகக் கொண்ட விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது. இதனால், கன்னட மொழியில் தமிழிலுள்ளவாறே 'ழ'கரம் ஒரு காலத்தில் வழக்கிலிருந்தது என்பதையும், எனவே கன்னடம் தமிழே யன்றிப் பிறிதொரு மொழியாக முன்பு விளங்கவில்லை என்ப தையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

விளக்கம் :

"கன்னடத்தில் ழகாரம் றழம் என்று வழங்கும். வரி வடிவில் ழ—பெரும்பாலும் றகரம் போறலின் இப் பெயர் பெற்றது. தமிழில் ழகரத்தை மகரள என்று சொல்லுதல் ஈண்டு ஒப்பிடத்தகும். கன்னடச் சொற்களில் இயல்பாக உள்ள ளகரம் குளம் எனப்படும். வடசொற் களில் லகரத்துக்கு ஈடாக வரும் ளகரம் க்ஷளம் எனப்படும். உ–ம்: கமலம்–கமளம். வட சொற்களில் இருக்கும் ட, ட்ட, த, ர, க்ஷளம் இவ்வெழுத்துக்கட்குக் கன்னடத்தில் ழகரம் வரும். ழகரம் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு வரை வழங்கி யுளது; றகரம் 18-ஆம் நூற்றாண்டு வரை இருந்தது. இக் காலத்திலும் பழங்கன்னட நடையில் செய்யுள் இயற்று பவர் ழகர றகரங்களை வழங்குதல் உளது,"*–என்பதாகும்.

* "தென் மொழிகள்," பக்கம் 11; வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

# 6. மலையாள மொழியில் தமிழ்ச் சொற்கள்.

'சேர நாடு' என்னும் பெயர் கேரள நாடு என்னும் பெயராக மாற்றப்பட்டிருப்பது காலத்தின் கோலமும், சமஸ்கிருத மொழிக் கலப்பின் விளைவும் அன்றி வேறன்று என்பது தெளிவு. நாட்டின் பெயரை மாத்திரம் சமஸ்கிருத வாணர்களால் மாற்ற இயன்றதே தவிர, மொழியின் பெயரை மாற்றிவிட இயலவில்லை. மலைநாட்டைச் சேர்ந்தவர்கள் மலையாளிகள் என்னும் வழக்கையோ (பெயரை) அவர்களுடைய மொழி மலையாளம் என்பதையோ முறையே கேரளாளிகள் எனவும் கேரள மொழி எனவும், அவர்களால் மாற்றியமைக்க இயலவில்லை. 'பதிற்றுப்பத்து'த் தோன்றிய சேர நாட்டிலே இன்று வழக்காற்றிலுள்ள மலையாளம்' தமிழ் மொழியின் சிதைவே (திரிபே) அன்றி, வேறன்று என்பதை — மறக்க இயலாத உண்மையை — நடுவுநிலை தவருச் சான்ருேர்களாயுள்ள மலையாளிகளுள் பலரும், மொழிநூற் புலவர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர். உண்மையை மறைத்துப் பேசுவது இழிவுடைய செயலே என அவர்கள் கருதுகின்ருர்கள். எனவே, அவர்கள் உண்மையை மறைத்துப் பேசுவதில்லை. சேரர் அளம் அதாவது சேரர் நிலம் (வாழுமிடம்) அல்லது கடலைச் சேர்ந்த நிலம் எனவும்; சேரளம் எனவும் மலை அளம் (மலையாளம்?) எனவும், மலைநாடு எனவும்; மலைவாரம் என்பதை மாற்றி மலபார் எனவும், குடநாடு எனவும், மலயாண்ம' அல்லது 'மலயாய்ம' எனவும் வழங்கப்படும் வழக்குகள் யாவும் மலையாள மொழி தமிழேயாகும் என்ப

தையும்; கேரள நாடு சேர நாடேயாகும் என்பதையும் தெளிவாக வலியுறுத்துவனவாம். மலையாள மொழியின் அமைப்பு, மொழியில் காணப்படும் சொற்கள், இலக்கண விளக்கம் ஆகிய யாவும் தமிழ் மொழியினின்றும் மலையாளம் பிரிந்து சென்று வளர்ச்சியடைந்ததே என்பதை இன்றள வும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. நூற்றுக்கு 50 அல்லது 60 விழுக்காடு சமஸ்கிருதச் சொற்களை இன்று ஏற்றுக்கொண்டுள்ள மலையாளம், இடைக்காலம் வரையில் தனித்த ஒரு மொழியாய் இயங்கவில்லை என்னும் உண் மையை ஒப்புக்கொள்ள மலையாளிகளுள் சிலர் இன்று தயக்கங் கொள்ளுகின்றனர். இன்றும் மலையாள நாட்டு மக்களால் வழங்கப்படும் தூய தமிழ்ச் சொற்கள், மலையாளி கள், முன்னுள் வாழ்ந்த தமிழர்களுள் ஒரு பிரிவினரே யாவார் என்பதையும், மலையாளம் முன்னுள் வழங்கப்பட்ட தமிழின் ஒரு பிரிவேயாகும் என்பதையும் ஐயத்திற்கிட மின்றித் தெரிவிக்கின்றன சேரளம் என்னும் வழக்கை வேண்டுமென்றே கேரளம் எனச் சமஸ்கிருத வாணர்கள் முன்பு மாற்றிவிட்டதோடு அமைதிகொள்ளாமல், கேரம் (கேரம் = தேங்காய்) அளம் (அளம் = விளையுமிடம்) என்னும் வழக்குளே கேரளம் என்று மாறிவிட்டன எனப் புதிய பொருள் கூறி-விளக்கந்தந்து-மறைமுகமாகவே குதர்க்க வாதம் புரிகின்றனர், என்ருலும், அவர்கள், மொழி ஆராய்ச்சி அறிவு மிகுந்துள்ள இந்தக் காலத்தில் தமிழ் மொழியே திரிந்து மலையாளமாயிற்று என்பதை வெளிப் படையாக மறுக்க இயலாது இடர்ப்படுகின்றனர். இன் றுள்ள கேரளநாடு அன்றைய தமிழ்நாட்டின் ஒரு பகுதியே — சேரநாடே — ஆகும் (அங்கு வழங்கப்பெற்ற மொழி தமிழே ஆகும்) என்பதைக் குறிப்பாகப் புறநானூற் றுப் பாடல் ஒன்று வாயிலாகவும், தொல்காப்பியப் பாயிரம் வாயிலாகவும் அறிந்துகொள்ள இயலுகின்றது.

இன்றைய இந்தியா முழுவதும் அன்றைய தமிழ் நாடாய்த் திகழ்ந்தது எனப் புறப்பாடலும் (குறிப்பாக உணர்த்துகிறது), வடவேங்கடம் வரை தமிழ் நாடாய்த் திகழ்ந்தது எனச் சிறப்புப் பாயிரமும் குறிப்பிடுவதை

நோக்குங்கால், தமிழ்நாடு காலப்போக்கில் சுருங்கி (Madras Province–பகுதியும் பிளக்கப்பட்டு) இன்றுள்ள நிலைக்கு வந்துள்ளது என்பதை நன்ருக உணர்ந்து கொள்ளலாம்.

செய்யுள் பகுதிகள்,

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்குங்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"
[புறநானூறு, 6]

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்"
[தொல். சிறப்புப்பாயிரம்]

என்பனவாகும்.

அன்றியும், பிளினி என்பவரால் குறிப்பிடப்பட்ட செலிப்ரூத்ரம்' (Celebrothras), தாலமி என்பவரால் குறிப்பிடப்பட்ட 'கெரோப்ரூத்ரம்' (Kerobrothras) என்னும் வழக்குகள் சேர நாட்டையே--தமிழ்நாட்டின் ஒரு பகுதியையே–குறிப்பிடுகின்றன. செந்தமிழே கொடுமலையாளமாகவும், பின்னர் மலையாளமாகவும் மாற்றி வழங்கப் பட்டு வந்துள்ளது என்னும் உண்மையைச் சான்றுகள் (விளக்கங்கள்) வாயிலாக நாம் அறிந்துகொள்ளுவதே பயனுடைய செயலாம்.

சான்றுகள் :

மலையாளம் தமிழினின்றே பிரிந்துசென்று இடைக் காலத்திற்குப் பிறகே ஒரு தனி மொழியாய் வளர்ச்சி யடைந்து இன்றுள்ள நிலையில் வழங்கப்படுகிறது என்னும் உண்மையை, மலையாள நாட்டைச் சேர்ந்த சான்றோர் பலர் (K. P. பத்மநாபமேனன், T. K. கோபால பணிக்கர், K. இராமபிஷாரோடி போன்றவர் அனைவரும்) தம் நூல்கள் வாயிலாகக் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். வேறு சிலர், "மளையாளம் தமிழுக்குக் கடன் பட்ட மொழியாயினும், அது தமிழினின்று பிரிந்ததன்று;–பரசுராமர் (புராண

இதிகாசங்களில் குறிப்பிடப்படுபவர்) காலத்திலிருந்தே தனி ஒரு மொழியாய் வழங்கப்பட்டு வந்துள்ளது", எனக் கூறி மனவமைதி பெறுகின்றனர். ஆனால், இத்தகையோர் (மலையாளம் தனி மொழியே—தமிழினின்று பிரிந்தது அன்று என்போர்), தமிழிலக்கியங்களில் குறிப்பிடப்படும் சேர நாட்டு மக்களைப் பற்றிய குறிப்புகளையோ, அவர்களுடைய மொழியாய் முன்பு விளங்கிய தமிழ் மொழியைப் பற்றிய குறிப்புகளையோ மேற்கோள்களாகக் காட்டி விளக்கந்தர மற்றவர்கள் முன்வந்தால் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். நாட்டிலே (இன்றைய கேரளம்) தமிழர் வாழ்ந்த பொழுது மலையாள மொழி எந்த இனத்தவரால் (மலையாளிகளாலா?) எவ்வளவு காலத்திற்கு முன்பு வழங்கப்பட்டது என்பதைத் தெளிவாக இத்தகையோர் விளக்கிக் கூறுவதில்லை. ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வரை மலையாளமொழி ஒரு தனிமொழியாகத் திகழவில்லை என்பதைச் சரித்திரச் செய்திகளின் துணைகொண்டு வரையறுத்துக் கூறுவது எளிய செயலாம் இவ்வாறு உண்மையைக் கூறுவது இழுக்குடைமை ஆகாது. இன்றைய கேரளநாடு முன்னைய தமிழ்நாடே—சேரநாடே—அன்றி வேறன்று என்பதையும், இன்றைய மலையாளம் முன்னாள் தமிழே அன்றி வேறன்று என்பதையும், குறிப்பாகவும் வெளிப்படையாகவும் சான்றோர்கள் காட்டியுள்ள மேற்கோள்களின் துணைகொண்டு நிறுவமுடிகின்றது. மேற்கோள்கள் வருமாறு :

(அ) "மலையாள வீடுகளில் வழங்கிவரும் சாதாரணப் பொருள்களுக்கு மலையாளத்தில் சொல்லும் பொருளும் தமிழே. மலையாளத்தோடு கலந்திருக்கும் வடமொழியை நீக்குவோமாகில், மீதியாக நிற்கும் பாஷை. அம்மை, அப்பன், ஆண், பெண், மக்கள், வீடு, சோறு, காற்று, மழை, கார், எலி, நாய், கிளி, வாழை, தெங்கு, மா முதலிய தமிழ்ச் சொற்களும், இவை போன்ற எண்ணிறந்த சொற்களும் மலையாளத்தில் வேற்றுமையின்றிப் பிரயோகிக்கப் படுகின்றனவே! 'பறைந்து, பறஞ்ஞு' என்று மலையாளிகள் சாதாரணமாகப் பேசும் சொற்களின் 'பறை' என்னும் தாது

தமிழில் 'சொல்' என்னும் பொருளைத் தருகின்றது. இப்பொருளில் 'பறை' என்பது காவிய வழக்கே தவிர உலக வழக்கன்று; "சொல்லாமல் பறையாமல்" என்று மொழித் தொடரில் மட்டிலும் அது நிலவி வருகின்றது.

தமிழ் இலக்கணத்தில் வரும் பால் விகுதி அள், அர், ஆர், மார், கள், தி முதலியனவும்; வேற்றுமையுருபு ஐ, ஆல், கு முதலியனவும் மலையாளத்தில் ஒரு பேதமும் இல்லாமல் வருகின்றனவே! 'உடைய' என்பதை 'உடே' என மாற்றினாலும், 'அவனோடு' என்பதை அவனோடு என எழுதி அவனோட என உச்சரித்தாலும் இவை தமிழுக்குப் புறம்பாமோ?" ×

(ஆ) "மலையாள நாட்டில் இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்ட சாசனங்களில் சில முழுதும் தமிழாகவும் சில தமிழ் நிறைந்ததாகவும் சில முக்காற்பாகம் தமிழாகவும், கால் பாகம் மலையாளமாகவும் மற்றுஞ் சில தனி மலையாளம் என்று சொல்லக்கூடியதாகவும் இருக்கின்றன. நாளடைவில் தமிழ்மொழி மலையாள உருவமாக ஆவது இச்சாசனங்களில் நின்றும் அவற்றின் காலங்களில் நின்றும் தெரிய வருகிறது. தமிழ்ப் பாஷை தேசபேதம் கொண்டும் மற்றும் மலையாளமாய்த் தீர்ந்ததென்றும் சிலர் கூறுவதுண்டு." +

(இ) "Malayalam was a spoken dialect of Tamil (கொடுந்தமிழ்) till the sixteenth century A. D. and then it became a cognate language because of its leanings towards Sanskrit in adopting its phonetical and morphological systems" ○

(ஈ) "காடடர்ந்த மலைகளால் செந்தமிழ் நாட்டினின்றும் பிரிபட்டுத் தன்வழியே மாறிக்கொண்டுவந்த மலை நாட்டுத் தமிழை இக்காலத்தில் மலையாளமென்று பெயரிட்டழைக்கின்றனர். மலையாள பாஷையின் மொழித்

× "திராவிடமென்றால் என்ன?" பக்கம் 22; ந. சி. கந்தையா பிள்ளை.

+ "செந்தமிழ்'," (தொகுதி. 21; பகுதி–10)—வெங்கடராம சர்மா.

○ 'Tamil language.' (Page–192)—Prof. S. Ilakkuvanar, M.A., M.O.L., P.hd.

தொகையை உற்று நோக்குங்கால் தமிழல்லாத பதங்களைக் காண்பது மிக அரிது." §

(உ) "இப்பொழுதுள்ள நிலையில், வடமொழியின் மணியம் பலவும் மலையாள மொழியில் ஏறிப் பலன் தந்துள்ள தென்றாலும் அஸ்திவாரமும் மேற்புரையும் இன்னும் தமிழ் மொழி நிலை நிறுத்தியனவே சிறப்பு விதிகள் ஒன்றும் உள்ளே சேரவில்லை மரத்தாலமைத்த சுவரை நீக்கி அங்குச் செங்கல்லை வைத்துச் சுவர் கட்டுகை, சாளரங்களை அமைத்து இருட்டையொழிக்கை இவையே வடமொழி வாணிகனுக்குத் தனது மலையாள வீட்டில் சீர்திருத்தஞ் செய்ய இயன்றன. இதனை உறுதிப்படுத்துதற்கு வேண்டு மளவு லக்ஷ்யங்கள் உள," × — எனக் கேரளப் பாணினி அவர்கள் எழுதியிருப்பது அறிதற்பாலது.

தமிழ்மொழிச் சொற்களுட் பெரும்பாலன மலையாள மொழியில் இன்று வரை சிதைக்கப்படாமலும், சில சிதைக் கப்பட்டும், வேறு பல சமஸ்கிருதக் கலப்பால் உரு மாற்றப் பட்டும் காட்சி அளிக்கின்றன. இருமொழிகளிலுமுள்ள ஒப்புமையுடைய சொற்கள், தொடர்கள் ஆகிய யாவும், தமிழினின்றும் பிரிந்ததே மலையாளம் என மேலே கூறப் பட்ட உண்மையையே – முடிவையே – வலியுறுத்துகின்றன. மலையாள மொழியில் இடம்பெற்றுள்ள தமிழ்ச் சொற்களுள் சிலவும், கதைப்பகுதி ஒன்றும், தொகுத்துக் கீழே காட்டப் பட்டுள்ளன. கதைப்பகுதி தெளிவுற அமைந்திருப்பதால் மலையாள மொழியில் மாத்திரம் தரப்பட்டுள்ளது. தமிழி னின்றும் பிரிந்து சென்ற மலையாளம் சமஸ்கிருதக் கலப் பால் சிறப்பிழந்த நிலையிலே குறிப்பிடத்தக்க அளவிற்கு மாறுபட்டு விட்டிருந்தாலுங்கூட, அது (மலையாளம்) முழுவ தும் மாறுபட்டுவிடவில்லை என்பதைக் கதைப் பகுதியே நமக்குத் தெளிவாகக் காட்டவல்லதாம். தமிழில் இன்று காணப்படும் சொற்களிலுள்ள இறுதி—கடை—எழுத்துக் களை மாற்றிவிட்டு ஒலிப்பு முறையைச் சிறிது வேறுபடுத்தி

§ 'செந்தமிழ்' (தொகுதி, 10; பகுதி-2)—து. அ. கோபிநாத ராவ்.

× 'தென்மொழிகள்' (பக்கம் 129)—வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

ஒலிக்க ஆரம்பித்துவிட்டால், அவை மலையாளச் சொற்களாகத் திகழ்வதைக் காணலாம். தமிழ்ச் சொற்களுட் பல, நாக்கிற்கு (வாய்) வேலைதர, அச்சொற்களே மலையாள மொழியிலே வழங்கப்படும்பொழுது மூக்கிற்கே வேலை தருவதைக் காணவும் கேட்கவும் இயலும். மலையாள மொழியில் இடம் பெற்றுவிட்ட இத்தகைய மாற்றங்களோ—வேறுபாடுகளோ—அன்றித்திரிபுகளோ, தெளிவான ஒரு முடிவையே நாம் வலியுறுத்த, அதாவது தமிழே மலையாளமாக மாற்றப்பட்டது என்னுங் கொள்கையை நிலைநாட்டத் துணைசெய்கின்றன. சொற்களும் தொடர்களும் பழமொழிகளும் கதைப் பகுதியும் வருமாறு:

சொற்கள்:

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| எருக்கு | எரிக்கு |
| கொக்கு | கொக்கு |
| கஞ்சி (ஜி) | கஞ்ஞி |
| குடம் | குடம் |
| குண்டு | குண்டு (Kuntu) |
| சாந்து(சந்தனம்) | சாந்து |
| துவரை | துவரா |
| நீர் | நீர் |
| வெருகு (பூனை) | வெருகு |
| மயில் (மஞ்ஞை) | மயில் (மஞ்ஞா) |
| மகள் | மகள் |
| மாலை | மால |
| முகடு | முகடு |
| முத்து (முத்தம்) | முத்து |
| முருங்கை | முரின்ன |
| வள்ளி (வள்ளிக்கொடி) | வள்ளி |
| எருமை | எரிமா |
| உடுக்கை | உடுக்கா |
| ஒன்று | ஒன்னு |
| குன்று | குன்னு |
| அன்று | அன்னு |
| மருந்து | மருந்து |
| விருந்து | விருந்து |

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| சந்தனம் | சந்நநம் |
| மாங்காய் | மாங்ஙா |
| நீங்கள் (முன்னிலை) | நிங்ஙள் |
| குரங்கு | குரங்ஙு |
| மங்கலம் | மங்ஙலம் |
| மஞ்சு | மஞ்ஞு |
| அறிந்து (வினை) | அறிஞ்சு, அறிஞ்ஞு |
| தேய்ந்து ,, | தேய்ஞ்சு, தேஞ்ஞு |
| அடித்து ,, | அடிச்சு |
| குடித்து ,, | குடிச்சு |
| மலை | மல |
| தலை | தல |
| வாழை | வாழ |
| தேங்காய் | தேங்ஙா |
| நின்னை | நின்னே |
| நாணல் | ஞாணல் |
| நாவல் | ஞாவல் |
| நெருங்கு | ஞெருங்ஙு |
| நாங்கள் | ஞங்ஙள் |
| நான் | ஞான் |
| இவை(கள்) | இவகள் |

**வழக்காறுகள் :**

| | | | |
|---|---|---|---|
| இறப்பேன் | இறக்கு | புலம்பியது | பிலம்பின்னு |
| என்பான் | என்றி | பெரிதாகி நின்றது | பெரிதாகின்னு |
| காண்பாய் | காண்டி | முன்னின்றது | முன்னின்று |
| செய்குவேன் | செய்கு | ஆகின்றது | ஆகின்று |
| நின்றது | நின்று | வாழ்வாயாக | வாழி, வாழியர் |
| நோகுவேன் | நோகு | | |

குறிப்பு:— [வினையெச்சம் போல் மலையாள மொழியில் காணப்படுவது, தமிழ்வினை முற்றின் உருவமே என்பதும், எச்சவடிவில் முற்றுப்பொருள் உளதென்பதும் உணர்ந்தால், மலையாள மொழியில் பால் விகற்பங்கள் பெருகுவதற்கு இடமே இல்லை என்பது தெளிவு.]

பழமொழிகள்: (மலையாளம்)

அகத்திட்டால் புறத்தறியாம்.
அரி (அரிசி) எறிஞ்ஞால் ஆயிரம் காக்க.
அளவு கடன்னால் அம்ருதும் நஞ்சு.
ஆகும் காலம் செய்தது சாகும் காலம் காணும்.
ஆயிரம் மாகாணி அறுபத்திரண்டா.
இக்கரனின்னு நோக்கும்போள் அக்கர பச்ச.
இரிம்பூர கல்லும் தேயும்.
ஈர் எடுத்தால் பேன் கூலியோ ?
கடலில் காயம் கலக்கியது போலெ.
காமத்தின்னு கண்ணில்ல.
காற்றுள்ளபோள் தூற்றணும்.
கார்யத்தின்னு கழுத காலும் பிடிக்கேணம்.
குரங்ஙின்றே கையில் பூமால கிட்டியது போலெ.
குரக்குன்ன நாயி கடிக்கயில்ல.
கோடதே காணி கொடுத்தால் கோடி கொடுத்த பலம்.
தரமே கொய்தவன் ஏறே சுமக்கேணம்.
தீயில்லாதெ புகயுண்டாக யில்ல.
நரி நரெச்சாலும் கடுக்கும்.
நிலாவினெ நோக்கி நாயி குரக்கும் போலெ.
பலதுளி பெருவெள்ளம்.

மரத்தின்னு காயி கனமோ?
மருன்னும் விருன்னும் மூன்று நாள்.
மலான்னு கிடன்னு துப்பியால் மாறத்துவிழும்.
மீங்கண்டம் வேண்டாத பூச்ச யில்ல.
ரண்டு தோணியில் கால் வெச்சுது போல.*

### ஒரு கதை

(மலையாள மொழியில் கூறப்படுமாறே)

"ஒரு அக்ரஹாரத்தில் ஒரு பிராமணன் பார்த்திருன்னு, அவன்னு மகன் ஒன்னே உண்டாயிருன்னு. ஒரு நாள் அவன் ஒரு வழிக்கு யாத்ர புறப்பெட்டு, மகனெயும் கூட்டிக்கொண்டு போயி வழியில் வெச்சு ஆ செறுக்கன் அச்செனெ விளிச்சு, 'அய்யோ! புலி வருன்னு' என்னு உறக்கே நில விளிச்சு. அச்சன் திரிஞ்னு நோக்கியபோள் புலியெ கண்டில்ல. அவர் பின்னேயும் குறய தூரம் போயபோள் வாஸ்தவத்தில் ஒரு புலி வன்னு செறுக்கனெ பிடிச்சு. ஆ செறுக்கன் வீண்டும் அச்செனெ விளிச்சு. தன்றே மகன் மும்போ பொலெ களிவாக்க பறயுன்னு என்னு விசாரிச்சு திரிஞ்னு நோக்கியில்ல புலி செறுக்கெனெ கொன்னு தின்னு."○

### கேரள நாட்டு ஊர்ப்பெயர்கள்:

"மலையாளத்திலுள்ள பழைமையான ஊர்ப் பெயர்களெல்லாம் இன்றும் தனித்தமிழாகவே இருக்கின்றன. கோடு (கோழிக்கோடு–Calicut), சேரி (தலைச்சேரி), குளம் (எர்ணாக்குளம்), புரம் (அங்காடிபுரம்), நாடு (வலைய நாடு), ஊர் (கண்ணனூர்), குன்றம் (பூங்குன்னம்), கா (கன்னங்காவு), காடு (பாலைக்காடு–Palghat), குடி (சாக்குடி), வாசல் (பள்ளிவாசல்), அங்காடு (பரப்பனங்காடி), தோட்டம், பாடி, துறை (திருப்புணித்துறை), குறிச்சி, ஏரி, கரை (கொட்டாரக்கரை), களம் (திருவஞ்சைக்களம்), இருப்பு முதலியன தனித்தமிழ் ஊர்ப்பெயரீறுகளாம். கோடு = மலை; கா = சோலை

* 'திராவிடத்தாய்;' பக்கம் 54, 55; திரு. ஞா. தேவநேயன், எம்.ஏ.

○ "திராவிடத்தாய்," பக்கம் 55;—திரு. ஞா. தேவநேயன், எம்.ஏ.

பழஞ் சேரநாட்டின் கீழ்ப்பகுதியின் தென்பாகம் (கொங்குநாடு) இன்றும் தமிழ் நாடாயிருக்கின்றது; வட பாகத்திற் கன்னடம் புகுந்துள்ளது."†

மலையாள நாட்டில் காணப்படும் ஊர்ப்பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்களாகவே விளங்குவதைக் காணலாம். அந்த நாடு தமிழ்நாட்டின் ஒரு பதியாக விளங்கியது என்பதையும், அங்கு வழங்கப்பட்ட மொழி தமிழ் என்பதையும் இன்று தெளிவாகக் கூறமுடிகிறது. ஊர்ப் பெயர்களின் துணைகொண்டு மலையாள மொழி தமிழ் மொழியின் ஒரு பிரிவே ஆகும் என்பதையும் தெளிவாக விளக்க முடிகிறது. ஊர்ப் பெயர்களாவன:

"அடிமலி, அடூர், ஆலப்புழை, ஆலவாய், ஏட்டுமானூர், ஒத்தப்பாலம், ஒலவக்கோடு, கண்ணனூர், களமசேரி, காஞ்சிக்கோடு, காஞ்சிரப்பள்ளி, காயங்குளம், குன்னங்குளம், கொடுவாயூர், கொட்டாரக்கரை, கொல்லங்கோடு, கோழிக்கோடு, சாலக்குடி, சித்தூர், செங்கனூர், சேர்த்தலை, தலைச்சேரி, திருச்சூர், திருப்புணித்துறை, திருவனந்தபுரம், தொடுபுழை, பாலக்காடு, பீர்மேடு, புனலூர், பெரும்பாவூர், மஞ்சேரி, மாவேலிக்கரை, மூணாறு, மூவாத்துப்புழை, மேப்பாடி, வடக்காஞ்சேரி, வண்டிப்-பெரியாறு, வடசேரி, வடிவீசுவரம், தேரூர், மருங்கூர், புறக்கை, தெங்கம்புதூர்."

மலையாள நாட்டில் காணக் கிடைக்கும் கல்வெட்டுக்களிலே இடம் பெற்றுள்ள தொடர்களும் அவற்றால் உணர்த்தப்படும் செய்திகளும், தமிழ்த் தொடர்களாகவும் செய்திகளாகவுமே ஒலிக்கப்பட்டும், படிக்கப்பட்டும் வருகின்றன. கல்வெட்டுக்களிலே பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களோ, மலையாள மொழிச் சொற்கள் (வரி வடிவம்-எழுத்து வடிவம்-மாத்திரம் தமிழினின்றும் மாறுபட்டுள்ளது) அத்தகைய சொற்களைத் தமிழ்ச் சொற்களின் ஒலிப்பு முறைப்படியே இன்றளவும் ஒலிக்க அல்லது படித்தாக வேண்டியுள்ளது. வேறு முறையில் மாற்றிப் படிக்க

† — "திராவிடத்தாய்", பக்கம் 38.

வழியில்லை—இயலவில்லை. எழுத்து முறை (வரி வடிவம்) மலையாளமாகவும் ஒலிப்புமுறை தமிழாகவும் உள்ள நிலையைக் கூர்ந்து நோக்கும்பொழுது, மலையாளம் தமிழின் மாறுபட்ட வடிவமேயன்றி வேறன்று எனக் கூறுவதை எவ்வாறு மறுக்க இயலும்? இயலாது. மலையாள நாட்டு மக்களிடையே இன்று வழக்கிலுள்ள 'மருமக்கள் தாய முறை' (பழக்க வழக்கங்களுள் ஒன்று) தமிழர்களுக்குப் புதிய முறையன்று என்பதும், தமிழர்கள் நெடுங்காலமாகப் பின்பற்றி வந்த ஒரு முறையேயாகும் என்பதும் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் தரும் விளக்கத்தால் தெளிவாகின்றன. சேரர்—தமிழர்களுள் ஒரு பிரிவினர்—வாணிகத்தின் மூலம் பெரும் பொருள் ஈட்டிப் புகழ்பட வாழ்ந்தவர் என்பதையும், மேலைக் கடற்கரைத் துறைமுகப் பட்டினங்களின் பெயர்கள் (இலக்கியத்தில் குறிப்பிடப் படுவனவாகிய முசிறி, தொண்டி முதலியன) யாவும் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன என்பதையும் எவரும் மறுத்தற்கில்லை. எனவே, சேரநாடு தமிழ்நாடே என்பதும், மலையாளம் (திரிபு அடைந்த நிலையிலும்) தமிழே என்பதும் தெளிவாகின்றன.

**விளக்கங்கள்:**

பிள்ளைப்பேற்றின்போது எழுதிவிட்ட ஓலை:

(மேற்கோள்)

"எண்ணூற்றுத் தொண்ணூற்று ஒன்பதாமாண்டு கற்கடக மாதம் அஞ்சாந்தெயிதி நாயருட்சையும் கார்த்திகையும் அபரபக்கிழத்து ஏகாதேசியும் அந்நு சிங்ங மிராசி கொண்டு குஞ்சு உண்ணி பிரமிக்கெயும் செயிது எந்நும் இச்செயிதி சொல்லி தென்வீதி நாடமைந்த பேர்களுக்கு நீட்டு எழுதி விடுக எந்நு திருவுள்ளமாயது நீட்டு."*

மருமக்கள் தாயமுறை (விளக்கம்)

"தற்போது தமிழகத்தே மேல்புலத்தில் வழங்கி வரும் மருமக்கள் தாயமுறை புதிதொன்றில்லை என்பதும்

* 'சேரநாடும் செந்தமிழும்', பக்கம் 163; —வித்துவான் செ. சதாசிவம்.

தொல்லைச் சங்ககாலப் பழஞ்சேரர் குடிகளிலும் அடிப்பட்ட தொல் மரபால் ஆட்சி பெற்றுத் தொன்று தொட்டே வழங்கி வருவதாய்த் தெரிகிறது என்பதுமே இவ்வாராய்ச்சியால் நாம் காணக்கிடைக்கும் பொருளாகும்."§

வாணிகவளம் (விளக்கம்)

"சேரர் ஆண்ட நாடு பொதுவில் தென்னாட்டின் மேற்குக்கரைப் பகுதியைச் சார்ந்தது. சங்க காலத்தில் இப்பகுதி குட்டநாடு, குடநாடு என்ற இரு நாடுகளாய் இருந்தது. இந்நாடு மலைவளம், ஆற்றுவளம், துறைமுக வளம் முதலிய பலவளம் பெற்றிருந்தது. பெரியாறு முதலிய ஆறுகளும் தொண்டி, முசிறி முதலிய துறைமுகங்களும் சங்க நூல்களில் மட்டுமன்றி, அக்காலத்திய பெரிபிளஸ் என்ற நூலிலும், பிளினி, டாலமி முதலியோர் எழுதிய நூல்களிலும் பெரிதும் போற்றப்படுகின்றன. காரவேலனுடைய ஹாத்திகும்பா கல்வெட்டிலும் இந்த முசிறித் துறைமுகம் முஷி நகரம் என்று குறிக்கப் பட்டுள்ளது "*

மலையாளிகளுடைய நாட்டு மொழியும் வீட்டு மொழியும் தமிழே:

"மலையாள மொழி தமிழ்மொழியேயாக, மலையாள இலக்கியம் தமிழ் இலக்கியமே என்பது கூறுது தெளிவாகும் ..........".

"மலையாள நாட்டிடத்து, நாட்டு மொழியும் வீட்டு மொழியும் தனித்தமிழ் என்றே அறைகூவி வெளியுலகிற்கு உணர்த்துவதாய் 'குட்டுவன்' என்னும் பெயர் குட்ட'னுகி, அந்நிலையிலேயே குடிகொண்டு, இன்றும் பொதுவுடமைப் பொருள்போன்று, பண்டைய மன்னர்களுக்கும் [(உ-ம்) எழுவுறழ்திணி தோளிய தேர்க்குட்டுவன், சேரன் வேனுதி திருக்குட்டுவன், சேரமான் குட்டுவன் கோதை, இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன், கங்கைப்பேர்

§ 'சேரர் தாயமுறை', பக்கம 94: நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்.

* "நாமிருக்கும் நாடு அல்லது தென்னிந்திய வரலாறு," பக்கம் 137;

—டாக்டர் மு. ஆரோக்கியசாமி, M.A., Phd.

யாற்றுக்கரை போகிய குட்டுவன், மறத்துறை முடித்த குட்டுவன், கடல் பிறக்கோட்டிய குட்டுவன், சேரன் செங்குட்டுவன்], இன்றை மக்கட்கும் [(உ-ம்) குஞ்சுக் குட்டன், அப்புக்குட்டன், நாணுக்குட்டன்], தனிச் சிறப்புப் பெயராய் வழக்கில் இருந்து வருகின்றது குட்டன் திரிந்ததே குட்டி (உ-ம்) வேலுக்குட்டி, மாதுக்குட்டி, பப்புக் குட்டி"†

மேலும் மேற்கோள்கள்:

நெடுங்காலத்திற்கு முன்பே மலையாளம் ஒரு தனி மொழியாய் நிலைபெற்றிருந்தது எனவும் (மலையாளம் ஒரு தனி மொழியின் தன்மையைப் பெற்றது கி பி. 13-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே என்னும் கருத்திற்கு- உண்மைக்கு—மாறாகச் சிலர் கூறுவதுமுண்டு), மலையாளத்திற்கும் தமிழிற்கும் எத்தகைய தொடர்பும் இருந்ததாகவோ அன்றி இருப்பதாகவோ கொள்ளுவதற்கில்லை எனவும், கேரளநாடு என்னும் வழக்கு (பெயர்) சேரநாட்டைக் குறிக்கப் பயன்படுவதன்று எனவும், மலையாளிகள் தமிழரின் வேறுபட்டவர் எனவும் பலவாறாகக் கூறப்படும் பொருத்தமற்ற வாதங்களும் தரப்படும் விளக்கங்களும், இருமொழிப் புலமையுடைய சான்றோர்களால் இன்று தகர்த்தெறியப்படுகின்றன. சமஸ்கிருதத்தின் மீது அளவிற்கு மீறிய காதலைக் கொண்டுவிட்ட மலையாளிகளுள் சிலரே, வேண்டாத குதர்க்க வாதங்களைப் புரிந்து இடர்ப்படுகின்றனர். மொழிநூற் புலமை-அறிவு-மிகுந்து வரும் இந்த நூற்றாண்டில் பத்தாம் பசலிக் கொள்கைகள்-மொழியைப் பற்றிய பழைய முடிவுகள்—'விளக்கங்கள்) செல்லாக் காசுகளாய் மாறிக்கொண்டே வருகின்றன. இலக்கண வரம்பை அளவுகோலாகக் கொண்டு பார்த்தாலும், மலையாள மொழியில் இயற்றப்பட்ட இலக்கண நூல்கள் (காலத்தால் முற்பட்டவை) யாவுமே தமிழ் இலக்கண முறையை (வரம்பினை) அடியொற்றிச் செய்யப்பட்ட நூல்களாகவே காட்சியளிக்கின்றன. மலையாள மொழிக்குரிய பழைய இலக்கண அமைப்பு முறையை மாற்றிச் சமஸ்கிருத

† 'செந்தமிழே கொடு மலையாளம்' பக்கம் 90, 91; க. ச. சங்கரராமன்.

இலக்கண அமைப்பு முறையைப் புகுத்தி இன்று கேரள நாட்டுப் புலவர்கள் நூல்களை இயற்றி வருகின்றனர்கள். சமஸ்கிருதத்தின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க இயலாத மலையாளம் காலப்போக்கில் மாற்றப்பட்டு இன்றுள்ள நிலையில் ஒரு கலப்பட மொழியாய்க் காட்சியளிக்கின்றது. சமஸ்கிருதத்தினின்றே மலையாளம் தோன்றி வளர்ந்தது எனப் பிறர் கருதுமளவிற்குத் தமிழ்ச் சொற்கள் பலவும் அந்த மொழியிலிருந்து மறைந்துகொண்டே வருகின்றன. தாய் மொழியாம் சமஸ்கிருதத்தின் சேய் மொழியே மலையாளம் (ஆகும்) என வெட்கப்படாமல் கூற முன்வரும் மலையாளிகள் இன்று எண்ணிக்கையில் பெருகிக்கொண்டு வருகின்றனர்கள் என்பது மிகையாகாது. இவ்வாறு அவர்கள் கூறுவது காலத்தின் கோலமே (அரசியலின் வேகமோ?) ஆகும் என்பது தெளிவு. சான்றோர்களால் கூறப்பட்டுள்ள விளக்கங்களும் மேற்கோள்களும், இத்தகையோர் (குதர்க்கவாதம் புரிவோர்) கூறும் தவறான வாதங்களையும் முடிவுகளையும் சிறப்பிழந்து போகுமாறு—பயனற்றுப் போகுமாறு—செய்துவிடுகின்றன. அவை யாவன :

1 "கொடுமலையாளமே செந்தமிழ் என்பது, தமிழ் கற்றானுக்குக் களிப்பைக் கொடுப்பதுபோல், மலையாளம் கற்றானுக்குப் களிப்பூட்டுவதாகாது. சில உதாரணங்கள் வழி இது புலனும், தமிழ் நாட்டிற்கு மறந்தனவாகக் கருதப்படும் (உண்ணான் =(தமிழ்) உண்பான்; வராறு = வருமாறு; வருவின் = வருமின் ; வருமின் = வருமின் ; வரு = வருக; வாரீர், கிட்டாமோ, ஆடாமோ, கொள்ளாமோ, கொள்ளாம் என்ற இன்னோரன்ன) வழக்குகள் பல, மலையாள மொழியில் இன்றும் காணக்கிடப்பன. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்து, இறந்துபட்ட ஒரு தமிழ் மகன், இன்று உயிர் பெற்று வந்து இப்போழ்தைய தென் ஆற்காடு, திருச்சினாப் பள்ளி, மதுரை, திருநெல்வேலி தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்து, பிறகு மலையாளம் என்று அழைக்கப்படும் நிலப்பரப்பில் தேச சஞ்சாரம் நடத்துவானாயின், தனக்கு இசைந்த நாடு மலையாளம்தான்

என்று மொழிவான். அவன் காலத்துத் தமிழ்நாடு, இக் காலத்து மலையாள நாடே என்பான்"°

2 மலையாள மொழி ஒன்றிலேயே இவ்வழக்குக் காணப்படுகிறது. 'பனியத்துப் போகருதே' 'மழையத்துப் போகருதே' என்பன போன்ற வழக்குகள் இப்பொழுதும் கேட்கப்படுகின்றன. இங்ஙனம் வழங்கும் பிரதேசத்தில் பண்டைக் காலத்தில் தமிழ் மொழியே வழங்கி வந்ததென்பதும், மிகப் பிற்பட்ட காலத்தில் இப்பிரதேசத்து மொழி தமிழின் பிராந்திய மொழியாய் மாறி, மலையாள மொழியாகப் பரிணமித்ததென்பதும் சரித்திரம் ஒப்பிய உண்மைகள்"*

இன்று மலையாளிகளால் கொண்டாடப்படும் "ஓண விழா" தமிழர்களால் பண்டைக்காலத்தே கொண்டாடப் பட்ட விழா ஆகும் என்பதையும், விழா நாளன்று அரசன் மக்களுக்குப் பெருவிருந்து அளித்தலோடு, பரிசுகளையும் வழங்குவதுண்டு என்பதையும், 'மதுரைக் காஞ்சி' என்னும் பாடல் வாயிலாக நாம் அறிந்துகொள்கின்றோம்.

3 "ஓணம் என்பது மலையாள மக்களால் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வரும் பெரிய விழா என்பது உலகறிந்ததே. இத்திருநாள் கேரள மல்லாத மற்ற தமிழகப் பகுதிகளில் பொதுவாகவும், மதுரையில் விசேட மாகவும் பண்டு கொண்டாடப்பட்டு வந்தது என்பதைத் தமிழ் முன்னூல்களால் நாம் நன்கு அறியலாம். அவற் றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சங்கச் செய்யுள், 'மதுரைக் காஞ்சி' என்பது,

இவ்விழாவை:—

"மாயோன் மேய ஓண நன்னாள்" (590) எனத் தெளிவு படுத்துவர் மாங்குடி மருதனார். .... ............ திரு வோணத்திற்கென்று நன்மக்கட்கெல்லாம் பெருவிருந்து அளித்தலை,

° 'செந்தமிழே கொடுமலையாளம்,' பக்கம் 87, 88; — க. ச. சங்கரராமன்,

* 'தமிழன் எங்கே?,' பக்கம் 45; — தென்புலோலியூர் மு கணபதிப் பிள்ளை.

"சேறும் நாற்றமும் பலவின் சுளையும்
வேறுபடக் கவினிய தேமாங் கனியும்
பல்வே றுருவிற் காயும் பழனும்
மென்பிணி யவிழ்ந்த குறுமுறி யடரும்
அமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்.........
பல் வயினுகர,"

என்று மதுரைக் காஞ்சி (527-35) வருணிக்கின்றது

"ஓண நாளில் வீரர், தலைவர், அதிகாரிகள் முதலியவர்க்கு மலைநாட்டரசர்கள் புத்தாடைகள் அளித்தலும், பின்பு அத்தாணி மண்டபத்தே பேரோலக்கமிருந்து அவர்க்கெல்லாம் காட்சியளித்து மரியாதை புரிதலும் இக்காலத்தும் பெருவழக்காய் உள்ளன. சங்க நாளிலும் ஓண விழா முடிந்த மறுநாட்காலை வீரர், தலைவர், புலவர் முதலியோரை அழைப்பித்துப் பெரியதோர் ஓலக்கக் காட்சியளித்து, அளவற்ற பரிசுகளை அவர்க்கெல்லாம் நெடுஞ்செழியன் வழங்கினனென்று தம் பாட்டிறுதியிலே மாங்குடி மருதனர் அழகாகக் கூறுதல் காணலாம். சிறப்பாக ஒப்பிடத்தக்க செய்திகளுள் இதுவும் ஒன்ருகும்."†

4. "அங்காடி, போத்து போன்ற சொற்கள் சாதாரணமாக மலையாளத்தில் எல்லா மக்களும் பயிலும் சொற்கள். ஆனல். அவை தமிழகத்தில் பயிலப்படவில்லை. இலக்கியங்களிலேயே காணப்படுகின்றன.

"வைத்தான், பிடித்தான் என்பவை வெச்சு, பிடிச்சு என்று மலையாளத்தில் வரும். சில இடங்களில் தகரம் சகரமாக மாறும். க, ச, ட, த, ப, ற என்பவற்ருேடு சேர்ந்து ங, ஞ, ண, ந, ம, ன வந்தால், வல்லினம் மெல்லினமாக மாறும். (உ-ம்) கஞ்சி — கஞ்ஞி; மாங்காய் — மாங்ஙா; குன்று — குந்நு.

† 'கட்டுரை மணிகள்,' பக்கம் 24, 31, 32; — மு. இராகவையங்கார்.

"ஆகவே, மலையாள மொழியும் தமிழ் மொழியும் இலக்கிய உருவில் செந்தமிழாகவும் பேச்சுருவில் வேறு பட்டவையாகவும் உள்ளன. இதிலிருந்து தமிழ்மொழி யானது நாளடைவில் மேற்குக்கரையில் மலை நாட்டு மொழியாக மாறுபாடடைந்தது என்று அறியலாம்.

"இந்த மாறுபாட்டுக்குப் பூகோளம், பண்பாடு, சமயம், இனம், அரசியல் போன்ற பல காரணங்கள் காணப் பெறும்."○

தமிழ் மொழியின் ஒரு பகுதியே—பிரிவே—மலையாள மாகத் திகழ்ந்தது—திகழ்கின்றது—என்னும் கருத்தினை, மலையாள மொழியில் காணப்படும் தமிழ் மொழிக்கே உரிய சில சிறப்பான எழுத்துகளையும், சொற்களின் ஒலி இயல் முறைகளையும் துணையாகக் கொண்டு வலியுறுத்திக் காட்ட லாம் 'ழ' கர 'ற' கரங்கள் தமிழுக்கே உரியவை—பிற மொழிகளில் இல்லாதவை, தென்னிந்திய மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலே 'ழ' கரம், 'ற' கரம் ஆகிய இரண்டும் காணப்படுவது அவை (மொழிகள்) யாவும் தமிழினின்று பிரிந்து சென்று வளர்ச்சி யடைந்தவைகளே ஆகும் என்னும் உண்மையை வலி யுறுத்துகின்றன இன்று, தமிழ் நீங்கலாக உள்ள பிற தென்னிந்திய மொழிகளிலே 'ழ'கரமும் 'ற'கரமும் வழக்கி லில்லை என்னும் நொண்டிச் சமாதானத்தைக் கூறி உண் மையை எவரும் மறைத்துவிட முடியாது. தாய்மொழி யினின்றும் பிரிந்து சென்ற சேய் மொழிகள் காலப்போக் கில் தங்கள் மொழிகளிலுள்ள தாய்மொழி எழுத்துக்களில் பலவற்றை இழந்துவிடுவதோடன்றி மாற்றி வேறு எழுத் துக்களாக அமைத்துக்கொள்ளுவது இயலும்—பொருந்தும்— என்பது மொழிநூல் ஆராய்ச்சி முடிவுப்படி ஏற்றுக்கொள் ளப்படவேண்டிய கருத்தேயாகும். அந்த நியதிப்படியே மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பண்டு வழங்கப்பெற்ற தெலுங்கு,

○ 'கலைக் களஞ்சியம்' (தொகுதி எட்டு),
விளக்கம். டாக்டர் எஸ். கே. நாயர், எம்.ஏ., பி.எச்.டி.,
(மலையாளத்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்.)

கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் தமிழ் எழுத்துக்களாம் 'ழ'கரமும் 'ற'கரமும் வழக்காற்றிலிருந்தன என்பதை மேற்கோள்கள், விளக்கங்கள் ஆகியவற்றின் துணை கொண்டு தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. எனவே மலையாளமும் தமிழினின்று பிரிந்துசென்று வளர்ச்சியடைந்ததோடு காலப்போக்கிலே சமஸ்கிருதக் கலப்பினுல் உருக்குலைந்தும் சிறப்பிழந்தும் (மலையாளிகளிலே சிலருக்கு இத்தகைய மாறுபாடு சிறப்புடையதாகத் தோன்றலாம்) மாறுதலுக்கு இலக்காகி இன்றுள்ள நிலையில் சமஸ்கிருத மலையாளமாகவே காட்சி தருகின்றது என்பது தெளிவு.

கீழ்க்காணும் விளக்கமும் மேற்கூறிய உண்மையை வலியுறுத்துவதாய் அமைகின்றது என்பதை எவரும் மறுத்தற்கில்லை

விளக்கம் :—

"டாக்டர் சேய்சு (Dr. Sayce) ஈவிட் (Hewitt) என்பார் கூறுவது போலக் கிறித்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே சால்டியர் கிரேக்கர், யவனர், எகிப்தியர், சிரியர், பாபிலோனியர், கோசியர், பாரசிகர் முதலிய மேனுட்டவரும் வடபுல ஆரியரும் வந்து மக்களிடையே கலந்துகொண்டதனுல் சேர நாட்டவர்களுடைய மொழியும் நடையும் உடற் கூறும் திரிந்து, தமிழ் நாட்டின் கூறு என்ற குறிப்பே தோன்ருதவாறு மாறிவிட்டன,"* என்பதாகும்.

* 'பண்டை நாளைச் சேர மன்னர்கள்'

—பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்.

# 7. பல மொழிகளில் தமிழ்ச் சொற்கள்.

## (பகுதி—I)

தென்னிந்திய மொழிகள் பலவும் வட இந்திய மொழிகள் சிலவும் தோன்றுவதற்குத் தமிழ் மொழி நிலைக் களமாய் அமைந்தது என்பதை மொழிநூல் வல்லார் இந்த நூற்ருண்டின் துவக்கத்திலிருந்தே தெளிவாகத் தெரிவித்து வந்துள்ளனர். வேறு நாடுகளில் வழங்கப் பெறும் பல மொழிகளுக்கும் தமிழ் மொழி தன்னுடைய சொற்களை வழங்கியுள்ளது. தமிழ் மொழிச் சொற்கள் வேறு பல மொழிகளில் விரவிக் கலப்பதற்கேற்ற வகையில் தமிழர்கள் மிகப் பழங் காலத்திலேயே பிற நாட்டவர் களுடன் வாணிபத் தொடர்பு கொண்டு சிறப்புற வாழ்ந்து வந்தனர். தமிழ் மொழியின் சிறப்பு, தமிழர் கண்ட வாணிப வளம்பற்றிய கருத்துக்களைப் பல்வேறு நூல் களின் வாயிலாக நாம் இன்று தெளிவுடன் அறிந்து கொள்ளுகின்ருேம். தமிழ் மொழி மிகப் பழமையுடைய தாகவும், தமிழர்கள் கடல் வாணிபஞ் செய்வதில் பண் டைக் காலத்திலேயே சிறந்தவர்களாகவும் இருந்திருந்தா லன்றித் தமிழர்களால் வழங்கப்பட்ட தமிழ்ச் சொற்கள் பலமொழிகளிலே கலந்திருக்க வாய்ப்பில்லை; அல்லது வேறு மொழிகளைப் பேசிய மக்கள் தமிழ்ச் சொற்களை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள் என்பது உறுதியா கின்றது.

மேல் நாடுகளோடு மாத்திரம் வாணிபத் தொடர்பு கொள்ளாமல் கீழ் நாடுகளோடும் வாணிபத் தொடர்பு கொண்டு தங்களுடைய நாகரிகத்தை அங்கெல்லாம் பரவச் செய்த பெருமை தமிழர்களுக்கு உண்டு. சரித்திரப் பேராசி ரியர்களால் தெரிவிக்கப் பட்டுள்ள கருத்துக்களும் தமிழ் இலக்கியப் பாடல்கள் தரும் விளக்கங்களும் மேற் கூறிய உண்மையை வலியுறுத்தப் போதுமான சான்றுகளாய்

அமைகின்றன. ஒரு இனத்தவருடைய நாகரிகச் சிறப்பை உணர்ந்து கொள்ள அந்த இனத்தவரால் வழங்கப்படும் மொழியின் பழமையே துணை செய்யவல்லதாம். இந்தக் கருத்தையே அளவு கோலாகக் கொண்டு பார்த்தாலும் தமிழர்களின் நாகரிகம் பற்றிய உண்மையை மிகத்தெளிவாக நம்மால் தெரிந்து கொள்ள முடிகின்றது. பண்டைக் காலத்தில் வாணிபத் தொடர்பு ஒன்றின் மூலமாகவே பிற நாட்டவர்களுடன் தமிழர்கள் கலந்து பழக வாய்ப்பு ஏற்பட்டு விட்டது வாணிபத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட பிற நாட்டவர்களுடன் தமிழர்கள் பழகிய பொழுது தமிழ் மொழிச் சொற்கள் பல மொழிகளிலும் இடம் பெற—நிலைக்க ஆரம்பித்துவிட்டன. எனவே பல மொழிகளில் காணப் படும் தமிழ் மொழிச் சொற்களின் துணைகொண்டே—பல மொழிகளிலும் தமிழ் மொழிச் சொற்கள் வழங்கப்படும் முறைகளை அடிப்படையாகக் கொண்டே—தமிழ் மொழியின் பழமையையும் தமிழர்களின் நாகரிகத்தையும் மிகத்தெளிவாக இன்று தெரிந்து கொள்ள முடிகின்றது.

1. துளு(வம்):

கன்னட நாட்டிற்குத் தெற்கிலிருந்த பழைய நாடான துளுவ நாட்டில் வாழ்ந்த பல இன மக்களும் துளு மொழியையே தாய் மொழியாகக் கொண்டிருந்தனர் என்பதை கால்டுவெல், Jules Bloch, ஞா. தேவநேயப் பாவாணர் போன்றோர்தம் விளக்கங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் கன்னடப் பகுதித் துறைத் தலைவர் பேராசிரியர் எம். எம். பட். அவர்கள் துளுமொழி, துளுவ நாடு பற்றிய விளக்கங்களைக் "கலைக்களஞ்சியம்" வாயிலாகத் தெரிவித்துள்ளார். தமிழ் மொழிச் சொற்கள் பல துளுமொழியில் இடம் பெற்றுள்ளன என்பதை நேரிடையாகவும் தமிழ்மொழியே துளுமொழியின் தோற்றத்திற்கு அடிப்படையாயிருந்தது என்பதைக் குறிப்பாகவும் அறிந்து கொள்ளும் வகையில் அவருடைய விளக்கம் அமைந்துள்ளது. விளக்கம் வருமாறு:

"இது இந்தியாவிலிருந்த பழைய ஐம்பத்தாறு நாடுகளுள் கன்னட நாட்டிற்குத் தெற்கிலிருந்த நாடு. இந் நாட்டிலுள்ளவர்களைத் துளுவர் என்பர்.

துளுவம் (துளு) என்பது திராவிட மொழிகளுள் ஒன்று. இது ஒரு பழமையான மொழி. இது மைசூர் இராச்சியத்தில் தென் கன்னடம் என்னும் மாவட்டத்தில் துளு நாடு என்னும் பகுதியில் வழங்குவது. இம்மொழியைத் தாய் மொழியாக உடையோர் தொகை சுமார் ஒன்றரை இலட்சமாகும் (1951). இது இப்பகுதியிலுள்ள பிராமணர், பிராமணரல்லாதார், கிறிஸ்தவர், சமணர், ஹரிஜனர் ஆகிய அனைவர்க்கும் தாய் மொழியாக இருக்கிறது.

துளுவம் மிகுந்த சொல்வள முடையது. நுண்ணிய வேறுபாடுடைய கருத்துக்களையும் வெளியிடக் கூடிய வன்மை யுடையது. நாடோடிப் பாடல்களும் கதைகளும் ஏராளமாக இதில் உள்ளன. ஆனால் இம்மொழிககு எழுத்து உண்டாகவில்லை யாதலால், நாடோடி இலக்கியத்தில் பெரும் பகுதி மறைந்து விட்டது.

சாதாரணமாக வழங்கும் துளுவச் சொற்களை* ஆய்ந்தால், அவற்றுக்கும் அவற்றின் பொருளுடைய தமிழ்மொழி சொற்களுக்கும் நெருங்கிய உறவு இருப்பது தெரியும். உதாரணமாக:

| துளு | தமிழ் | துளு | தமிழ் |
|---|---|---|---|
| அண்ணெ | அண்ணன் | பத் | பத்து |
| அக்கா | அக்கா | தரெ | தலை |
| தங்காதிரி | தங்கை | கை | கை |
| யேன் | நான் | கார் | கால் |
| அவு | அது | கண் | கண் |
| ஒஞ்சி | ஒன்று | கெவி | செவி |
| ரட்டு | இரண்டு | மூங்கு | மூக்கு |
| மூஜி | மூன்று | பரு | பல் |
| நால் | நாலு | நீர் | நீர் |
| ஐன் | ஐந்து | காலி | கால் (காற்று) |
| ஆர் | ஆறு | பாரெ | வான் |
| ஏள் | ஏழு | தின | தின் |
| எண்மொ | எட்டு | உண் | உண்" |
| ஒர்ம்பொ | ஒன்பது | | |

* (பக். 116, "கலைக்களஞ்சியம்"—தொகுதி ஆறு)

பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் துளுமொழி இன்றளவில் சந்திரகிரிக்கும் கல்யாணி நதிக்கும் இடைப் பட்ட நிலப் பகுதியில் வழங்கப்பட்டு வருகிறது என்பதை யும், அதுநெடுங்கணக்கும் இலக்கியமும் அற்ற மொழியாக விளங்குகிறது என்பதையும், இன்று தமிழினின்றும் மாறு பட்ட மொழிபோலக்காணப் பட்டாலும் அது தமிழ் மொழி யின் ஒரு பிரிவே ஆகும் என்பதையும், தமிழர்களுள் பலர் தம்மைத் துளுவ வேளாளர் என அழைத்துக் கொள்கின் றனராதலால் அவர்கள் துளுவ நாட்டினின்றும் வந்தவர் களாதல் கூடும் என்பதையும் தெளிவு படத் தம்முடைய "தமிழ் மொழி" † என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கட் பெயர், இடப்பெயர், எண்ணுப் பெயர், எண் ணடி உயர்திணைப் பெயர், பழமொழிகள் ஆகியவற்றின் துணைகொண்டு துளுவ நாட்டில் வாழ்ந்த மக்களால் தொன்று தொட்டு வழங்கப்பட்ட மொழி தமிழே ஆகும் என்பதைத் தக்க சான்றுகள் வாயிலாகத் திரு. ஞா. தேவ நேயன் அவர்கள் தெரிவித்துள்ளார். (பக்கங்கள்-103, 104, 105, 106, 109—"*திராவிடத் தாய்*" —ஞா. தேவநேயன். எம்.ஏ.) அவை வருமாறு:

மக்கட் பெயர்: ஆள், ஒண்ட்டிகெ (ஒண்டிக்காரன்), கள்வெ (கள்வன்), குசவெ (குசவன்), செம்புகுட்டி (சொம்பு கொட்டி), சோமாரி (சோம்பேறி), தோட்டி, நஞ்சுண்டெ (நஞ்சுண்டவன்), பிள்ளே (பிள்ளை), வேட்ட (வேடன்), குருக்குளு (குருக்கள்).

இடப்பெயர். அம்பில (அம்பலம்), அரு (அருகு), இடெ (இடம்), ஊட்டி (ஊற்று), கடலு, கடெ (கடை), காணி, குட்ட (குன்றம்), கொட்ய (கொட்டகை) கொட் டார, கொனெ (கொனை), சுடலெ (சுடலை) சுடுகாடு, தொளு (தொளை), தோட்ட, நடு, நாடு, பயல் (வயல்), பின்னு (விண்), கணி (கேணி), பட்ண (பட்டினம்), ஊரு (ஊர்), இல்லு (இல்), காடு.

† (Page 26) "Tamil Language" By S. Ilakkuvanar.

எண்ணுப் பெயர்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஒஞ்சி | 7 | ஏளு | 13 | பதுமூஜி |
| 2 | ரட்டு | 8 | எண்ம | 14 | பதுநாலு |
| 3 | மூஜி | 9 | ஒம்பத்து | 15 | பதுனைனு |
| 4 | நாலு | 10 | பத்து | 16 | பதுறுஜி |
| 5 | ஐனு | 11 | பத்தொஞ்சி | 17 | பதுனேளு |
| 6 | ஆஜி | 12 | பதுராடு | 18 | பதுனெண்ம |

| | | | |
|---|---|---|---|
| 50 | ஐவ | 90 | சொண்ப |
| 60 | அஜிப | 100 | நூது |
| 70 | யெள்ப | 1000 | சார |
| 80 | யெண்ப | | |

எண்ணடி உயர்திணைப் பெயர்

| தமிழ் | துளு |
|---|---|
| ஒருவன் | வொரி |
| ஒருத்தி | வொர்த்தி |
| இருவர் | இர்வெரு |
| மூவர் | மூவரு |
| நால்வர் | நால்வெரு |
| ஐவர் | ஐவெரு |
| அறுவர் | ஆஜ்வெரு |
| எழுவர் | யேள்வெரு |
| எண்மர் | யெண்ம மந்தெ |
| ஒன்பதின்மர் | வொர்ம்ப மந்தெ |
| பதினொருவர் | பத்தொஞ்சி மந்தெ |

பழமொழிகள்: உப்பு திந்திநயெ நீரு பர்வெ=உப்புத் தின்றவன் நீர் பருகுகிறான். கர்ம்பு சீபெ அந்துது பேரு முட்ட அக்கியட=கரும்பு தீவியதென்று வேர் முட்டத் தின்னக்கூடாது. கரும்பு இனிக்கிறதென்று வேரோடு தின்னலாமா? (தமிழ்). தானுகளுவ ஆண்ட ஊரு களு வெகெ=தான் கள்ளனானல் ஊருங் கள்ளனும். தான் திருடி அசலை நம்பான் (தமிழ்).

## 2. இந்தி

மலையாள மொழியைப் போன்றே இந்தி மொழியும் பிற்காலத்தில் தனி மொழியாகப் போற்றி வளர்க்கப் பட்டது. இன்று கலப்பட மொழியாக விளங்கும் இந்தி இலக்கிய இலக்கண வளங்களற்ற ஒரு மொழி. அது கதம்பமாகக் காட்சியளிக்கிறது. இன்று தேசிய மொழி யாகக் கொள்ளப்பட்டுள்ள இந்தி சமஸ்கிருதத்திலிருந்தும் உருதுவிலிருந்தும் வேறு பல மொழிகளிலிருந்தும் சொற் களைப் பெற்று வளர்ச்சியடையுமாறு கி. பி '? ஆம் நூற் ருண்டில் உருவாக்கப்பட்டதாகும். இந்தி ஒரு கலப்பட மொழியேயாகும் என்பதைக் குறிப்பாகத் தம்முடைய விளக்கத்தின் மூலம் மறைமலையடிகள் முன்னரே தெரி வித்துவிட்டுச் சென்ருர்.

"இனி இத் தென்னுடு முழுவதும், இலங்கை, பர்மா, மலாய் நாடு, தென்னுப்பிரிக்கா முதலான அயல் நாடுகளி லும் பெருந்தொகையினராய் இருக்குந் தமிழ் மக்கள் எல்லாரும் பேசுந் தமிழ்மொழி ஒரு தன்மையினதாய், இந் நாட்டவரெல்லாரும் ஒருவரோடொருவர் உரையாடி அளவளாவுதற்கிசைந்த ஒரே நிலையினதாய் வழங்கா நிற்க, வட நாட்டின்கட் பேசப்படும் இந்தி, உருது முத லான மொழிகளும் அவற்றின உட்பிரிவான பல சிறுசிறு மொழிகளும் பலப் பல மாறுதல் வாய்ந்தனவாய், ஒருவர் பேசுவது மற்றொருவர்க்குப் புலனுகாநபடி திரிபுற்றுக் கிடப்பது ஏனென்ருல், அவ்விரு வேறியல்புகளையுஞ் சிறிது விளக்குவாம்"—என்பதே அவர் தந்த விளக்கமாகும்.

தமிழ் மொழியில் காணப்படும் சுட்டுவினுப் பெயர் களேயும் இலக்கங்களையும் இந்தி மொழி ஏற்றுக்கொள் ளாது விட்டு விட்டாலும் அந்த மொழியின் அகர வரிசை தமிழ் மொழிச் சொற்களை ஆதாரமாகக் கொண்டே அமைக்கப் பட்டிருக்க வேண்டும் — உண்டாக்கப் பட்டிருக்க வேண்டும் என்று எண்ண இடமளிக்கின்றது. வரி வடிவம் மாறுபட்டிருந்தாலும் ஒலி வடிவம் மாறுபடாத நிலையில் பல

தமிழ்ச் சொற்கள் இந்தி மொழியில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. தமிழ் மொழியின் ஆற்றலைக் காட்ட— தமிழ் மொழியானது இந்தி மொழி ஏற்றுக்கொள்ளும் வண்ணம் பல சொற்களை* வழங்கியுள்ளது என்னும் உண்மையை வலியுறுத்த—கீழ்க்காணும் சொற்களின் பட்டியலே துணைசெய்ய வல்லது.

| தமிழ் | இந்தி | பொருள் (ஆங்கிலத்தில்) |
|---|---|---|
| ஆம | ஹாம் (ன்) | Yes |
| இத்தனை<br>உத்தனை | இதனு<br>உத்னு | So much |
| உம்பர் | உப்பர் | Above |
| உழுந்து | உடத் | Black gram |
| ஓரம் | ஓர் | Side |
| கடு(மை) | கட | Hard |
| கிழான் | கிசான் | Farmer |
| சவை | சபா | Chew softly |
| தண் | தண்டா | Cold |
| தாடி | தாடி | Beard |
| படு(தல்) | பட் | Fall |
| புகல் | போல் | Tell |
| படு | படா | Big |
| பூ | பூல் | Flower |
| மாமா | மாமன் | Uncle<br>Father-in-law |
| மாமி | மாமி | Mother-in-law |
| முத்து | மோதி | Pearl |
| மோட்டு | மோட்டா | Big |

3. சிங்களம்

தமிழிலிருந்தே சிங்கள மொழி தோன்றிக் காலப் போக்கில் தனி ஒரு மொழியாகப் பிரிந்து வளர்ச்சியடைந்தது எனத் தெரிவிப்போர் பலர் உண்டு. அவர்கள் அவ்வாறு தெரிவிப்பது பொருத்தமுடைய கருத்தாக அமையாது எனக் கூறி எளிதில் மறுத்துவிட முடியாத அளவிற்குத் தமிழ் மொழிச் சொற்களில் பல இன்று சிங்கள மொழி

* "Tamil Language," page-11,—By Prof. S. Ilakkuvanar

யில் ஒலி மாற்றங்களுடன் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டு அரசர்கள் ஈழத்தவரை வென்ற செய்திகளும், தமிழர்களும், சிங்களவரும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் கலந்து பழகியவர்களே ஆவர் என்ற செய்தியும், சிங்களமொழியின் தோற்றம், வளர்ச்சி பற்றிய கருத்துக்களை நாம் தெரிந்து கொள்ளத் துணை செய்வனவாம். சிங்கள மொழியின் தோற்றம் பற்றிய கருத்தைத் தெரிந்து கொள்ளக் கீழ்க்காணும் விளக்கம் பயன்படவல்லது. விளக்கம் வருமாறு:

"கடல் கொண்ட பழந்தமிழ்க் கண்டமாகிய குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாகப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் ஈழநாடுஞ் சேர்ந்து மிகப் பெரிய தமிழகமாக விளங்கியது. கடல் கோளினால் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்ட பின்னரும் இலங்கை தென்னிந்தியத் தமிழ் நாடுகள் போலத் தமிழினை வளம்படுத்தி வந்துள்ளது; தமிழ்ச் சங்கங்களை நிறுவியுளது; தமிழரசும் பெற்றிருந்தது.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த விசயன் எனும் அரச குமாரனையே தங்களுடைய முதல் அரசன் எனச் சிங்கள மக்கள் கொண்டாடுகின்றனர். அவனுடன் வந்த வீரர்களும் இயக்கர்களும் நாகர்களுந் தமிழர்களுங் கலந்து தோன்றிய சாதியினரே சிங்களராவர். இவர்களுடைய மொழியாகிய சிங்களந் தோன்றுவதற்கு முன் இலங்கையில் தமிழே வழங்கி வந்தது. சிங்கள மொழியையுந் தமிழ் வளம்படுத்தி வருகிறது. சிங்கள மொழிச் சொற்களிற் பொரும்பாலன தமிழ்ச் சொற்களே யாகும். தமிழிலிருந்தே சிங்களமொழி தோன்றியதென்றுஞ் சிலர் கருதுகின்றனர்."*

## சிங்களம்

"இதனை சிங்க-எல்லம் எனப் பிரிக்கலாம். சிங்க வம்சத்தவனாகிய கலிங்க அரசன், விசயனென்பான் இலங்கையை ஆளத் தொடங்கிய பின், முன் "எல்லாம்" என

* "இலங்கையும் இன்பத் தமிழும்" பக்கங்கள் 248, 250;
கட்டுரையாளர்: திரு. கா. பே. இரத்தினம், எம்.ஏ.பி.ஓ.எல்.
(தெ. பொ. மீ. மணிவிழா மலர்)

வழங்கிய இலங்கைத் தீவின் பெயர் சிங்க எல்லமாயிற்று. சிங்க எல்லம் பின்பு திரிந்து சிங்களம் ஆயிற்று. பின்பு நாட்டின் பெயரால் மொழியும் அறியப்பட்டது.† இச் சிங்கள மொழியும் தமிழின் திரிபே யாகும். சிங்கள மொழியில் பாலிச் சொற்களும் சமக்கிருதச் சொற்களும் பல கலந்துள்ளன. இம்மொழியின் இலக்கண அமைப்பும், வசனக் கட்டும் பிறவும் தமிழை ஒத்துள்ளன. இம் மொழியில் கி. பி 10-ஆம் நூற்றுண்டளவில் லீலாவதி என்னும் அரசி காலத்தில் முதன் முதல் சிங்கள மொழியில் இலக்கியம் எழுதப்பட்டது. இலங்கையை ஆண்ட அரசர் பெரும்பாலும் தமிழ் மரபிலுள்ளோர். சேர். பி. அருணுசலம் அவர்கள் சிங்கள அரசரின் அரண்மனே மொழி தமிழ் என ஆராய்ந்து கூறியுள்ளார்.

4. பாலி(ளி) மொழி

பாலி மொழியில் சமஸ்கிருத மொழிச் சொற்களல்லாத பிற மொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன என்றும் அவை வேறு மொழியினின்றும்—தமிழ் (அதாவது திராவிடம்) ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றும் பந்தர்க்கர் தெரிவித்துள்ள கருத்தையே தம்முடைய 'தமிழ் இந்தியா' என்னும் நூலில் ந. சி. கந்தையா பிள்ளே அவர்கள் மேற்கோளாக எடுத்துக்காட்டியுள்ளார். அவர் மேலே கூறப்பட்டுள்ள கருத்தை ஏற்றுக்கொள்ளுகிருர் என்பது இதஞல் தெளிவாகின்றது.

பந்தர்க்கர் அவர்களுடைய கருத்து:—

"பாலி மொழியில் ஆரியத்துக்கில்லாத எகர ஒகரம் (குறில்கள்) இருப்பதாலும், மொழித் தொடர்பான பிற ஏதுக்களாலும் மகத நாட்டில் தமிழ் மொழி வழங்கியதென்பதும் புத்தர் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும் வெர்லாங் முதலிய ஆராய்ச்சி அறிஞரின் கருத்து"* என்பதாகும்.

† "தமிழகம்" பக்கம் 69, திரு. ந. சி. கந்தையா பிள்ளே. ந. சி. அவர்கள் கருத்து Mudaliar W. F. Gunawardhana அவர்கள் கூறிய ஆங்கிலப் பகுதியின் தமிழாக்கமேயாம்.

* Wilson's Philological Lectures, Dr. R. G. Bhandarkar. Collected works Vol. IV p. 295.

5. சிதிதியம் (மொழிகள்)

மத்திய ஆசியாவில் வழங்கப்படும் சித்திய மொழிகளில் தமிழ் மொழிச் சொற்கள் காணப்படுகின்றன என்றும், 'ழ' கரத்தை உச்சரிக்க முடியாத அந்தப் பகுதி மக்கள் 'ர' கரத்தை வழக்கிற்குக் கொண்டுவந்து விட்டனர் என்றும் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் தெரிவித்துள்ளார். விளக்கம்:

"தமிழ் நாட்டுக் கோழியைப் பற்றி அவர் (கால்டுவெல்) செய்துள்ள ஆராய்ச்சியும் அறியத்தக்கதாகும். மத்திய ஆசியாவில் வழங்கும் சித்திய மொழிகளில் கோழியைக் கோரி என்ற சொல்லாற் குறிக்கின்றார்கள். கோரி என்பது கோழி என்ற தமிழ்ச்சொல்லின் சிதைவே என்று கால்டுவெல் ஐயர் காட்டியுள்ளார். தமிழில் சிறப்பெழுத்தாக வழங்கும் ழகரம்* பிறநாட்டார் நாவில் எளிதாக நுழைவதில்லை. சோழமண்டலக் கரையைக் கோரமண்டலக் கரையாகச் சிதைத்தனர் பிறநாட்டார். தமிழகத்தைத் தமரிக்கா என்று குறித்தார் பழைய யவன ஆசிரியர் ஒருவர். இவ்வண்ணமே ஆசிய தேசத்து மொழிகளிலும் கோழி என்பது கோரி ஆயிற்று."

6. சுமேரியம்

சுமேரிய மொழி, எகிப்து நாட்டு மொழி ஆகிய மொழிகளிலும் தமிழ் மொழிச் சொற்கள் பல காணப்படுகின்றன. அவை பண்டைத் தமிழர்கள் பிற நாடுகளோடு கொண்டிருந்த வாணிபத் தொடர்பையும், தமிழ் மொழியின் பழமை ஆற்றல் முதலியவைகளையும் பற்றி அறிந்து கொள்ளத் துணை செய்கின்றன. ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள் தக்க சான்றுகளுடன் இந்த உண்மையை வலியுறுத்தியுள்ளார். எகிப்து மொழியில் தமிழ் மொழிச் சொற்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதையும் சொற்களின் பட்டியல் மூலம் தெரிந்துகொள்ள முடிகின்றது. இருமொழிகளிலும் காணப்படும் சொற்கள்:—

* "கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர்" பக்கம்-27 — ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ.,பி.எல்.

| பொருள் | சுமேரியம்* | எகிப்து | தமிழ் |
|---|---|---|---|
| ஆறு, வெள்ளம், ஓடும் நீர் | அ | அர், ஆர் | ஆறு |
| தந்தை, தலைவன், பாதுகாப்பவன் | அப், அப்பா | அப், பப்பா | அப்பன் தகப்பன் |
| ஆடு, மாடு, எருது, பசு | அப் | அபு | ஆ |
| நெருப்பு, எரிவது | அக், அங் | ஆக், ஆக்கு | ஆக்கு |
| வெள்ளி, விளங்குவது | அலக், ஆர் | அர், குர் | வெள்ளி, எல் |
| தாய் | அமா, எமி | — | அம்மா |
| கலப்பை | ஆர் | ஆர் | ஏர் |
| பிரபு, கடவுள், பாதுகாப்பவன் | ஆஸ், ஆசா | — | (அர்) அரசன் |
| பாதை, திற | பாட், பாத் | பாத் | பாதை |
| குரு | பார், பாரு | பார், ஆ | பார்ப்பான் |
| ஆறு, சிற்றாறு | பூர் | போர் | வாரி |
| பூமி, நிலம் | தர் | — | தரை |
| பிடி, கொள்ளையிடு, அழி | தாக் | தாக்கு | தாக்கு |
| வெளியே போ | எக்கி | — | ஏகு |
| ஆடை, உடை, நெசவு செய் | தர, தரி | தர் | தறி |
| எழுத்து, உளவு | தப் | — | துப்பு |

## 7. மலாய் மொழி

மலாய் மொழிச் சொற்களில் தமிழ் மொழிச் சொற்கள் பல காணப்படுகின்றன. பல மலாய் மொழிச் சொற்களின் மூலத்திற்கு-தோற்றத்திற்கு-நிலைக்களமாக அமைந்த மொழி தமிழ் மொழியே என்பதைச் சான்றுகளின் வாயிலாகத் தெரிவிக்க முடிகின்றது. தமிழ் நாட்டிற்கும் மலேயா நாட்டிற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடர்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதை மலாய் மொழிச் சொற்கள் இன்றும் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன S. J. குணசேகரம் என்னும் பெரியார் ஒருவர்

* "பழந்தமிழர்" பக்கம்–153, —ந. சி. கந்தையா பிள்ளை.
(ஆதாரம்—The Sumerio Dravidan and Hittite. Aryan Origins—T. J. O. T. M. Society.

தம்முடைய கட்டுரை வாயிலாக மேற்கூறிய உண்மையை வலியுறுத்துவதற்கேற்ற முறையில் விளக்கம்† ஒன்றைத் தெரிவித்துள்ளார்.

சொற்களில் சில கீழே காட்டப்பெற்றுள்ளன.

வண்ணான்; வகை / விதம், (திருமண) வாழ்க்கை ஒப்பந்தம், இலை, இருவர்.*

தமிழ் மொழியிலுள்ள மூலச் சொற்களே மலாய் மொழிச் சொற்கள் பலவுந் தோன்றுவதற்குக் காரணமாய் அமைந்தன என்பது மேற்காட்டிய விளக்கத்தால் தெளிவாகின்றது.

## 8 கிரைதி மொழி

"அத்தா, அன்னை முதலிய தமிழ்ச் சொற்கள் கிரைதி மொழியிற் காணப்படுவதையும், அக்கை, அக்காள் முதலிய சொற்கள் பின்னிய—உக்கிரிய (Finno–Ugrian) மொழியிற் காணப்படுதலையும் C. R. சங்கரன் என்பார் காட்டியுள்ளார்"—(Bulletin of Deccan College Research Institute (Vol. I, 1939–1950).°

தமிழ் மொழிச் சொற்கள் கிரைதி மொழியில் இடம் பெறுமளவிற்குத் தமிழர்கள் பிறநாட்டவர்களோடு தொடர்பு கொண்டு வாழ்ந்தனர் என்பது மேற்காட்டிய விளக்கத்தால் தெளிவாகின்றது.

## 9. இந்திய ஐரோப்பிய மொழிகள்

தமிழ் மொழிக்கும் இந்திய ஐரோப்பிய மொழிகளுக்கும் உள்ள தொடர்பை—சொற்கள் வழக்காற்றில் உள்ள

† "Early Tamil Cultural Influences in S. E. Asia", Page–333, S. J. Gunasegaram "Tamil Culture" (Vol. XIX P. 230) Oct–1957.

* "Several common Malay words like those for washerman, kind or sort, marriage pledge, leaf, couple, and so on, have been traced indubitably to Tamil origins, and these are some of the results of an unbroken contact throughout the centuries that follow the early period of colonisation".

○ "வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந் தமிழர்" —பக்கம்–154, க. சி. கந்தையா பிள்ளை.

உறவை—கீழ்க்காணும் விளக்கம் எடுத்துக் காட்டுகிறது. தமிழில் காணப்படும் மூலச் சொற்கள் இந்து ஐரோப்பிய மொழிகளில் நீண்ட காலத்திற்கு முன்னரே மறக்கப்பட்ட சொல் மூலங்களாகும் என ஆராய்ச்சியாளர்களும் தெரிவித்துள்ளனர்.

"இந்திய ஐரோப்பிய மொழிச் சொற்களின் மூலங்கள் பல பழந் தமிழிற் காணப்படுகின்றன என்பது, அனுமான அளவில் உள்ளதன்று; உண்மையே. இவ்வுண்மை பரந்த ஆராய்ச்சியினுல் கண்டு பிடிக்கப்பட்டது. உச்சரிப்பு ஒற்றுமை, பொருள் ஒற்றுமைகளால் மாத்திரமன்று இச்சொற்களின் ஒற்றுமை அறியப்படுவது". —வண. ஞானப் பிரகாசர்.

# பல மொழிகளில் தமிழ்ச் சொற்கள்.

(பகுதி—II)

## 10. சாவக மொழி

சாவகம் (ஜாவா), சுமத்திரா முதலிய தீவுகளில் வாழ்கின்ற மக்களும், நாகபுரியில் வாழும் ஒருவகைச் சாதியினரும், திபெத்து நாட்டில் வாழும் மக்களும் வேறு பல இனத்தவர்களும், தமிழ் மொழிச் சொற்கள் பலவற்றைத் தங்களுடைய மொழிகளில் ஏற்றுக்கொண்டுள்ளனர். தீவுகளில் வழங்கப்படும் மொழிகளுள் பல தமிழ் மொழியினின்றும் தோன்றியவைகளே என முடிவு செய்யும் அளவிற்குத் தமிழ்மொழிச் சொற்களை மிகுதியாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன. காலஞ்சென்ற ஆசிரியர் மாகறல் கார்த்திகேய முதலியார் அவர்கள், தம்முடைய 'மொழிநூல்' வாயிலாகப் பிறநாடுகளில் பேசப்படும் மொழிகளுள் பல, தமிழ்மொழியின் சிதைவுகளாகவே உள்ளன என ஆராய்ச்சி வல்லோர் கூறிய விளக்கங்களையே தம்முடைய கருத்தை வலியுறுத்துவதற்குரிய ஆதாரமாக ஏற்றுக்கொண்டு விளக்கந் தந்துள்ளார். தமிழர்கள் பல நாட்டவர்களோடு தொடர்பு கொண்டு வாழ்ந்தவராவர் என்பதையே,—

"இனிச் சாவக முதலிய ஐவகைத் தீவிலுள்ள மொழிகளிலும், இமயமலைச் சார்பில் ஒருவகைச் சாதியார் பேசுகின்ற மொழியும், விந்திய மலையின் கிழக்கு முனையிலுள்ள சூடிய நாகபுரியில் ஒரு வகைச் சாதியார் பேசுகின்ற மொழியும், அம்மலையில் அம்பரமென்னுஞ் சிகரத்தில் (Mt. Abu) வசிப்பவர்தம் மொழியும், திபெத்து நாட்டு மொழியும், பெலுஜிஸ்டான் தேசத்தில் தவுத் புத்திர என்னுஞ் சாதியார் பேசுகின்ற மொழியும், ஐரோப்பாக் கண்டத்துள்

ஆஸ்டிரியா நாட்டு மொழியும் பிறவும், தமிழின் சிதை வெனச் சரிதவாராய்ச்சியில் வல்ல பெரியோர் கூறுவார். தவத் புத்திர என்பது திராவிடபுத்ர என்பதன் சிதைவு,*" என்னும் விளக்கம் வலியுறுத்துகின்றது.

## 11. மராட்டி

தமிழ்மொழிச் சொற்களில் பல மராட்டி மொழியி லும் கலந்து காணப்படுகின்றன. தமிழர்கள் ஒரு காலத் தில் இந்தியா முழுவதையும் தம்முடைய இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்திருக்கவேண்டும் என இதனல் அறிய முடிகின்றது. வடநாட்டு மொழிகளில் காணப்படும் பல தமிழ்மொழிச் சொற்களைத் தொகுத்து அழகுறத் தேவ நேயப் பாவாணர் அவர்கள் ஒரு கட்டுரையின் வாயிலாகக் காட்டியுள்ளார்.

''வடநாடுகளில் இன்றும் தமிழ்ச் சொற்கள் வழங்கி வருகின்றன.

(எ—டு)

| தமிழ் | மராட்டி | தமிழ் | மராட்டி |
|---|---|---|---|
| தாய் | ஆயி | வில்லங்கம் | விலக |
| மாமன் | மாம | பேட்டை | பேட் |
| அலை | ஹலாவ் | சிவன் | சிவண் |
| குண்டு | குண்ட | | |

| தமிழ் | இந்தி | தமிழ் | இந்தி |
|---|---|---|---|
| ஆம் | ஹாம் | மேல் | மே |
| மாமன் | மாமா | மாறே | மாரே |
| இத்தனை | இத்னு | முட்டி | முட்டி |
| உம்பர் | உப்பர் | வெண்டை | பிண்டீ (பெண்டீ) |
| கிழான் | கிஸான் | உழுந்து | உடத் |
| பூ | பூல் | நரம்பு | நரம் |
| முத்து | மோத்தீ | சவை | சபா."† |

* "மொழி நூல்," (பக்கம்–19) மாகறல். கார்த்திகேய முதலியார்

† "புறநானூற்றுச் சொற்பொழிவுகள்," (பக்கம்–357) மொழிநூற் பகுதி (கட்டுரை), ஞா. தேவநேயனூர்.

## 12. மொகஞ்சதரோ மொழி

காலஞ் சென்ற சரித்திரப் பேராசிரியரும் தமிழர்கள் நாகரிகத்தை அறியப் பெரிதும் துணை செய்த சான்றோரு மாகிய ஹெராஸ் பாதிரியார் அவர்கள் பல ஆண்டுகள் உழைப்பிற்குப் பிறகு அரிய நூல் ஒன்றினை ("Studies in Proto-Indo-Mediterranean Culture") வெளியிட்டுவிட்டு மறைந்தார். தமிழ் மொழியின் பழமையையும் தமிழர்களுடைய நாகரிகத்தையும் அறியத் துணை செய்யும் வகையில் பல கட்டுரைகளை எழுதிய பெருமை அவருக்கு உண்டு. மொகஞ்சதரோ முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களை ஒலி முறைப்படிப் படித்துப் பார்த்தால் அவை தமிழ்ச் சொற்களாகவே விளங்குவதைக் காணமுடியும் என மிகத் தெளிவாக அவர் தெரிவித்துச் சென்றார். பாதிரியார் அவர்கள் தெரிவித்துச் சென்ற கருத்தையே தம்முடைய, "தமிழ் பழமையும் புதுமையும்" என்னும் நூலின் வாயிலாக ந. சி கந்தையா பிள்ளை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார். கருத்து வருமாறு:

"ஹெராஸ் பாதிரியார், மொகஞ்சதரோ மொழி தமிழ் என உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர் இந்திய வரலாற்று இதழில் மொகஞ்சதரோ எழுத்துக்களைப் பற்றிக் கூறியிருப்பது வருமாறு:

'யான் மொகஞ்சதரோ முத்திரைகளிற் பொறித்துள்ள எழுத்துக்களை ஒலி முறையாக வாசித்து எழுதி வைத்திருந்தேன். யான் வாசித்திருந்தவைகளை யாழ்ப்பாணம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரிடம் காட்டினேன். அவை செய்யுட்களின் பகுதிகளாயிருப்பதை அறிந்த போது, யான் எய்திய வியப்புக்கு அளவில்லை. இப்பாடல்கள் பல அமைப்பில் எழுதப்பட்டுள்ளன. அவைகளுள் ஐந்து குறள் வெண்பா அடிகளில் இயன்றுள்ளன. ஒன்றைப் படிக்க விரும்பலாம். மொகஞ்சதரோவில் காணப்பட்ட எழுத்துக்களின் ஒலி முறையான வாசிப்பு வருமாறு,—

நண் று று று தூக்கு அடு
கார் முகில் ஊர் வேலி ஒருர்
எடு எட்டு று உயர் எல் இர்
ஆர் இரி பேர் கடவுள்.'

இதன் பொருள்:- ஓர் ஊர் என்னும் ஆண்டை அடைகின்ற ஓசையிட்டு உயரச் செல்கின்ற ஞாயிற்றின் இரண்டு வழிகளையுடைய பச்சை (பயிர்) கடவுள் மழை முகில்களும் சத்தமுடைய நாட்டுக்கு வெளியேயுள்ளது "*

மேலும் ஹெராஸ் பாதிரியார் அவர்கள் தாம் எழுதிய கட்டுரை ஒன்றின் வாயிலாக மொகஞ்சதரோ எழுத்துக்களை ஒலி முறைப்படி வாசித்து அவை தமிழ்ச் சொற்களாகவும் பெயர்களாகவும் காணப்படுகின்றன என்னும் அரிய கருத்தைத் தெரிவித்துள்ளார். ஒலி முறையைக் கொண்டு வாசித்து எழுதப்பட்ட அத்தகைய சொற்களும் பெயர்களும் எளிமையை முன்னிட்டுத் தமிழ் வரிவடிவிலேயே தரப்பட்டுள்ளன. அவை தமிழின் பழமையையும் மொகஞ்சதரோ நாகரிகம் பண்டைத் தமிழர்களுடைய நாகரிகமே என்பதையும் தெளிவாக அறிந்துகொள்ளப் பெரிதும் துணை செய்கின்றன· அவை வருமாறு:

| தமிழ் ஒலி முறைப்படி† | பாதிரியார் எழுதியுள்ள முறைப்படி° | பொருள் |
|---|---|---|
| ஆறிரூர் | Arirur (City of Rivers) | ஆறுகளைக்கொண்ட ஊர் |
| ஈரூர் | Irur (Double City) | இரண்டு ஊர்கள் |
| இருபதி(டி) | Irupati (Living Village) | வாழும் ஊர் |
| கூடுமலெ | Kudumale (United Mountains) | சேர்ந்த மலைகள் |
| குடவூர் | Kudavur (City of the Water Jar) | ........................ |

* "தமிழ் பழமையும் புதுமையும்," (பக்கம்–52), த. சி. கந்தையா பிள்ளை.
† தெளிவிற்காகத் தமிழ் ஒலி முறைப்படி எழுதப்பட்டுள்ளது.
° ஹெராஸ் பாதிரியார் எழுதியுள்ள முறைப்படி வழங்கப்படும் பெயர்கள் (சொற்கள்).

| தமிழ் ஒலி முறைப்படி | பாதிரியார் எழுதியுள்ள முறைப்படி | பொருள் |
|---|---|---|
| கூடுகோப | Kudu Kopa (United Hamlets) | ஒன்றுயுள்ள குடில்கள் (அ) சிற்றூர்கள் |
| மூன்மலெ | Munmale (Three Mountains) | மூன்று மலைகள் |
| நால்மலெ | (Nalmale (Four Mountains) | நான்கு மலைகள் |
| நண்கோப | Nankopa (Friendly Hamlet) | நட்புக்குடில் |
| நண்பதி (டி) | Nanpati (Friendly Village) | நட்பு ஊர் |
| தளிர்பதி (டி) | Talirpati (Prosperous Village) | வளமுடைய ஊர் |
| உயரேழ் பலி | Uyarelpali (The city of the high Sun) | உயர் ஞாயிற்றூர்.× |

ஐயா என்னும் சொல் மொகஞ்சதரோ முத்திரைகளிலும் காணப்படுகின்றது. அங்கு அது கோயிற் குருவைக் குறிக்கின்றது. ஹெராஸ் பாதிரியார், "மீனனிர் மாறு அடு இர் ஐயன் செறி தல் தல்வ,' என மொகஞ்சதரோ முத்திரையில் பொறிக்கப்பட்டிருத்தலைக் காட்டி அதற்கு—மீனவரின் பகைவர் மறியற்படுத்தப்பட்ட அரச குரு*—என்று பொருள் எழுதியுள்ளார்.

ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மொழி வழக்காற்றிலிருந்தது என, தக்க ஆதாரங்களுடன் ஆசிரியர் ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார். கருத்து வருமாறு :

× "When new inscriptions will be unearthed, the above scanty information will be complimented and the knowledge of the people and the land of those days will eventually become complete".
—Reprinted from "Indian culture." Vol III No. 4, Page-720.
'Mohenjo Daro—The People and the Land,' By H. Heras, S. J.

* 'Minanir Maru adiray-yan sere taltalva' (the object of) the hostility of minnas is the imprisoned illustrious ruler who is a Priest.'
—'The Journal of the University of Bombay'.—July 1936; Fr. Heras.

"இற்றைக்கு ஆறுயிரம் ஆண்டுகளின் முன், தமிழ் மொழி இயல், இசை நாடகம் என்னும் மூன்று தன்மைகளையும் எய்தி, ஒலிகளை வரிவடிவிற் பொறிக்கும் எழுத்துக்களையும் பெற்று விளங்கிற்று என்பது, மொகஞ்சதரோ அரப்பா புதை பொருள் ஆராய்ச்சிக்குப்பின் நன்கு தெளிவுறுவதாயிற்று. சிலர் 6000–ஆண்டுகள் எனக் கூறுவது கற்பனைக் கூற்று என்று நினைக்கலாம். இற்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகளின் முன்னரே, இவ்வுலகத்தின் பெரும் பகுதி திருந்திய நாகரிகமும், செவ்விய ஆட்சியுமுடையதாகத் திகழ்ந்ததென ஆராய்ச்சிவல்லார் நிறுவியுள்ளார்கள்."* (Ref: 'Human Origins,' by-S. Laing)

## 13. இப்ரு–கிரேக்க மொழிகள் :

இப்ரு மொழியிலும் சில தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன. அந்த மொழியில் தமிழ்ச் சொற்கள் எவ்வாறு இடம் பெற்றன என்பதைக் காலஞ்சென்ற பேராசிரியர் சேஷ அய்யங்கார் அவர்கள் தம்முடைய 'திராவிட இந்தியா' (Dravidian India) என்னும் நூலின் வாயிலாகத் தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளார். தமிழ் நாட்டுடன் வாணிபத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு விழைந்த மேலை நாட்டவர்களுள் ஒரு பிரிவினர், தமிழ் நாட்டினின்றும் ஏற்றுமதி செய்து தங்கள் நாட்டிற்குக் கொண்டு சென்ற பொருள்களின் பெயர்களைச் சிதைக்காமல் தங்கள் மொழியிலே அமைத்துக் கொண்டனர். தமிழ் மொழியினின்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய சொற்களுக்கு ஈடான சொற்கள் அந்த மொழியில் இல்லை என்ற காரணத்தால் தமிழ் மொழிச் சொற்களும் பெயர்களும் ஒலி வடிவ மாற்றத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதைத் தெரிந்துகொள்ள முடிகின்றது. கீழ்க்காணும் விளக்கம் மேற்கூறிய உண்மையை வலியுறுத்த வல்லது. விளக்கம்,–

"சந்தனக் கட்டை, தந்தம், குரங்கு, மயில் முதலிய இந்தியப் பொருள்களைக் குறிக்க எபிரேய மொழியில்

* 'தமிழ் பழமையும் புதுமையும்', (பக்கம்–7) ந. சி. கந்தையா பிள்ளை.

வழங்கிய பெயர்கள் தமிழுக்குரியன என்று கால்டுவெல் காட்டியுள்ளார். திராவிட மொழிகளும் சுமேரிய மொழியும் ஒட்டுச் சொற்களுடையன.

தெல்லோ என்னும் பழைய நகரில் காணப்பட்ட சிற்ப மனித வடிவங்கள் தென்னிந்திய திராவிட மக்களின் வடிவை மிக ஒத்துள்ளன. எச். ஆர் ஹால், சுமேரிய மக்களின் தோற்றம் தென்னிந்திய திராவிட மக்களைப் போல இருந்ததெனக் கூறியுள்ளார். பாபிலோனியாவில் நாகரிகத்தைப் பரப்பியவர்கள் சுமேரியரா, பாபிலோனியரா என்று வரலாற்றாசிரியர்கள் பலவாறு ஆராய்ச்சி செய்வர். சாலதியர் இந்திய நாட்டினின்றும் சென்றவர்கள் என்பதை இக்கால ஆராய்ச்சியாளர் முடிவு செய்கின்றனர் அவர்கள் செமித்திய உற்பத்தியினர் என்னும் பழைய கோட்பாடு இன்று ஒத்துக்கொள்ளப்படவில்லை. அபினாஸ் சந்திர தாஸ், சாலதியர் தென்னிந்தியாவினின்றும் சென்றவர்கள் எனக் கூறியுள்ளார். பெரிய வெள்ளப் பெருக்கைப் பற்றிய கதை தென்னிந்தியாவினின்றும் மேற்கு ஆசியாவிற்குச் சென்றதென்பது எல்லாவகையிலும் ஒத்திருக்கின்றது,"* என்பதாகும்.

கிரேக்க மொழியில் கலந்துள்ள தமிழ்ச்சொற்களாவன:

| தமிழ் | கிரேக்கம் |
|---|---|
| அரிசி | Oryza |
| இஞ்சி (வேர்) | Zingiber |
| கருவா (பட்டை) | Karpion |

* வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்,' (பக்கம்-62), ந. சி. கந்தையா பிள்ளை.

குறிப்பு:— 'The Flood Legends of the East,' Prof. A. S. Vaidyanatha Ayyer, M.A., L.T., —from 'Journal of the Bombay Historical Society', Vol.–II. (ஆங்கிலப் பகுதியினின்றும் ந சி. கந்தையா பிள்ளை அவர்களால் தம்முடைய கருத்தை, விளக்க, எடுத்துக்கொள்ளப்பட்டகுறிப்பு) —மயிலினைக் குறிக்குந் 'தோகை' என்னுந் செந்தமிழ்ச்சொல் ஏபிரேய (இப்ரு) மொழியில் 'துகி' என வழங்கப்பட்டது.

தமிழ்மொழிச் சொற்கள்* எப்பொழுது, எவ்வாறு சென்று வேற்று மொழியில் இடம் பெற்றன என்பதைத் தெளிவாக ஆசிரியர் இராதா குமுட் முகர்ஜி என்பவர் விளக்கியுள்ளார்.

## 14. ஆப்கன் மொழி:

ஆப்கானிஸ்தானத்தின் ஒரு பகுதியில் 'பர்சுயி' என்னும் மொழி பேசப்படுவதாகவும், அதிற் காணப்படும் உரையாடல் பகுதி தமிழ் உரையாடல் பகுதியைப்போலவே உள்ளது என்றும், தமிழர்கள் (திராவிடர்) ஒரு காலத்தில் அங்கும் வாழ்ந்தவர்களாதல் வேண்டும் அல்லது தமிழ்மொழிச் சொற்கள் ஆப்கானியர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்க வேண்டும் என்றும், ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த டாக்டர் அப்துல்சாகீர் என்னும் பெருமகனார் (பாராளுமன்றத் தூதுக்குழுத் தலைவர்) இந்தியாவிற்கு வந்திருந்தபொழுது தெரிவித்துவிட்டுச் சென்றார். நாளிதழ் ஒன்று அந்தச் செய்தியைப் பின்வருமாறு தெரிவித்து விட்டது,—

'ஆப்கனில் தமிழ்'

"தமிழ் மொழியுடன் நெருங்கிய உறவுள்ள ஒரு மொழி ஆப்கானிஸ்தானத்தில் ஒரு பகுதியில் பேசப்படுகிறது. இந்த மொழி 'பர்சுயி' என்று அழைக்கப்படுகிறது. தமிழ் உரையாடலைப் போலவே இது இருக்கிறது, என்று இந்தியாவுக்கு வந்துள்ள ஆப்கானிஸ்தான் பாராளுமன்ற தூதுக்குழுத் தலைவர் டாக்டர் அப்துல் சாகீர் தெரிவித்துள்ளார்.

---

* "The Egyption Greeks were the principal carriers of this extensive trade in Indian commodities that sprang up under the ptolemies, and as usual this commercial intercourse has left some marks on their language. Thus the Greek names for rice (Oryza), ginger (Ziogiber) and cinnamon (Karpion) have a close correspondence with their Tamil equivalents, viz., arisi, inchiver and Karava respectively; and this identity of Greek with Tamil words clearly indicates that it was Greek merchants who conveyed these articles and their names to Europe from the Tamil land.†

"Indian Shipping," (page-121), Radhakumud Mookerji. M A,

டாக்டர் சாகீர் அப்பொழுது பேசியதாவது:- 'தமிழ் மொழியுடன் நெருங்கிய உறவுள்ள ஒரு வகை மொழி ஆப்கானிஸ்தானத்தின் ஒரு பகுதியில் பேசப்படுகிறது. தமிழ் மொழியின் உரையாடலைப் போலவே இது இருக்கிறது, மத்திய ஆசியாவில் திராவிட மக்கள் ஒரு காலத்தில் வாழ்ந்து வந்தனர் என்பதற்கு இது தலை சிறந்த எடுத்துக் காட்டாகும் ஒரு காலத்தில் தமிழ் மொழி மத்திய ஆசியாவில் பேசப்பட்டு வந்தது என்பதற்கு மேலும் பல சான்றுகள் இருக்கின்றன."*

"ஆப்கானிஸ்தான் என்னும் மகம்மதிய நாட்டில் ஒரு நகருக்கு, தமிழக் என்னும் பெயர் வழங்கி வருவதோடு அந்நகரில் குடியேறிய மகம்மதியரும் தமது பாஷையொடு தமிழையும் கலந்து பேசுகின்றார்கள் என்பர்."†

## 15. பாபிலோனிய மொழி:

பாபிலோன், பாலஸ்டின் முதலிய நாட்டு மொழிகளில் தமிழ்மொழிச் சொற்கள் கலந்துள்ளன என்றும், பிற மொழிகளில் காணப்படும் 'ஊர்' என்னும் சொல் தமிழ்ச் சொல்லேயாகும் என்றும், மேலை நாடுகளுடன் வாணிபத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு சிறப்புற வாழ்ந்த பெருமை தமிழர்களுக்கு உண்டு என்றும். காலஞ் சென்ற ஆங்கிலப் பேராசிரியர் பூர்ணலிங்கம் பிள்ளை அவர்கள் தெரிவித்துவிட்டுச் சென்றார்.

"தமிழ் நாட்டிற்கும் பாபிலோன், பாலஸ்டீன் முதலான பிற நாடுகட்கும் வணிகம் நிகழ்ந்த விவரம் ஆராய்ச்சியாளர் குறிப்புகளிற் காணலாம், மயிற்றோகை, தேக்கு என்பவற்றைப் பிற நாட்டினர் பெற்றனர் என்பதை அரசன் சாலமன் வரலாறு கூறும். முக்கிய பட்டணத்தின் பெயர் 'ஊர்' என்று முடிவதைத் தமிழ்நாட்டில் எங்கும் பார்க்கலாம். உறையூர், நாகூர், ஆக்கூர், பாவூர், கருவூர் முதலான பெயர்கள் தமிழ் நாட்டிலுள. பாபிலோனியாவிலும்

* 'தமிழ்நாடு' (நாளிதழ்), 1—1—64.

† "மொழி நூல்," (பக்கம்–16) மாகறல். கார்த்திகேய முதலியார்

இத்தகைய பெயருளது. வணிகப் போக்கு வரவு ஏற்பட்ட பின் கிரேக்கர் (யவனர்) கைதேர்ந்த தச்சர்களாகவும், மாட மாளிகை அரண்மனைகளில் காவலாளர்களாகவும் ஊழியஞ் செய்து வந்தனரென்பதை 'ஐம்பெரும் வீர வரலாறு' களில் காணலாம். பாலெஸ்டீன் தமிழ்க்குடி நாடே."

(மு. சி பூர்ணலிங்கம் பிள்ளை)

முடிவு :

தமிழர்கள் நெடுங்காலத்திற்கு முன்னரே பிற நாட்டவர்களுடன் தொடர்பு கொண்டு வாணிபத்தின் மூலம் பொருளை ஈட்டிய பெருமைக்குரியவர்களாக வாழ்ந்திருந்தனர். வேறு பல நாடுகளில் வழங்கப்படும் பிற மொழிகளிலும் தமிழ் மொழிச் சொற்களும் பெயர்களும் இன்றளவும் விரவிக் காணப்படுகின்றன. தக்க ஆதாரங்களைக் கொண்டு பிற மொழிகளில் வழங்கப்படும் அத்தகைய தமிழ்மொழிச் சொற்களைத் தொகுத்து ஒரு அகராதியைக் கூட உருவாக்கி வெளியிட்டுவிட முடியும் அந்த அளவிற்கு உலக மொழிகள் பலவற்றிலும் தமிழ் மொழிச் சொற்கள் கலந்து காணப்படுகின்றன. தமிழின் பழமையையும் தமிழர்களுடைய நாகரிகத்தையும் அறிந்துகொள்ளப் பிற மொழிகளில் காணப்படும் தமிழ் மொழிச் சொற்களே நீரூற்றுப் போல அமைந்து பயனளிக்க வல்லவை என்பது உறுதி. தமிழ் மொழிப் பற்றும், தமிழ் இலக்கிய வரலாற்றையும் தமிழர்களுடைய நாகரிகத்தையும் உலகோர் உணரச் செய்யவேண்டும் என்னும் குன்ருத ஆர்வமும், உடைய சான்ருேர்களோ அன்றிக் கற்றுத் தெளிவு பெற்ற இளைஞர்களோ தமிழ் நாட்டின் பெருமையை உலக அரங்கில் உயர்த்தப் பாடுபடும் உண்மைத் தமிழர்களாக எதிர் காலத்தில் கருதப்படுவர்—பாராட்டப் பெறுவர்.

உண்மையான தமிழ் மொழிப் பற்றுடன் ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தமிழ் இனத்தவர் நாகரிகம், தமிழ் மொழியின் பழைமை, செழுமை பற்றிய கருத்துக்களை மனங்கொள்ளுமாறு அறிவுறுத்த வேண்டும் எனக் கருதிப் பெருந்தகையாய் விளங்கிய சுவாமி விவேகானந்தர் அவர்

கள் தமிழர்களெல்லோரும் விழிப்புணர்ச்சி பெறுமாறு தூண்டிவிட்டார். அவருடைய அறிவுரை கலங்கரை விளக்கமாக அமைந்து தமிழர்களுக்கு வழிகாட்டும் என்பது உறுதி. விளக்கம் வருமாறு:

"மிகவும் புராதன நாகரிகமுடைய தமிழர்தம் வாசத்தானமே சென்னை நகரமாகும். தமிழரின் ஒரு பிரிவினர் மிகப் பழைய காலத்தில் யூபிரட்டிஸ் நதிப் பக்கங்களில் தங்களுடைய நாகரிகத்தைப் பரப்பினர். அவர்களுடைய சோதிடம், சமயம், காதல், நீதி கிரியை முதலியன அசீரிய பாபிலோனிய நாகரிகத்திற்கு அடிப்படையாயிருந்தன. அவர்களுடைய பழங்கதைகள் விவிலிய நூலுக்கு ஆதாரமாக இருந்தன. தமிழரில் இன்னொரு பிரிவினர் மலையாளக் கரை வழியாகச் சென்று நூதனமான எகிப்திய நாகரிகத்தைக் கட்டி எழுப்பினார்கள். ஆரியர் இந்தச் சாதியாருக்குப் பல வகைகளில் கடமைப்பட்டவர்களாய் இருக்கின்றனர். தென்னிந்தியாவிலுள்ள பிரம்மாண்டமான கோயில்கள் தமிழர்களின் கட்டிடம் அமைக்கும் கலைத் திறமையைத் தெரிவிக்கின்றன."*

* Quoted in 'Prabuddha Bharatha;' Sep. 1921.

# கருத்துரைகள்.

## (தமிழ்மொழி)

1. "'தமிழ்' என்ற சொல்லே 'திராவிடம்' என்று மாறிற்று என்பது இப்பொழுது யாவராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. 'திராவிடம்' என்ற சொல் பழங்காலத் துக் கால்டேய சாசனங்களில் இருக்கின்றது என்று ஆராய்ச்சியாளர் கூறுகிருர்கள். ஆகவே, கிறிஸ்துவுக்கு முன் சில ஆயிர வருஷங்களாகவேனும், தமிழ், வழக்கில் இருந்தது என்பது பெறப்படுகிறது. இதற்குச் சான்ருகவே சிந்துவெளிச் சாசனங்கள் கி. மு. 3000 ஆண்டு அளவில் தமிழ் மொழியின் ஒலிகளையேனும் படருபமாக எழுதிக் காட்டுகின்றன. ஹெராஸ் (Heras), ப்லியோசாட் (Filliozat) போன்ற ஆராய்ச்சியாளர்கள், காண்(பார்), தாண்டவன் (ஆடுவோன்), அலர் (பூ) என்ற தூய தமிழ்ச் சொற்கள் போன்றவை இந்தச் சாசனங்களில் வருகின்றன என்று கூறுகின்ருர்கள்."

"தமிழ் நாட்டு வரலாறு", (ப-5), டாக்டர் மு. ஆரோக்கியசாமி.

2. "It has become clear that quite a considerable portion of the Sanskrit vocabulary is of Dravidian origin and that this influence has operated over a long period in the history of the language."

—"The Sanskrit Language", (p-380) —Burrow.

3. "தமிழ் இந்நாட்டு மொழியே; ஆரியம் இந்தியாவிற்குள் நுழைவதற்கு முன்னர் இந்தியா முழுவதும் வழங்கிய மொழி பழந்தமிழே" என்று நிலை நாட்டுவதற்கு

'நன்னெறி முருகன்' என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சுனிதக் குமாரர் சாட்டர்சி இயற்றியுள்ள 'வங்காள மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் நூல் பெரிதும் துணைபுரிந்துள்ளது."

"பழந்தமிழ்", (ப-14), —டாக்டர் சி. இலக்குவனர்.

4. "There are a number of verbal roots and words in Sanskrit which do not appear to occur in other Indo-European languages. It is probable that at least a considerable portion of such words and bases has been borrowed from the Dravidian."

—Dr. Grierson.

5. "The three classical languages of the world namely Sanskrit, Hebrew and Greek contain Tamil words in the vocabulary."

—Rhys Davids.

6. "ஆகவே தென்னாட்டின்கண் சிறந்தொளிரா நின்ற நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயாம் என்பது திண்ணம்."

"தமிழ் வியாசங்கள்," (ப-63),
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

7. "That the roots of a large majority of Indo-European words are to be found in Ancient Tamil is not a mere theory but a fact ascertained by extensive induction."

Rev. S. Gnanapragasar.

8. "The Tamil language is extraordinary in its subtility and sense of logic. Of all the Dravidian languages Tamil is the one best fitted to be the instrument of exact thought."

"The Dravidian Element in Indian Culture", —Dr. Slater.

9 "தாய்லாந்தில் 'தமிழ்' என்ற சொல்லுக்குத் "தாய்" மக்கள் புதுப்பொருள் கொடுத்திருக்கின்றனர். 'தமிழ்' எனும் சொல்லை அவர்கள் 'தமின்' என 'ன'கர ஒலி கொடுத்து ஒலிக்கின்றனர்."

"ஒன்றே உலகம்," (ப-17), டாக்டர். தனிநாயக அடிகள்.

10. "தமிழ் மொழியானது உருவ எழுத்தாயிருந்த நிலை மாறிக் கோல் எழுத்தாக ஏற்படுவதற்குப் பன்னூரா யிரம் ஆண்டுகள் ஆயின.

உருவ எழுத்துக் காலத்தில் தமிழ் மொழியினின்றும் பிரிந்த எகுபதியம்–சீயம்–சீனம்–கடாரம் முதலிய மொழி கள் இன்றைக்கும் உருவ எழுத்துக்களாலேயே இயங்கு கின்றன."

"தமிழ்ச் சங்கங்களின் வரலாறு", (ப-47),
துடிசைகிழார் அ. சிதம்பரனார்.

11. "திராவிட மொழிகளின் பழம் பெருமைக்கும், கலப்பில்லாத தூய மொழி வளம், இலக்கிய வளம், பண் பாட்டு வளம் ஆகியவற்றுக்கும் ஒரு சேம அருங்கலச் செப்பாக விளங்குவது தமிழ் மொழியே."

"தென்னாடு", (ப–17), கா. அப்பாதுரை.

12. "வடமொழி தமிழ் நாட்டில் வெகுநாள்காறும் இயங்கியும், அதற்குத் தமிழ் மொழியைத் தன் வழியிலே திருப்பிக்கொள்ளுதற்குற்ற ஆற்றல் இல்லாது போயிற்று."

"தமிழ் மொழியின் வரலாறு", (ப–33),
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

13. "திராவிடமென்பது தமிழுக்குப் பிறிதொரு பெய ராக வழங்குகின்றது. தமிழ் ழகரத்தை உச்சரிக்க அறியாத ஆரியர் தமிழ் என்னுஞ் சொல்லைத் திராவிடம் என வழங் கினர். 'நகைச்சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறுந் தமிழுங் குருடரும் முடவரும் செல்லுஞ் செலவும்..............

போல்வன' என்னும் பேராசிரியர் உரை, ஆரியர் திருத்த முறத் தமிழ் பேச அறியார் எனப் புலப்படுத்துகின்றது."

"தமிழகம்", (ப-56), ந. சி. கந்தையா பிள்ளை.

14. "Of the languages now spoken in India, Tamil reached a high stage of development in very early times It grew uninfluenced by Sanskrit and its speakers reached a high level of culture long ago. Thus by a consideration of native Tamil Words, it is possible to construct a picture of the life of the Tamils in particular and the Indians in general more than five milleniums ago."

"The Past in The Present", (p-18), P. T. Srinivasa Iyengar.

## (தமிழர்)

1. "இந்திய நாட்டில் வேத மொழி இடம் பெறுவதன் முன், திராவிட மக்கள் பழைய சால்தியாவோடு வாணிகம் புரிந்தனர். டாக்டர் சேய்ஸ் (Dr. Sayce) என்பார், இந்தியாவுக்கும் பாபிலோனுக்குமிடையில் கி. மு. 3000 வரையில் வாணிகம் நடந்திருக்கவேண்டும் என்றும், அக்காலத்தில் ஐக்கிய பாபிலோனியாவில் ஆட்சி புரிந்த ஊர் பாகஸ் என்னும் அரசன் ஆட்சி புரிந்தானென்றும் கூறியுள்ளார்".

"திராவிடர் நாகரிகம்", (ப-20), ந. சி. கந்தையா பிள்ளை.

2. "Thus the external and internal evidence of the inscriptions of the Indus Valley shows that the inhabitants of those cities were Dravidians who spoke a Dravidian language. The Mohenjo Daro Civilization was not a civilization restricted to the Indus Valley; it was a civilization that extended all

over India and eventually we should find relics of this civilization similar to those of Mohenjo Daro, all over the Indian subcontinent".

—"Studies in Proto-Indo-Mediterranean Culture", (Vol-I; p-129) Rev. Heras.

3. "பண்டைத் தமிழருடைய ஒழுக்கம், வழக்கம், பழக்கம், கோட்பாட்டியல், குழுவியல், ஆட்சியியல் மற்றைய இயல்கள் யாவும் பழந் தொல்காப்பியத்துள் அறியக் கிடக்கின்றன".

"The Universal Tamil Phonetics", (p-2), S. Murthy And Co., Madras.

4. "The division of society among the Tamils shows that they had emerged out of savagery at a remote period, and had enjoyed an orderly, peaceful, and settled form of government for centuries. Their civilization was more ancient than that of the Aryas".

"Dravidian India", (p-125), T. R. Sesha Iyengar.

5. "ஆரியர்கள் தமிழர்களோடு உறவாடித்தான் தமிழ் இலக்கிய இலக்கணங்களை அறிந்தார்கள். ஆரியர்களுக்கு முதன் முதலில் இலக்கியம் இலக்கணம் என்றால் என்ன என்றே தெரியாது ........எழுத்துக்களை ஒலியெழுத்தென்றும் — வரியெழுத்தென்றும் பிரித்தவர்கள் தமிழர்களே".

"தமிழின் தனிச்சிறப்பு", (ப-12), மறைமலை அடிகள்.

6. "வரலாற்று நூற் காலத்திற்கு முன்னுள்ள சிதைவுப் பொருட்களைக் கண்டு பிடித்த பிரேதக் குழிகளில் ஆதித்த நல்லூரில் உள்ளவை மிகச் சிறப்புடையன. ........ஏறத்தாழ கி. மு. 2,000 முதல் 1,200 வரை உள்ள காலத்தைச் சார்ந்தன என்று நிர்ணயித்துள்ள இவற்றையே போன்ற வேலைப்பாடுடைய பல பொருட்களை பாலஸ்தீனம், சைப்பிரஸ், கிரேக்கம் என்ற நாடுகளிலுள்ள

பிரேதக் குழிகளில் கண்டு பிடிந்துள்ளனர்............ஆதித்த நல்லூர் முதுமக்கட்டாழிகள் அவ்விடத்து வாழ்ந்த தமிழ் மக்களுடையனவேயாம்; மற்றையோர் எவருடையனவும் அல்ல. புறநானூற்றில் இத்தகைய தாழிகளைப் பற்றி வரும் குறிப்புக்கள் இதை வலியுறுத்துகின்றன".

"தென் இந்திய வரலாறு", (ப-16, 17), (முதற்பகுதி)
—டாக்டர். கே. கே. பிள்ளை.

7. "We therefore conclude that the so called Mediterranean race had its origin in peninsular India which was part of the **Original Dravidian Home which was in the submerged continent** that connected South India with Africa, when the Indo-Gangetic basin had not probably been formed. So the Dravidian element is not to be found in Indian Culture alone but is largely traceable in Cretan, Aegean, Sumerian, Babylonian, Egyptian, Polynesian and other cultures of ancient world".

—'Origin and Spread of the Tamils', (pp 27-9),
Prof. V. R. R. Dikshitar.

